SACRED POETICAL WORKS OF VEN. VEDANAYAGA SASTRIAR

SERIES VIII

# வண்ண சமுத்திரம்

Mr. E. வேதபோதகம் அவர்களின்
அரும் பிரயாசையால்
அச்சிடப்பட்டது.

PRINTED AT
PAYNE & CO., MOUNT ROAD,
MADRAS.
1938




[Price As. [illegible]

# பொருள் அட்டவணை



VEN'BLE VEDANAYAGA SASTRIAR.




VEN'BLE ELIZAH SASTRIAR

Second son of

VEN'BLE SASTRIAR

who completed many of his works and who first started printing his works.



VEN'BLE NOVA GNANADICKAM SASTRIAR

*Born 13th February 1830.*

*Died 2nd December 1902.*



E. VETHABOTHAGAM

GRANDSON OF VEN, SASTRIAR,

# வண்ணச் சமுத்திரம்

## காப்பு :

எண்ணற் கரியவிறைவ னருளைத் தேர்ந்து
வண்ணச் சமுத்திரத்தில் வாழத்தவே கண்ணுற்
றருவா பரிசுத்த ரூபியென் னெஞ்சில்
வருவாய் மிகக் கிருபை வைத்து

## பொதுப்பாயிரம்

### சந்த விருத்தம்.

1. ஆதரையினோர் பரமநாடடையவே கிருபை
யாகமனுவாய் மகனேயே
யாதிவினை தீர வருளேக சருவேசுரனை
யாவன் மிகவே யுரிமையாய்
நீதமுடனே யிடைவிடாது தொழுவேனெனது
நீதிசுதனீ தியெனவே
நேயமுடனே யுரைசெய்வேனெனது மாதுயரம்
நீறுபடவே யழியுமே
போதநெறியா யுலகினாதிமுதலீறுவரை
மேவிய புராணகதையே
பூசனையினோர் முறைமையாக நவமானபுக
ழான வணமாய் மொழியவே
மாதிவிய சொரூபமுதலாய் வளர்ரூபியரின்
வான்வரமோரேழு மருள்வாய்
மானசுவிசேட சபைமேவிய மனுளன்மனு
வேலிசர வேலரசனே.

ஆ வியப்பு. அதிசயம்.

2. வாரணகடா முன்னொருபூசை நிகராவலது
வாருதியோடே ரிசரியா
வானொளிவினோடு மினியான தெதிராமலையி
னோடுசிறு தூசி நிலையா
காரண சுகீதகுயில் கூவநலிகாகமது
காகவெனு மேனிதுவலாற்

கானமயிலாட வுடனுடுபல கோழியுட
காதையது போலுமடியே
னுரணுநிதான கவிஞோர் கண்முனம் ஞானவண
மாதிசுதன் மேலதைகுவே
னுனடியனேது பிழையாவையு மெனுமலரு
ளாரெனது பாடலினமே
தாரணியிலே வளரவேயுரை செய்வீர்பரம
தாசரெனை நேமிசொலவே
சாதனைய தாயறிவின் மேன்மையதிலேவளர்
தயாபரூள மாபுலவரே.

சுகிதம், சு-நன்மை. கீதம்-இராகம்.

3. பாருலகிலே பெரிசியாவினியு மாநகர்
படாவிபவம் வீடுநிலமாள்
பாசமிகு தாதையொடு தாய்தமர்கள் சூழவளர்
பாரவுரவோர்களை யெலாஞ்
சாரமனமீது பதியாதவதி வாய்மைகொடு
சாகர மூலாவி மலையா
தாழ்மை மிகவேதமிழர் தேயமதுளாயதி
னிதா னன்மறையே யுரைசெய்தே
காரினுறையூர் திருநெல்வேலி மதுராபுரி
கலோலவெம சேதுவரையே
காரண தபோதனவிராச ரிஷியாகவளர்
காவல சுவார் சுமுனிதா
னேரின்மிகு வேதவுரை நூலருளினூரதனை
நீடுவணமா யுரைசெய்தே
னேரமிதுளான பிழையாவையு மெனுதருளு
நீதமுறு தேவசபையே.

விபவம்-செல்வம். சாகரம்-கடல். சுலோலம்-புனத்திரை

4. யேசநசராதிபதி மானிடவதார மெழு
மாயனுாமொ ராயிரமெனுா
றேறியதின் மாசிபதினேழுதின மானதனி
லேதமடராத பரனோர்
வாசகமெய் மாமறையின் ஞானவணமெ தமிழின்
வாய்மையுடனே பகர்துவேன்

வாணர் திரள்சூழ் திருநெல்வேலி யருணாசல னை
வாகம சொல்வான திருலா
னேசமிகு தேவசெயலாலரிய நீதிவழி
நேர் தெய்வசகாய னருள்சே
நீடு சுவிசேட கவிராய வேதநாயக
நிதான வபிதான வடியேன்
றேசவர் சாதிபர் வலோர்கள் குருமார்களுப
தேசிகள ஞவிகளுமே
சீர்பெருக யாவர்களும்வாழ் கவிவைபாடினது
தேவனொரு வேதசபையே.

ஆயனம்—வருடம்.

5. நீடுதவஞான கவிராயரெதிராய் வருமு
னேயமுடனே பணிகுவே
னேர்மையுடனேயுரைசெய் போழ்தின் மகிழ்வாகியவர்
நீதிநெறியே புகழுவேன்
கோடியிட ரோதிடினு மாபொறுமையாயெனது
கூர்மையுள நூலறைகுவேன்
கோபமுடனே யிழிவு கூறினு மெணேணடர்து
கோதையர்கள் மோக வெறியரற்
பாடிவரு பாவலர்கள் வீறு கொடெனுயக
பராபரனையே யிகழுவார்
பாவிகள் லோவவர் எளோடு சலியாமன் மிகு
பாரசமரே பொருதுவேன்
மூடவிருளோடவவர்கே டகலவேத மொழி
வேனுயிரோடேக விடுகேன்
மோசமலவே யவரெனேடு பொரஞாயமென
மோனமிகு தேவசபையே.

---

## 1 வண்ணம்

### கடவுள் வாழ்த்து.

1. விரு. சீருற்ற தயாபக் கடலோர்த்தனினேர் புத்திர
னர் சிற்றுருவாய் மெத்தவுமே
தேவப்பரலோகத்தினர் கீழ்சுற்றிய பூவுற்றவர்
சேரக் கவிபாடிக் கொளவே

பாருற்றுயர் மாபெத்தலை யூரிற் புறமேயுற்றனர்
பாவத் துயர் தீரத்தயவாய்ப்
பாவிக்குயிராயற்புதன் மாபட்சமோடே பற்பல
பாடுற்ற தமாயப்புறமே (அதம-கொலை)
நேருற்ற கபாலக்கிரி யூடுற்றுயிர் சோரத்திரி
நேரத் தெழலாகித்தரைமே
நேயத்துடனே பற்றிய சீடர்க்குரையே யிட்டபி
னேமத்துடனே முக்கியமாய்க்
காருற்றெழு பாதத்தினை வானச்சபை யோரர்ச்சனை
காணப்பகர் ஞானக்குருவுன்
காதைப் புகழ் போதத்துடனேதத் தமிழ் நாவைக் கொடு
கானக்கலிலேயப்பதியே.

2. தத்தனுந தனனு தனு தனு தன
தானு தனனு தனு தனு
தானத் தனத்த தன
தானத் தனத்த தனு தனு தனு
தையா தனந்தா தனு தனு
தனன தன தனன தனு தனு தனு.

1. அத்தனும்பரனே நமோ நமோ பர
மாசாரியனே நமோ நமோ
ஆதிக்கமைந்தவர நாலுக்குயர் த்திபெறும்
வேதத்தை யுற்றவனே நமோ நமோ
ஐயாவனந்தா நமோ நமோ

மிக்கவான் பொருளே ந. ந.கன
மேகாசனனே ந. ந.
வேலைக்கணித்த திக சூரத்த னத்திறெனுடு
பேயைப் பணித்தவனே ந. ந.
மெய்யே யுவந்தாய். ந. ந.

அட்செயாந்தரனே ந. ந. மிகு
மாலோசனனே ந. ந.
ஆதித்தனுக் கதிக சோதித் திருச்சுடர்வி
னோதப்பரப்பிரமா ந. ந.
அல்லாவின்மை ந்தா ந. ந.
கருணை பெருகிய கடலே நமோ நமோ

2. புத்தி கூர்ந்தவனே ந. ந. நய
பூபாலகனே ந. ந.
பூசித்தவர்க் கதீக நேயப்பரத்தின ரு
ளா மெய்த்திரித்துவமே ந. ந.
பொல்லா தகன்றாய் ந. ந.

குற்ற மீண்டவனே ந. ந. ஒரு
கோவே பதியே ந. ந.
கூடிப் பதத்திரள்கள் போதப்படித்த கலி
வாணர்க் களிப்பவனே ந. ந.
கொள்ளாவரந்தா ந. ந.

பொற்பிலோங்கினனே ந. ந. சிவ
பூசாவிதியே ந. ந.
பூதக்கணத்தை நரகோடத் துரத்தி வெலை
யூருற் றுதித்தவனே ந. ந.
பொய்யாவடிசேர் ந. ந.
தரும மறையரியவனே ந. ந.

3 வெற்றியோங்கினனே ந. ந. சொலை
மீறாதவனே ந. ந.
வேடிக்கை யிட்டவரை ஞாலத்ததிர்த்திபட
வோடத் துரத்தினனே ந. ந.
வெய்யோன் முனிந்தாய் ந. ந.

இச்சை தீர்த்தவனே ந. ந. கட
வீடானவனே ந. ந.
யேசுக்கிறிஸ்து வெனுமா சத்தியத்தின் வழி
வேதபரத் துருவே ந. ந.
எல்லாமறிந்தாயே ந. ந.

வெற்பின் மாண்டவனே ந. ந. தனி
வேதாபரனே ந. ந.
வீறிட்ட துற்கடிகள் சோதித்துரைக்கமதை
போதப்படித்தவனே ந. ந.
வெள்ளோட்டங்காய் ந. ந.
ஒருபொழுது மூகிலிலனே ந. ந.

4. பெத்தலேம் பதியா ந. ந. பல
பேரூரிலனே ந. ந.
பேதைக் கிரக்கமுடனே புத்தியைக் கருதி
யோதிச் சமைத்தவனே ந. ந.
பெய்வானுயர்ந்தாய் ந. ந:

பட்சமுண்டவனே ந. ந. வலு
பாடானவனே ந. ந.
பாவக் குணத்தினரை யார்வத்தழுத்திவிடு
மாவுக்கிரத்தினனே ந. ந. (ஆர்வம் நரகம்)
பல்லோர் பவந்தீர ந. ந.

பிக்கு நீங்கினனே ந. ந. நரர்.
பேசாவடிவே ந. ந.
பேணிப்படிப்பவர்களுவைத் திருத்தியுயர்
பேரைக்கொடுத்தவனே ந. ந.
பில்லூடெழுந்தாய் ந. ந.
பெருமை மகிமைகளுளனே ந. ந.

---

## 2 வண்ணம்

### சிறப்புப்பாயிரம்.

2. விரு. ஆதியந்த நடிலாத சுந்தரவி
நோத சம்பிரம கிருபாகரா
ஆயனெங்கள் குலதேவனென் குணதிரி
யேகனென் றொருபராபரா
நீதி தந்துமறையே விளம்பியரு
ணீடுமிங்கித மனோகரா
நேயமுந் தயவும் ஞாயமுங்கன நி
தானமுந் திகழ் நிராதரா
வாதுகொண்ட கடிசூதழிந்து கெட
வானினின்று மரிமாதுபால
மானிடன் சொரூபமாக வந்தவனே
மாதவங்க ளுடனோதுவேன்

றீது கொண்டவுல கூடழிந்து சிதை
யாதெனின் றுயர் கடீரவே
சேரநின் கிருபை கூர்வை விண்பரம
தேவமைந்தனே சுநாதனே.

2 தாத்ததனனு தன தான தானன
3 தனனத்தனன தன
தன தன தான
தான தன தான தன தன தானனு.

1. சாத்திரமுதலே கருணைகராவருள்
பாக்கிய வெளியே தவ்ஞான ரூபித
வருமைப் புகழ் பெரிய கிருபைக் கடலொருவ
ரெதிரற்றுயருமதி நெறி நிறைவான.

மோக்கிடபதியே வளர்தேவ சோதிக
டாட்சமருண் மாகுருவே சுநாதனு
னடிநித்திய நினையும வர்கட்கருடருகு
மகிமைப் பொருளுன துபெருமை யெனுலே.

சாற்றிமுடியாதொரு கோடி நாளிலு
மேற்றிமுடியா தடியேனெ வாறினி
மனதிற்றுணிவுகொடுன் வலியைப் பகர்வனவ
சவையற்புதபரமவளமை களோடு
பூசைசெயு நேர்மையுள சோதியே.

2. சாட்சி சொலுவேனு சுமீதிலேயனு
மாத்திரமுன துபிரதாப மோதுவ
னெனையுற்றிடு கொடுகலி களற்றிடவுமரு
ளுனைமுற்றினு மடைவனெனை யிகழாம
லுட்டுனடியே பணிவேனையாபல
பாட்டதனிலே புகழ்வேன தால்வளர்
பரிசுத்த ரூபியுட வரமெத்தவுமெனது
மனதிற்றருவையட மிடுதுணிவோடு

தாத்தையெனவே வகுதிபோடு கூளிகள்
மூர்க்கமுடனே தொடராமலோடும
திக நிச்சயமிடிகள் கலகத் துயரகலு
மனதிற் தெளிவுவரு மிதுகனமேன்மை
பூரண தியானமிக நானுமே.

## அவை யடக்கம்

3. தோத்திரமுடனே திரியேக சோதியை
யேத்திமறையோர் குருமார்களாரிய
ரருமைப் புரவலர்களரசு த்துரைகடிரு
வசனச்சபையனைவரையு மடிபேணி.

மேற்றிசையிலே மனுவாகவே வரு
பாத்திபாரசெனு மேசுநாதனை
மிகுவிற் பனசுகிர்த கலைவெட்டுளபல
வணசமுத்திர மிதனிலறை வனிதாலே

தூற்றியெனையே வரைகூறியேச வெரி
யோர்க்குமுனையே யிகழாமலேகரி
சனையுற்றருமை யொடுபடு சொற்பமுதுரைக
டவிரத்தயவு செயுமருள் சுவிசேட
வாசகவிசேட கவிவாணரே.

---

## நாடு

4. தோட்டமவயன் மாதளைமேவு சோலைகண்
மேட்டிமை களாயுயர்மேடைகோவில்க
ளொளிவிற் சுடர்களொரி நவரத்தின மணிகள்
கனகத்துட னிசைய வுறுதியிலேசெய்

கோட்டை யரண்மாளிகை சூழ்விளேதமு
மேட்டிலெழுதி முடியாதிதோடின
மமிர்தத் ததிகமென வருபுட்கரமிகுதி
யுள முக்கிய நதிகள் பிரளையமான.

தோப்ப தனிலோடியு மாபலாவுகன்
சீப்பதிடுவாழையினூறு தேறல்கள்
பழனதினுமவடிய நிறைவுற்றெழு பயிர்கள்
ககனத்தளவும் வளருயர் வேலூரின்
மானுவேலி ராசன் மலைமாதரார்.

---

## கன்னிமரி

5. கோத்திரவ பிராமின்மேவு யூதர்கள்
போற்றவுலகோர் கொடை நீழலேயுற
வரசுத்திறமை தொறுவிய மெய்த்தவிதரசன்
மகளுத்தமியன மினருள் கிருபாலி.

சூத்திர மொழியாள திருபகாரணி
மாற்றமணுகா நிறைஞான பூரணி
தரையுற்றுலவுபல கனிகட்கிவளதிக
மெனவற்புதனை யருண்மரியென வாய்மை.

கோர்த்தகனிமா னெழில்சேர் குமாரனை
வாழ்த்துபரம நவசேனையோர் பல
முதுமைக்குரவர் முனெழுது முற்றெறிசிகள
றிவினற்செயர் கண்முனி வரினிசையாக
வோசைவண சாகரமு ழேதவே.

---

## வேதசரிதை

6. கூட்டமிகுகோடிய ரூபர்சூழ்கவி
ழைட்டினெறியேர டரசாள் பராபரன்
மகிமைப்பிரபல சுகிர்த லட்சணவகைக
டரையைத் தருமரிய செயல்வளநீட

ஆட்சியனை யேவையினுலு மேவரு
காட்சிகளையும் மவன்மீது தாவிய
வலகைப் படமுடியின் வலுசற்பினை யழிய
வொருரட்சகர் வருசரிதைகளினேடு.

கூக்குர லுரமாயமூ தாதிமானிடர்
பாக்கியநிலை போய் வினைசூழ்கலானது
முதுமைப் புவியழிதல் பலவித்தகதெரிசி
களின்முக்கிய மொழிகள் பழையபுராண
வோதைமறை யோடுரிமை நாதனுர்.

7. பாத்திரமுடனே புவிமீதிலேமனு
வோர்க் கருளேயே தரவேவிணோர்தொழ
வுயர்பெத்தலே நகரில திகற்புடையமரி
யுதரத்தணுகி யொருமக வெனநீடு.

காட்டின்வெளி மாடடை கூடமீதுற
லாய்ப் புவியின் வானுபதேசமே சொலி
வெகுவற்புத மருளிநரர் துற்பவமகல
மநுகிக் குருசிடை கொல்கதமலேமீது
பார்க்கவலு பாடுகளாகி யேயுயிர்

போக்கியுயிரோ டெழலாய் விணேறிவி
மலர்பொற்சமூக மிசைகொலு வுற்றினியுலகை
நடுவிட்டுய வருவதையு நரர்பாவ
நாசரருளான வில்வ ஞனுமே.

---

வேதநாயக சாஸ்திரி

பூநவோத்திரம்.

8. பார்த் திருநெல்வேலியின்மீது மேவிய
பேர்க்குணயவான ருணீடு பாவல
ஞெரு மெய்க்கடவுளடி கருதிக்கவிபொழியு
முரிமைப் புலவரிருதயம் மகிழ் ஞானி

நேர்க் குவளேயே யணிமார்பன் வானதி
கோத்திர னருணசல நாமதேயன் மூன
வகைத்தமிழ் மறையின் மிகுசிஷ்டைகள் செய்துபி
னடிகட் செயலி லொருகுருவெனமேவு

பாப்புமறை மாதவன் வேதபோதகர்
தீட்சைபெறு தேவசகாயன் மீளவு
மதியுத்தம முனிவர் சுவருச்சையருரைகள்
படியத் தருகுமரனென வரும்வேத
நாயகனேயாள் பரம நாதனே.

## 3 வண்ணம்

### தேவசுவரூப மகிமை.

3. விரு. ஆதியிட்ட பவத்தை மறுத்தெனை
யாள விப்புவியுமக்குண் மனுக்குல
மாயுதித்த வனுக்கிரகக் கட
லான தற்சொரூபத்தின் மகத்துவ
நீதியிட்ட திரித்துவ வஸ்தென
நேர்மையிற் றெழுசத்திய திருச்சபை
நீடு கற்பக முற்ற தவக்கனி
நேயபுத்திர கருத்ததனுனைத் தின
மோதியிட்டு நிசத்தில் வழுத்துவ
னூழ்வினைக் கெனை முற்றுமகற்றிவை
யோலமிட்டடர் சத்துருவைச் செய
மோடழித்து வினைத்தலையைத் தகர்
சாதியிட்ட வெரிப்பை நிவர்த்திசெய்
தாமதச் செயலற் றருளைப்புரி
தாசனைக் கிருபைவைத்து நடத்தொரு
சாமி மெய்ப்பரிசுத்த கிறிஸ்துவே.

4 தன தானன தன
தன தானன

5 தந்ததன தானன
தனன தன தான தன தானன

1. பொருளாதி காரண தவஞான ரூப
வதிய நீதமோடெழு கிருபாகராவுன
தருண்மேன்மையே
யெந்த னுளநாவிலடங்க வசமோ யினி
யெந்த விதமாக வுனின் புகழை யோதுவ.

னொருகோடி காலமிவுல கூடு நீடியு
மொரு கோடி நாவுட னொழியாமலே பக
லிரவாகவே
யஞ்சல் செய்தெ நேரமிறைஞ்சி யிசைகூறினு
முன் றயவிலோரணுவுஞ் சொலவெலாதது
பொறைமேவு மாரியர் குருமார் தபோதனர்

புவிராசர் மேலவர் கவிபாடும் வாணர்க
டிரள் ஞானிமார்
பொங்கு முலகோரும்விணு ம்பரு மெலாரும் வி
ளம்பமுடியாதெென வஞ்சி நினைவாகின
னுகமையிலனாதி யொரு தேவனே.

2. கலித்துறை. சீர்கண்டரிய மறைகண்டு ஞானத்தி
றமதுகண், டேர்கண்டு யூகத் தெழில் கண்டறிவுக்கோ
ரெல்லை கண்டு, கூர்கண்டெரிபந்த நீதத்தைக் கண்
டெண்குணத்தையுங்கண்; டார்கண்டுன் முக்கியத்தைப்
பகர்வார கண்டாகண்டனே.

3. புவிமீது தேவனுன் மகனேசுநாயகர்
நரரூபமாய் மரியிடமேவி மானிடர்
பவமாறவே
பொந்தியு நியாயதிபன்றனின் முனேகன
நிந்தையுறு பாடடைந்துமர மேறி

மரணமாகியே கல்லறையினீடியே திரி
தினமீது மீளவு மெழலாகி வானுல
கதிலேறியே
யெண்டிசையுளோரு ம்வணங்க முடி சூடிய
மைந்தனுட நீதியை யெந்தனுடதாய்நெறி

புகல்வேன தாலென திருளோடு நான்மிகு
திடமாயுனாதர வதினுனு னேர்மையை
விரிவாகவே
யெங்கு மொழிவேன லவணங்கள் பலபாடி
மகிழ்ந்து பணிவே னென்முன் வந்து நலமே புரி
யுரிமை மிகும் ஞான திரியேகனே

4. கலித். மைந்தர் பவத்தையகற்ற மனுடவதாரஞ்
செய்து, பொந்திப் பிலாத்தரசன்முன் நின்று பொறுமை
யுட னிந்தைகளேற்றுக் குருசின் மரித்தவனீதியையே
யென்றனதென் றுரைப்பேனெனின் பாவத்திடர் கெடவே.

5. தெருளான மோசையினிடம் வேதமேதர
விசறேலர் சேனை வெருவியோட வானவர்
தொனி காளமோ

வந்தர மெலா மிடியுங்கு முறவேகக
னங்கள ளவாயனலும்படர ஞாலமு

மதிராகவே மறைதரு சீனமேரின்
னவமேவுயோர்தனி நதியான் விவாகமோ
ருதனுடவே
யம்பதுகளாறு குடங்கள ளவானது
கந்தரசமாய் வனையுங்கலிலே யேணியர்.

சினமாக யூதர்களுடன் வாதுகூறிய
நசரேநராதிப னழகான நீசம
றியதாகுமே
வெண்பரியதோ முகினன் கொடியதோ குரு
சன்பர் செபமாலே யனும்பர் முரசேழினன்
சகல புவியோர்க டொழுமாணையான்.

6. கலித். சீனுயிவெற் பினன் யோர்தானியாற்றினன்
சேர்கலிலேக், கானுனுதே யனசரை நகரான் கரக்கயத்தன்
வானுனமாவன் சிலுவைப்படன் செபமாலேயினன்
கோனுஞ் செழும்பணேயன் யாவும்போற்று
செங்கோலினனே

7. தெளிவான யோர்த னதியினேடு சோலே
மலர்களுடு தேனமுதமுமோடு கானனுலகின்
மீதிலே
முந்திரிகையோர் குலேயிரண்டு திறலோர்கள் கொ
ணர்ந்துவர வாய்மை சிறந்த நசராபுரி

4. மோ. 13, 23.

மதிள்வானமேவளர் வயிடூரிய மேடைக
னகவாம கோபுர மெழிலான வாலேய
முழுதாகவே
செங்கதிரதா யொளிருங்கனக பீடமி
லங்கு மணிவாயில் பளிங்கில்வனே மாளிகை

தெருவோகணுடிய தொளிவோ பளிரெனு
நவயேருசால நகர மேயிதாமென
வுலகோரெலாம்

வந்தனமோடோதுவரந்த நகராளுந்து
ரந்தர தவிதாதி பசுந்தரனுலாவிய
தடவரை சீயோனிலுறு நாரியே.

8. கலித். தெளிவான யோர்தனதி பாய்ந்தேனமுத
ங்கள் சிந்தித், தொளியான தங்குபலன் விளைவாகித
துலங்கிர்த்தின, வொளிவானம் வீசுகலிலேயநாட்
டினுயர்நசரை, வளமான திவ்விய சீயோன்மலையின்
மகாமங்கையே.

9. அருளேமெஞானிகடவ மேவிவேகவு
னதமே மகாவதிசயமே குணவிரு
தய நேயமே
கொஞ்சுகிளியேய பரஞ்சிமயிலே மயன்
மிஞ்சுமனமே பயிலுங்கைகிலமே நவ

மணியேபொனே பொனினணியே கணேவிணி
ஞெளிவே மினேகன நிதியேவரோ தய
செபமாலையே
யந்தமிகு சீவசுகந்த மலரே பர
னந்த வனமேவு மனந்த சுகமே பர

மறிவே குலாவிய புறவே மனோகர
வழகேமினார்களி லதிரூபமே திரு
வபிஷேகமே
மங்கையர் சிரோமணி மங்கள கலியாணிய
லங்கிருத சீயோனின ணங்கர சியேயுன
தகமகிமையோத வெளிதானதோ.

10. கலித். அருளே தவக்கொடியேயுயர் பேரின்ப
வானந்தமே, தெருளேயனந்த செபமாலையே திருவா
லயமே, பொருளேயெனுத்தமியே கவடற்ற புறவினமே
மருளே யகற்றிய வேதாந்த சாரமனோன்மணியே.

11. அறமேவினோர் தெரிசனமேநலோர் பெறு
வரமேயா காசுவின் மனையே சிமாசன
பிரவடகமே
மங்கள விசேட செபங்கடிரளாசிமு
ழங்குனத கீதவளங்களுடன் மேவிய

கலைஞானமே பரகதிமானமே யினி
துளதேறலே கனிரசபாகமே யிர
வியின் ரூபமாய்
வந்தமணியே தவிதின் சிகரியே சல
மன்கன கவாலையமின் கொடியுனோர் மையி

னடி தாழுமே மதியிடை மீதுபானுறு
முடிமீது தாரகை பெரிதாரோடாற தொரு
விநோதமே
யெங்கடிரியேகபரன் செயல்களானவ
னந்தவித ஞாயம் விளங்க முடியாதென
தருமையுளநேசர் மணவாளியே.

12. கலித். ஆகாசமேவு தவிதின் சிகரியரியணையே
யாகாசுவேர் மனையேசலமோன் மணியாலயமே
வாகான மங்களவுன்னத கீதமகத்துவமே
வாகாயுனைமதி மீன்கதிர் சூழ்ந்தது மாட்சிமையே.

13. இருளோட நீசமறியின் மீதிலேறியு
னிறை சாததாயுனிடமேகிரூரொரு
மனதாக நீ
வந்துறுதியோடு மகிழ்ந்து பதசேர்வை
புரிந்திடை விடாது பணிந்து செபமே செய்து

தவ நீடுபாவிகள் வழி கேடதாலதை
விடுலோகமாயையையொழி தீமையாவும் வி
லகியோடியே
யன்றெமது நாதன் விளம்பு சுவிசேட
முணர்ந்தறி விநோடு நடந்துகொளெ நேரமு

மினிதான தீவிகையனையாமலோர் கடி
ஞையிலார் தவேயெனை கொணர் வாயலான்மிகு
விரைவாகவே
சென்றெதிர்கொள் பார்வையனந்தலில் விழாது
தொடர்ந்து மணவீடுபுகுந்து கனியாயிரு
மகிமையுடனூழியுள காலமே.

14. கலித். மெத்தன வுள்ளவராய் நீசவாகனமீதெழுந்
துன்னதத்தன் வந்தாருனக்காக வென்றேயருள் கூர்ந்

துகையிற், சித்தியிலெண்ணை கொண்டே தீபமேந்தித் திட
விசுவாசத்துடனித்திய மணவீட்டுக்கேகு மணங்கரசே.

15. இசைபாடியே விபுதர்கள் கோடிசேனைகள்
புடைசூழவாதி வலதுபாகமீது
மகிமையாகவே
சங்கையுடன் மேவியிருந்துலகும் வானும்
வணங்க நரகோருமடங்க வரசாளதி

பதியேசுநாதனு னுயிராசை நாயக
னுடனே குலாவி முடிவூழி கால
முனதமாகவே
சிந்தைகளிகூர வனந்தசுகமேவி வி
ளங்க வதிதூதர்முழங்கி நடமாடவு.

மெழிலான வீணைகள் பலகீதநாதமு
மெழும் வானம்யாது மணியினேதையே மிகு
மிடரோவிரா
திந்தவிதமேன்மை நிறைந்த புகழாயொரு
நிந்தையுமுறாது சிறந்தபர தீசினில்
வளமை மணவாளனுடன் வாழியே.

16. கலித். தந்தையனுதி வலத்தினிலேறி சச்சரியிருப்
பா, யந்தர சொற்கமும் பூமியுங் கீழுலகத்தையுமாண்
டுந்திய தேவசுதனேசுநாயகனே டுறவாய்ச்
சிந்தையினூழியும் வாழ்ந்து சுகித்திருதெய்வ ணங்கே.

---

## 4. வண்ணம்

### வேதசரித்திராதிந்தம்.

4. விரு. ஆதியநாதி சரீரமிலாத
வரூப சொரூபியுமாய்
யாரணமாயறி வாயருளாயுயிர்
யாவையும் மாளரசாய்
யேதமிலா தொளிவாய் வெளியாயிணை
யேதுமிலாததுமா
யேகதயா பவியாபியு மாயுளெ

லாமறி ஞானியுமாய்
மாது செய்பாவ விநாசநரசே
மகா கிருபா நதியாய்
மானிட தேவவதாரரசாக
மனுறுடுறு மாவடிவே
நீ தவறுதெனையா தரிவாவெரி
நீத தயாபதிபா
நீ தயவாயிருநீ துணையாய் நட
நீ சருவேசுரனே

2. தன தன தத ததான தானன தனத்த தநத
3. தனன தந்த தநத தான
தனன தந்தத னதனு
தனதர நததன தானு தாததனு

1. திருவருள் பெற்றஞானமாதவர் மனத்துகந்த
வறுகுண வஸ்த்தீரிலாத பரிசுத்தவின்ப
ரருண் மிகுந்த சிந்தையாளர்
கிருபை பொங்கி நின்ற நீதர்
சகல மண்டலங் கொளாத
கடவுளன்பின் வடிவினோர்.

வரமிகு சுத்தர் நாடுவானிதி பரத்திலங்கு
நெறிமகிமைப் பிரகாச சீவமுடிரத்தினம்ப
லரசர் வந்து நின்றுமிறை
தரவனந்த சங்கதூதர்
மறையின் மங்களங்கள்பாடி
மகிழவந்த சிறுவனோர்.

திரமனவுக்கிரமோடு பேயலகையைச் சினந்து
தழ நரகத்திலூழி யாயுழல விட்டநெஞ்சர்
திரளுமந்தரங்கள் வானு
மகிலமும்படர்ந்த கோடி
பொருளடங்க லுந்தயாப
முடன் வினைந்தபரமனோர்
புயல்வான் கணுறமேவு தீர்க்கவான்

2. செயலுட ன்வஸ்துயா வுமாறுபகலிற் சமைந்து
கடைபரிசுத்த வாதியேவையை வகுத்துவந்து

மனுடர் தங்களின் சரீர
வவையவங்களும் பிரகாச
முடன் வனைந்தியங்குமாவி
தனை மிருந்தவர மதாய்

லெழிலுறு திட்டமாகவேய் தருண்மிருந்த நண்பி
னுட நல்சித்திரகாவிலே வளரவைத்திணங்க
விருமரங் கடந்து சீவ
மரம தொன்று நன்றுதீத
தறிம ரம்பிஞென்றடாத
ததிலருந்த மரணமே.

திடனிது நித்தியகால ஞாயவறிவிப்பதென்று
மனதினில் வைத்துவேத நேர்வழியடுத்து நின்று
நடவுமென்றன ந்தனோது
கிருபையின் சொலன் பிலாது
கடியடர்ந்தி யம்புகாதை
நலமாதென் றுமுதல்வனூர்
புகனீங்கி மிகுபாவ மாற்றினர்.

3. ஒரு பொருடப்பிலாத நேயன வரைக்கடிந்து
வனமதகற்றியோடேவே யுரைவழுத்தி வஞ்ச
நினைவு கொண்டெழுந்த பேயை
யெரியின் முங்கவென்று சாப
மிடவனந்த விந்தையோடு
நரர்கள் பங்கிலுரிமையாய்

நலமதியற்றிவான நாடதையளித்து மைந்த
ரிடர் கடவிழ்த்து மீள்கவேக சுதனைப்புரிந்து
வெறியதின் கொடுங்கபால
முடி தகர்ந்துடைந்து மாள்க
மனுடரின்பு கொண்டு வாழ்க
வருள் வமென்ற நெறியிஞெ

னுரிமைகள் சற்றிலாது கோபமனதுற்றுவங்கை
யொடு கவடற்றவேததீதிகண்மிகுத்ததம்பி
யுயிர் கவர்ந்த வண்டனுன
கயினையுங் கவர்ந்தகோர

வதைபுரிந்து கொன்றுபோட
மனது கொஞ்சமெனு மிலார்
தயையோங்கு சுவிசேட வார்த்தையான்.

4. உலகதிலுற்ற வாதிமானிடர் குழுத்திரண்டு
கனதிரண்மிச்சமான நாளின் மிக வக்கிரமங்க
டனிலுழன்று தம்பிரானின்
மறையதன் கணன்பிலாது
மனம் விரிந்த கண்டபாதை
தினநடந்து திரிதலான்.

வெகுமுனிவுற்று லோகமானதை யழிப்பமென்று
நொவையெனு மிக்கபோத நீதனைவிடுத்து நண்பி
னுடனயந்து சங்கை நூறு
மிருபதுந் தொடர்ந்து ஞாய
நெறிபகர்ந்து மஞ்சிடாதி
டர்கள் புரிந்தபடியினு

லொலிபெறு சக்கரலோகமூடிய மழைக்கணுந்து
பிரளை யம்விட்டு மேதையாவையும் வதைத்தபின்பு
தவநிறைந்த வெண்கெடாது
கலமொதுங்கி நின்றுமேலு
மவனியின் கணண்டி வாழ்க
வகைசெயுங் கருணையினுர்
தனையீ ய்ந்தருளை யூழிகாட்டுவோர்

5. தருமுறை கைக் கொணேயவா பிரகாமைத் தெரிந்து
மறுமை திரத்திலேக வாசகம் வழுத்திமைந்தர்
பலுகவும் படர்ந்ததேச
மவர்களின் சுதந்தரமாக
முழுவதுந் தரும்பிரதாப
னெனவிறைஞ்சி யுலகுளோர்

பணியவும் விக்கினமான சோதநகரைத் தொடர்ந்து
வளரெரியை பெய்தூடு கோமர்த கனித்த கண்டம்
ரறமிலங்கு தந்தைசேய்ப
னிருவர் தம்பியெனற சூசை

கனவு கண்டறைந்த வாய்மை
தமையர் தந்தவிலையிலே

சறுவவெகித்து தேயமீதர சியற்றவிண்ட
மகிமையைமுற்றுமோத நாவது துடிக்குதெந்தன்
மனமடைந்த புந்தியோடு
பரவசங்கள் கொண்டு மோசை
கதை நினைந்து பஞ்சபாவி
கடலமிழுந்தியழிதலா
லியலோங்குன திளேர்மைசாற்றவோ.

6. தடவரையுக்கணீடு சீனமலையிற் கொணர்ந்த
விசரவேலுக்கு வேதமாமறை கொடுத்திரண்டு
பலகையுங் கடந்த ஞாய
நெறிகளுந்திடன்களாக
வருளியும பயன் படாத
வசடர் துஞ்சிமடியவே

சவுன்முதன் முக்கிய மேன்மை ராசரையெடுத்துயர்ந்த
வெருசலேயைப் பிரதானமாயுலகனைத் துமொன்றி
யுரிமையின் கணின்று சீர்கொள்
குடையதொன்றடைந்து வாழ்க
வலிமையின்றிறங்களே செய்
ததி நவங்களருளியே.

தவிதரசைத் திறமாக வூணியழகுக் கியைந்த
வபிசலமைத்துரோக மூடவுமழித்தசுந்தரர்
சலமனென் றுயர்ந்த பேரின்
முடிதுலங்கு பண்புளோனை
யளவிறந்த னந்தகால
மாசமைந்து பெருகவே
யிடநீண்டரிய வாய்மை யாற்றினர்.

7. பெருமருளப் பறுமிஸ்த குருவைப்புரிந்து
சுதன் வருகைக்கு நேர்கொள் பாதை சமனிட்டபின்பு
புகழணிந்த மண்ட லீசு
ரரும வணங்க வந்துநேய
மரிமடந்தையு ந்தியூடோ
ருருவுகொண்ட பரமனை

ரறிவினின் மிச்சமான யூதர்கள் குருக்கண்முன்பு
வழிபடுதற் கமாடிவாயினை யடைத்தலம்பு
மலை முழங்கு சிந்தினோடு
கணமெழுந் தடர்ந்து சீறு
பிசலமர்ந்த டங்கவாச
கமது விண்ட புதுமையார்
பெலனுறு முக்கிர கோபமாயொரு சவுக்கையுண்டு

பணியெதிரிட்டு வீசியோடவு மடித்திடுமபர்
களை மடங்கவுஞ் செய்தீறு
கடையிலெங்கள் பங்கமாற
விதன துன்படைந்து பார
மரமதின்கண் மரணமா
யுயிர் சோர்ந்து வினையாவு நீக்குவோர்.

8. பிரம கிறிஸ்துநாதனார் திரிதினத்தினன்று
குழியை விடுத்துநீடு சீவனிலுயிர்த்தெழுந்து
புவியினின்றடைந்த சீடர்
தமையு மண்களொங்கு மேகி
மறைவிளம்ப நண் போடாசி
யருளியண்ட மதிரவே

வன முகிலுக்குளேறி வானுல கடுத்துமுந்து
மடிகடிரித்துவ வேகதாதையின் வலத்திருந்து
புவனருந் தணிந்தபாத
லர்களனந்தமும் பெய்வானி
லமரரும் பணிந்துகூற
முடிபுனைந்து முடிவிலே

பிழைபுரி துட்டரோடு நீ தரையெழுப்பி விந்தை
யுடனெறி தப்பு தீமையோர் கணரகத்திலென்று
மழலமிழ்ந்தி வெம்பிவேக
நலம்வினைந்த பண்புளோர்கள்
கதியடைந் திலங்கி வாழ்க
நடுவிடும் பெருமையினா
னுளமாய்ந்து முடியாத காட்சியான்.

## 5. வண்ணம்

### சேபம்.

5\. விரு. தேடும்பணியே திரவியமே
செல்வப் பெருக்கே திருவுளமே
சீனுமலையின் கற்பனையே
செழிக்கும் பரமகாணுவே
சிங்காரப் பூங்காவனமே
செங்கோன முடியே சீர்பதியே
தேவபரனின் றிருமகனே
தேவாலயமே தினகரனே

நாடும் பரமராச்சியமே
ஞானநதியே நவநிதியே
நல்லோர்க் கருளே நற்பலனே
நன்மைக்குறவே நாயகமே
நவசேனைகளினி ராசாவே
நரகக்கடியைக் கடிந்தோனே
நாவிலடங்கா மிகும்புகழே
நாயேனுனது மகத்துவத்தைப்

பாடும்படியே கிருபை செய்வாய்
பாவியெனக்குன் னுதவியின்றி
பார்மீதோ ராதரவுமில்லைப்
பைசாசுலகு மாங்கிஷமும்
பகையென்றுனக்குத் தெரியாதோ
பந்துகளுந் தானுனையடைந்த
படியாலுறவற்றது மறிவாய்
பாழிவ் வினைக்கென் செய்வேனுன்.

வாடும்படி யென்மனதினை
வருந்தி வருந்தி நினைத்துருகி
மயங்கிக் கண்ணீர்தனை யுதிர்த்து
மருகிமருகிப் புலம்புவனே
வஞ்சக்கலியைத் துரத்தியுன்றன்
மறைவிலடிமைரதனைக் காத்து
மகிமைப்படுத்தியருள் புரிவாய்
மன்னேன் றவிது குலக்கோவே.

2. தனன த்தன தனு தன தானன தத்த
2. தன தானன தத்த
2. தன த்தன தன
தனத் தான தான
தன தான தநத தன தானனு.

1. கடல் சுற்றியதரா தலம்வானுல கட்ட திசை
பற்பலபொருள்கள் யாவது மாறுதினத்தில்
வளமாக வமைத்தெழிலதாக நடத்தி
யகங்கனிவுறவனந்த ததிசய மிகுத்தாளுநுதி

பொறுமைக் களவிலா மறைகூடிய சத்திய
திரிதத்துவபரா பரமாகிய நித்திய
வெவராலு முரைக்கவரிதான மகத்துவ
வரங்களி லுயர்குணந்தரு நய
செபத்தியான ஞானி.

கடியைச் சினமதாய் நரகானதில்விட்ட
பெருமைச் சறுவகாரணமா தவனுக்கிர
வெரிநீதியின் முக்கிய கிருபாசனன் மொய்த்த
பரஞ்செகமது நிறைந்தருளிய வுகப்பானசோதி
கனவேத சுந்தரவரூபியே.

2. கதிர்விட்டொளிர் வியோம மும்வான் விரிவுக்குண்
மிதமற்றடர்ந்து தாரகையானது மற்று
முற்பாதல ம்வெற்புலகும் வாரியுமச்ச
மிகும்படி நடுநடுங்கிட நட
மடித்தேயுலாவு

மகிமைக்குரிய சீவன கேரூபின் முக்கிய
விரதப் பெருமைவாகன மேறியெதிர்த்த
கனபேய்கள் சிரத்தை மலையாது தகர்த்து
மிகுந்துள தளமடிந்தழிபட
மிதித்தாடு சூரர்

கருணைக்கிணையிலா வருள் வேதசமுத்திர
வறிவுற் பனகுணாகரதேசிகர் சித்திர
நவசேனைகளர்ச்சிய சவை சூழ்கவுமெச்சிய
பயன்களையுணர் சுதந்தரவறி

வுளத்தாதிமூல்ர்
கலைமாதவந் தருதியாகவான்

3. அடலிட்டெதிர் பிசாசுகளோடிய பட்ட
மணிபொற் சிலுவைஞானபதாகை படைத்த
துரைமா பரிசுத்த செபமாலை தரித்த
புயன் றவிதிறையினந் தனிவரு
வொளித்தீபமான

பரமச்சொரூபரா ரணர்வீரிய சத்துவர்
சுயதற்பர புராதனவாதன தத்துவ
ரசரீரியர் பத்தரகமேவிய நித்த
ரதம்பழுதற வுகந்தவரொரு
தருப்பாவநாச

ரகமைக்கொடிய பாதககாமிகள் கெட்ட
மனதைப்பணிய வாவியினேவுத லிட்டு
நிறைமாதவமிக்க குணமேவி நிலைக்க
நலந்தரு செபதுரந்தரவதி
சயத்தேவ சீல
ரனன்மீதறைந்த தச நீதியார்

4. அருமைத்தெரிசி மாதவராரியர்பற்றி
யெழுதித்தருமுனூல் வழுவாதர சிட்ட
தவிதாளுயர் பெத்தலேயின் மாடடை கொட்டி
லெழுந்தருளிய பரம்பொருளொரு
கிறிஸ்தேசுநாத

வுனதக்கிருபையாசனனே கெதியற்ற
வடிமைக் கொருதராதரவே துனைவிட்டு
லகமானது கஸ்திதருபாதல நித்த
மெழுங்கவலை கண்மனந்தனி லதி
கரித்தேயெ நேர

மலையிற்றிருகி யோடிய வாலிலையொத்து
மருகித்திரிவனே பகைகாற ரனத்த
வுறவோரொருபக்க மயலாரொருபக்க
மிடும்புகளுடனடந் தரசுசெய்

தொடுக்காம லாளு
மதிநேய சம்பன வனுதியே.

5. புடவிக்குளனே மாமரியாளிட முற்ற
கிருபைப் பரமனேயடியே னளவற்ற
பவகாரி கணிச்சையுல காசைகடற்கு
ணமும் பகை கவடதும் பெருகியே
மகத்தான தீயன்.

மனதிற் பெருமையோ பெரியோரொடுதற்க
மிடுசற்பனைகளோ புறர்வீடதுநற்றி
வநிபாய மிகுத்த கொலைபாதகமற்ற
வகந்தைகள் கெடுகுறும்புக டொகை
கணக்கேதையோ பொய்

புலைசொற்பழுது கோடிகளோ களவுக்
குரிய சித்திரவினுவுகளோ நடலத்து
விலைமாதர் கண்மைக் கண்வலையூடுயிர் சிக்கி
விழுந்திடர்படு பெரும் பழுதுள
துடுக்கான கேடனெனே
நேடவந்த குருநாதனே.

6. புதரிற் புலிகள்போன் மனையாளொடு மக்க
ளெதிரிட்ட டமதாயுயிர் சோர்வுபடுத்தி
வினைசேர் கெறுவத் துமதமேறியுரத்து
நிதம்பொருது சமரந்தனையெவ
ரிடத்தே சொல்வேனுன்.

வெளியிற் பகடியோ பரிகாசவிதத்தி
னெடிசொற் றுவர்களோ வெறியாடி நகைத்து
மதியாதொரு லட்சமவதூறுடன் லட்சை
யழிம்பதுகளை விளம்புதடுள
சனத் தாரிஞேடு
புகழற்றெளிமையா யுறவாடி யலுத்து

மதிகெட்டவனுமாய் முகநாடி கறுத்து
மெலிவாய் மனதுட்கி யிருசேவடியுக்கு
ளடைந்தன னெனைமகிழ்ந் தடிமைகொ
ளுனக் கோலமோவ
மிது நேரமென் கலிகடீரவே.

7. சடலத் துயரினுன் மனவேதனையுற்று
னதுபொஸ்தக மெய்மாமறையாக சுமத்த
சுவிசேட சமுத்திர நெறிஞான சரித்திர
நலங்களை யதிசயங்களை யிரு
தயத்தே யெணுது

கவனத்துடனலோர் சொன நீதிகடப்பி
யலகைக் கடிமையா யொழியாவிரகத்து
மயன்மீறியு நச்சுமரமாகியு முட்ட
விடந்தரு விரியனின் பறழரு
வருப்பான பாவி.

தவசொப்பரவு தாழ்மையும் வாய்மையுமற்று
மனமெத்தனவு சாது சினேகித சற்
குணமு நேசமுமற்று விசுவாசமு மற்று
நடந்தவ மதியடைந் தெரிநர
கதிற் போய் விழாம
லுனைநாடி நெஞ்சுருக ஞாயமே.

8. தவிதுக் குமாரனுகவுமே தினியுக்கு
ணரர்பக்கிஷமதா யழியாத பதத்தை
யிடவே மனதொத்தரிய பாடுகள்பட்டு
மடிந் துயிருடனெழுந் தருளியு
னதத் தேறியாதி.

வலமைப்பரமனு ருடன்வானவர் துத்திய
மெனவர்ச்சனைகளே செயமேன்மையின் முக்கிய
சரியாசன தத்துவ வலபாரிசநெட்டி
லிருந்தினி வருகையின் கடையுக
நடுத் தீர்வையோது

சமையத்தெனை விடாது னின்வான கரத்தின்
வளமைப் பிரபல சீவனினோர் கிரீடத்தை
முடிமீதுதரித் தினிய வாழ்வினிலுய்த்து
நயம்பெற வருளியுங் கிருபை செ
யுனைப்பாடு மேழை
யுயிர்வாழ்கவும் பருடனூழியே.

## 6. வண்ணம்

### தேவலட்சணம்.

6. விரு. பார்க்குளரி தானதவ நூக்கியத போதனர்கள்
பாக்கியம தானபரனே
பாட்டுகளிலேயு மவரையேட்டுக்களிலேயு முறை
பார்த்து முடியாத பொருளே.

மார்க்க முறையாலெவரு நோக்கவரிதான மிகு
மாட்சிமைகளான பதனே
வாத்தியமெலா மொலிய மோக்கிடர் கடோத்திரமிக
வாழ்த்த மகிழ்வாகு மகிபா

வாக்குமதி நேயமுடனேக் கர்வினை போக்கிய வி
ஞைஸ்தி தசசாஸ்திர முதல்வா
வாக்கிரமமொடே சமர்செய் பேய்க்கண மெலாமழிவ
தாக்கிவிடு போர்க் கொடியனே

தீர்க்கமுடனே யுனது காற்சுவடை நாடிவெகு
சேர்க்கையுடனேத்திவரவே
தேற்றர விஞவியருண் மாத்திரமெனக் கருள்விச்
சேத்திர மெஞ்ஞான முதலே.

4. தான தத்த தத்ததத்த
4. தன த்தன தந்ததன
3. தானதன தானதன
தத்ததன தான
தன தான தனன தன தானனு.

1. ஞானவிற் பனத்தினர்த்த
சாகரப் பெருக்கினிற்
கொளாத மெய்த்திரித்துவ தத்துவ
மேன்மை யற்புதப் பிரச்சித்தர்
பரத்தின்மிகுந்த செபதவத்தினிறைந்த
வதிசயத் தினுயர்ந்த குணவரத்தின னந்தகண
தூதரதி தூதர்கள் குழாமொடு நரோர்படை
பராவி நடமாடவளர் நித்தியவிஞேதர்

காரணத் துயர்ச்சி யுச்ச
மேவுசற் குணத்தர் நித்தர்
பாதகத்திடர்ச் சொல்லற்ற
தேவவட்சயப் பரிசுத்த
ருருக்க நெடுங்கருணையிரக்கமிகும் பரமர்
திருக்கொலுமுன்பு கணபயத்துடனின்றிரவு
மேபகல் விடாதுபயில் கேருபீனூடேயுலவு
சேருபீமுமே முகமறைத் திசைகள்பாட

ஞாயமொத்த வித்தகத்தி
னோர்மிகுத்த திட்டம்வைத்தெ
லாம்வ குத்தளித்த ருட்செய்
தேயனுக்கிரகிக்கும் வஸ்து
செகத்தினிலங்கு டலவுயிர்க்கள் பணிந்துதொழ
மனத்தினினைந்தபடி வளர்த்திவரும் பரமர்
வானவர்கள் பூதலர்கள் சேரவரிதான வெளி
யாமுன தமீதினிலிருக்கு மொருதேவ
ரசரீரி வடிவுடைய வாதியார்.

2. ஞாபகத்துயர் த்திபெற்ற
வேதவட்ச ரத்தினுச்ச
மான பத்திலட்சணக் கரு
ணைசமுத்திரக் கருத்தர்
மகத்துவமுங் கனமுமிகுத்தவர்புந்தியுள
திறத்தினெழுந்து புவியனைத்து நிறைந்த பொரு
ளாதி யநுணேசர் கிருபாசனரு லாசர் பவ
நாசர் சருவீசுரர் பரப்பிரம விலாசர்

தூதர் சத்தம் வைத்துயர்த்தி
நீடு சுத்தமுற்ற மிக்க
நீதி யக்கினிக் கதிர்க்கண்
மேவுமுக்கிர சக்கிரவர்த்தி
பெருத்தகிடன்கொளொடு பெருத்த செயங்களிடு
பெருத்த வளங்கள்படு கருத்தர் பரம்புவியி
லாருனிக ராருனெதிராருபர மாருவமை
யார்களினி மேலெனு முனக்கிணையதாவர்

ஞாயறற் றெருளித்திடச் செய
கோடி மித்திரனுக் குண்மிக்க

சேவடித் தெருட்சி பட்ச
மாயளித் தருட்செய் துய்க்கு
மூனைச்சொலும் விந்தையொருவிதத்தினு மெங்குமிலை
யெனப் பரமண்டலம்தனிற் சபையும் பரோடு
தேவர்களெலா மடிகளேபரவியே பணிய
வே பெருமையாய் மனமகிழ்ச்சி பெறுநாத
ரறிவாலு முணரரிய வாழுமே

3. வானவட்ட திக்கினெட்டின்
வீதியிற் பரப்பி வைத்த
சோதி லட்ச லட்சலட்ச
மானசித் திரத்துடுக்கள்
பலப் பல வெஞ்சுடர்க டுலக்கிய சந்திரனிடை
கணக்கினடங்கரிய மகத்துவ மிஞ்சவுறு
மேயதனிலே நிலையதாய் வளரனேகமுயி
ரேகபரனூடி துதித்துலவி வாழ்கு

மேகபத்தியைக் கலக்கி
வாய்வுறச் சுழற்றி யெற்றி
யேயடித்துடைத் ததிர்க்க
ளோடி டிக்குமப் புறத்தி
னடுப்படு ம்விண்டலமு முடுக்களின் மண்டலமு
நவக்கிரக மண்டலமும ருட்ப்பரமண்டலமு
மூடியதிலே பரம ரூபிகளனேகரவர்
நாம நெறி நீதிகளுரைக்க வெளிதேது

மாய மற்றவத் தலத்தை
நாடி நிச்சயித் திருக்கு
நீதியுற்ற நற்றவர்க்கு
நீடு முத்தியைக்கொடுத்து
மகிழ்ச்சி செயும் பெருமை வழுத்தும் விதங்களல
மணப்படு மங்கலமுமுறக் கனமும் பெருகி
யூழியுள காலமழியா மகிமையாயுயர்
வேயரிய சீவனை மிகத்தரும் விநோதர்
வசையானதில துயர் மனோலனே.

4. வாதுதற்கமிட்டு வெட்டு
சேவகத் திரத்தினுக்கு

ளேமிகுச் சமத்தெகித்து
ளோரை வெட்கடைப்படுத்தி
யரத்தரியுங் கொடியவனத் தடமும் பெரிய
மலைக்கெடியும் புனலுமிதித்தொரு சிந்தைகொடு
போர் பொருதியே பூசியர்வீழ்க வருசாதிகளை
நீறுபடவே முறியடித்துயரும்

பூதரோடு நற்கணக்கரத்தி
யாயர் சுத்தவித்தகத்தின்
மாதவத்தர் புத்தியுற்ற
வேதவிற்பனத்தர் முத்த
ரனுக்கிரகங்களடர் தினச்செப நண்புடையர்
மனக்கடினங் கடவிர்கலைத்திற வித்தையினர்
வேதநெறியாளர் பரிசேயர் பிரதானபல
வாசரியலேவியர் தழைத்து வளர்நாடு

வாணரைத் திருத்தியஷ்ட
தானியிற் கதித்துயர்த்தி
யான சொற்பனத் தினர்த்த
சாரம்வைத்த கத்தர் சித்தர்
தரிக்கு மடங்கள்பல விருட்சவனங்கள் செறி
யுயர்ச்சி கரங்களணி மதிட்களடர்ந்த நக
ராமெருசலேநகரிலே பெலிசெய்தே மகனை
யாதிபுரி பாதகமெரித்த முழு நீதர்
வளமேவு பரமமலை மாதரார்

5. மோனமுற்ற விற்பனத்தி
மாதவத்தி சித்திரத்தி
யான நற்குணத்தி புத்தி
சாலி சத்தியத்தி நித்தி
கதித்துயர் வெஞ்சுடரையுடுத்தவள் சந்திரனை
மிதித்தவளுந் தொளிகள் பதித்தவளந்த மிகு
நாணமபிமான மவதான னிதானகுண
ஞானமுளமாது தயையுற்ற கிருபாலி

யாதரைக் குளிப்படிப்பே
ணேது சொற்கமொத்திருக்கும்
ரூபிகட் குண்மெத்த வுச்ச

மாயுதித்துயர்த்தி பெற்ற
நயப்பெணிலின்ப வதிசயம் பெணிலன்புடைய
தவப்பெணிலந்த மறை மலைப்பெணிலும் பெரிய
நீதி நீறைமாது கருணாகரி குணகரி
மனோகரி மயேசுரி விசித்திரமதான

மூதுரைக் கணத்தி சித்தி
வேதவட்சரத்தி முத்தி
போதகத் தொழிற்சி நற்சி
னேகவற்புதத்த சத்தி
விழிப்புட னங்கைத்னில் விளக்கதுகொண்டு கொழு
னனுக்கெதிர் சென்ற கனவிலக்கணமங்கை பரி
பூரணி மனோன்மணி யிராசதவித சரன்பு
ராதன சீயோனொரு திருச்சபை குமாரி
நிசஞான மங்கணனொனு நேர்மை யே.

6. மோகமைக் கடற்பரத்தை
வேல் விழிச்சியர்க் குளிச்சை
யான் மருட்டி வித்திணக்கி
லீலை செய்த்திறத்தினிற்க
லவிச் சுகமிஞ்ச மதமிகுத்த தமங்கனொடு
மனைப்புற மங்கையர் கடனைத் தலைகொண்டு திரி
மாயன் மலரோனரனின் ரூபமுமிலாது சட
மானதுமிலாத பெருமைச் சொயசொரூப

ராற தெட்டெழுத் தகற்றி
மாறு சக்கரத்தை விட்டு
வீறு சொற்சுளைத் தணித்து
நீறணிச் சளத்தையற்று
வலைச்சுருபந்தகரமடச் சமையந் துலைய
மருட்சமணுங் கொலையவனைத் துயிருந்தொழுக
வேயளவிலாலதயை நீதிநெறி யோடுலகெ
லா நிறைவதாக வளரட்சய தெய்வீகர்.

மூடரைக் குணப்படுத்தி
நேயபத்தியைக் கொடுத்து
வேதனைத் துயர்க்ககற்றி
யே கிறிஸ்துவுக் குணித்திய

பவித்திரம் விளைந்து பரவசத்தின் மனம் பதிய
வரத்தை மகிழ்ந்து சொரிதவத்தி னலங்கிருத
ராண்மை பெலனோ மகிமையோ கிருபையோ பொறுமை
யோ முடிவிலாத புகழுற்றுயர் விவேகர்
நெடுவானிலுலவு மெரிநீதியார்.

7. கானகத்தி னுகிரத்திலே
விருட்சகந் தளிர்க்க
ளோருசித் தெழுற் சிரத்தையே
கவிழ்த்து நிற்கு சித்திர
தவத்தனடங்கரிய மகத்துவ னங்கவர்க
ளுரைத்த பதங்களினுழலைப் பகரும்படி செய்
வார்களிலேயேயுனது மேன்மையும் விலாசமுழு
னீளமுமுனுழமும் வகைத்தொகையதாக

வோதுதற்கு மட்டிலக்க
மானதற்ற முக்கியக்கு
ணனட் சயச்சுகத்த
னுமலட்சணத் தொகைக்கு
ளடக்கமதின்றி யுறமுறைக்குலமின்றி யொரு
கலக்கமுமின்றி யனுபவத்துயரின்றினவ
னேயர்வளர் தாய்தமையர்சேயர்தருகாதல் சுக
மாதரிடும் லீலைகள னுப்பொறியிலாதர்

காவல்பெற்ற சக்கரவர்த்தி
நாவலர்க்கு நற்புகழ்ச்சி
யாவலர்க்கு மெய்க்களிப்பு
பாவலர்க்கு நற்படிப்பு
சகத்தின் மறைந்தவொளி பரத்தினிலங்கு வெளி
யெவர்க்கு மனந்தமொழி பலர்க்கு நயந்தருகு
மாசறுவியாபக தயாபபிராதப மனு
ரூபசுப தேவனெனவுற்றவசரீரி
கசடான புலையர் விபகாரியே.

8. காரணத்திருச் சுவர்க்க
மான மெய்ப்பதிக்குள் லக்கி
லாவரக் கணத்திரட்ப
லோர்களைப் படைத்து வைக்க

வதிற்சில புங்கவர்கண் மிகப்பெரும் வம்புகொ
பரப்பிரமனண்டைடதம தகக் கெறுவம்புரிய
வேதுகணமே நரகிலேவிழென வோதிமிகு
சாபமதுகூறி நிரையத்தின் விடுபோது.

கோபம் வைத்த தக்கணத்தில்
வீறுபட்ட சத்துருக்கள்
சீறுகெற்சனைக் குண்மெத்த
மீறியிட்ட தக்கிருமித்து
மனத்தினுள் வங்கையுடனெதிர்த்த கடங்கள் சொலி
யினிப்புவி யங்குவரு மனுக்களிறந்தழிய
யாதனைசெய்தே நரகிலே கவர்வமேயெனவும்
வாதுபகர் கூளியை யொழித்த துகள்காய்ம.

காரமுற்ற தூற்றாதனை
யே மிதித்தழித்துவிட்டு
லோகரைக் கதிக்குள் வைக்க
வே நினைத்த தற்பரத்தர்
பரத்தினுயர்ந்த பொருள் சகத்தினுயர்ந்த பொருள்
பெலத்தி னுயர்ந்தபொருண் மனத்தி னுயர்ந்தபொருள்
ஞானநரர் வானசுரர் கூடியொரு வாய்மைகொடு
நாவிசைய வோதினு மதிற்பெரிய தேவர்
கலையாதிபர்கள் பரவுகாவலே.

---

## 7. வண்ணம்

### ஆதாம் ஏவாளின்பேரிலே

விரு. சீர்சிறந்த திரித்துவ தேவனுர்
தேசுமிஞ்சுதம் சாயல் திறப்படி
தீரவிந்தை நிலத்தி னிறைதிரள்
சேரநின் றதிகாரஞ் செலுத்தவே
யோர்விளங்கு மனுக்க ளிருவரை
யேதனந்த வனத்தி லிருத்தின
ரேதநின்ற மரத்தை யிடறென
வேற்றி விஞ்சையில் வாழ்கவிசைத்துமே
கார்கனிந்த பிசாசுரை மெய்யெனக்

கத்தன் செஞ்சொல் கடந்தன ராதியான்
காலமந்தியங் கெய்து கடுகவே
காரமிஞ்சு நடுச்செய்துங் காதலாய்த்
தார்புரந்தருளத் தயவாகவே
தாழவந்து கனிமரி தன்னிடம்
சாது மைந்தனுய்த் தோன்றி சாபத்தையே
தாக்கிவென் றசயம்புக்கி ஸ்தோத்திரம்.

2 தநதத்தா தானதன தத்ததன தான
3 தானு தனந்த தன
தாநதன தான
தனதான தான தனனு

தந்தைத் தேவாதிப மகத்துவ சொரூபி
அந்தத்திருதி நடுவற்ற வசரீரி
தானுயிருந்த திரியேகாதிபன்
சருவ ஞானுகரன் கருணை
நீண்ட பிரதாபன்.

முந்தப் பூலோகமு மிகுத்த நெடுவானும்
விந்தைச் சராசர மனைத்துளது மாக
நாளாறில் மைந்தரையு மேலாய்மகிழ்ந்தருளி
ஓரே தனந்தவன
மாங்கவர் வாழ்க

சண்டைச் சோடாயிரு விருட்சமுறவே
செய், தொன்றைத் தீதாமென விலக்கிமறை
யோதி, ஏழாவதென்ற திருநாளானதுந்
தருக, நீடூழியும் பெருகி
யாண்டு குலாவ
அருணீடு மாதிமுதலார்

2. சிந்தைச் சேராபீமு திடத்து பலசேனை
மந்தைக் கேராபீமு பலத்ததிரளாக
சீராயிரைந்து துதி நேராயிசைந்து புகழ்
வீராயடர்ந்து பர
சாந்தமாநேமன்

தொந்தத்தோடேக முமைத்தவ திஞானன்
மைந்தர்க்கே சார்வுற விதித்தமதி
மோனன், நாலாமிருகங்களை சாலூர்வனங
களையு, நீடிவளந்தருக
நேர்ந்த தயாபன்

செம்புத் தம்ரூபமுற மக்களை மேலாக
தெம்புத் தாராபதியெனப் பகுத்தவாய்
மை, சூதாயறிந்தவரை வாதாடி வென்று
கொள, வேதான் மறைந்துகடி
தானடிவேமுக
அரூப மேவியகமே.

3. பொங்கச் செய்தீவினை மிகுத்தெழு
விடாது, துங்கத் தேவாதிபஞேர் புத்தி
ரனையேவ, பூவேயெழுந்து நரர்சாவே
வெகுண்டு படர், தீதே களைந்திருளை
வாங்கிய தீத

பங்கப்பிசாசு தலையற்றிடச் செய்
நீதர், துங்கப்பேறுக நரர்சொற்க
முறலாக, வாகாய் மடந்தை
மரியாள் பாலோர் மைந்தனென
சாதாய் விளங்கிநய
மூண்ட விவேகன்.

புந்திக்கேதாகிலும் விளக்கரிய நேய
மெந்தைக் கோபூரண திரட்டுதியெநாளு,
மோலோல மஞ்சலிணை தாளே விழுந்துபணி
வோர் மா வனந்தமகா வேந்தனியேசு
சரணேசதா தாபரமே.

4. சங்கைப் பராபரதிரித்துவி யாபி
கங்குற்போதாகம நிறைக்க வெளியாகி
பூலோக மங்களமாய்
மேலோக விந்தையதாய்
சாலோக மாபதவியோங்கிய நாத
னென்றைக்கு மேவுசெல்வமிக்க சுகவாசி

யின்றைக்கு மூழிசதா நிற்குமுபகாரி
ஏலோகி மென்றபெயர்
நூலாகமங்கள் சொலு
தாதா வெழுந்தருளி
யரண்டெனை யாள

சந்தித்தே யாவருநற்பதி யுளோராயி
ணங்கச்செய் சீவபலி மெய்ச்சபையை நாடி
ஆதாரமுந் தவருவேதாவெம்பந்த மற
வாகா மகிழ்ந்துகொள
வாய்ந்த விசேட
வரமே நிதான குருவே.

---

## 8. வண்ணம்

### சிருட்டிப்பு.

8. விரு. அட்டகுண னெட்டுலகு முட்டநிறை பத்துநெறீ
யற்புத செயற் பிரபல
னக்கிரம விக்கிரக நிக்கிரக முற்றழிவ
தற்குவரு முக்கிர கோபன்
வட்டமிடு துட்டலகை பட்டெரிய விட்டபரன்
மட்டுவமையற்ற வலியான்
வஸ்தொரு சத்திய சுபத்திவிய லட்சண
மகத்துவ திரித்துவ தேவன்
வெட்ட வெளியிட்டக கனத்தின் மகுடத்தினொளி
விட்டவிரவிச் சுடருடன்
மிக்க கிரகத்தயனமுற்ற மதிசித்திரவுடு
மெத்தவதின்வைத்த பொருளுங்
கட்டுபுவி நெட்டுவரை கொட்டநதி மற்றுமுல
கத்தினுள நற்செறிவெலாங்
கற்பனை கொடுத்தறு தினத்தினு ளமைத்தவொரு
கத்தன முதர்க்கதிபனே.

2. தய்ய தத்னை தத்ததன தத்பிந்தாதன
2. தத்த நதன தத்தந்தன தத்தநதன
தத்த தந்தன தான
தனதான தந்ததனதர்த தானனு.

1. உள்ளத்தருண் மிகுத்த திரித்துவந்தா னுல
குள்ளப் பொருளமைக்க நினைத்தனபா யரு
ளிட்டம்ப ரமற்றும்புவியைத் தென்பொடு
சொற்கொண்டு படைக்கும்பொழு துற்றெங்கணும்
ஷித்தொன் றுமிலாம
வெள்ளத் தணியுமற்றிருளைக் கொண்டே யொலி
வெள்ளத் தருபியொக்க வசைத்தங்கே யுல
வித்தங்கி நடத்தும்பொழுதத் தன் கிர
ணத்துங்க வெளிச்சங்க ளமைத்தங்கு
பளிச்சென் றிடுகாலை.

யுய்யச் செய்திருளுக் கல்லெனக்கொண்டே யொளிர்
வெய்யிற் பகலெனச்சொல் வகுத்துஞ்சீர் கொள்
வித்துங்க மகத்துவன் பெயரிட்டம் புவி
யிற்சென் ற வெளிச்சங் கருளைப்பங்கு
பிரித்துங் களியானர்
சறுவீசர் முந்தினத்திலுடலே.

2. ஒல்லிப்புடை வெளத்தினடுக் கொண்டே யெழு
மெல்லைக்குள் வெளியத்தை விரிக்கின்றார்
தனிற் சிந்துகளுக்குங் கரகத்தின்றிர
ளுக்குங்க கனத்தின் சரிவுக்கும் பிரி
விக்குந் தொழிலாளர்

வையத்துயிர் செருக்குதலுக்கொன்றே கன
மெய்யொத்த குடிலத்த கலைத்தந்தான
வளரக்குண்டல மற்றெஞ்சிட மற்றிங்கொரு
வஸ்துஞ்சுக முய்க்கும்படி நெட்டுந்தலை
நட்டுங்குணமேது

வொல்லித்தக கனத்தின் விளக்கந்தானறி
வில்லர்க்குணர் வளிக்கவருத்தந்தான
தனைப்பண்புறு சித்தங்கொடு வைத்தெங்கும்
விரித்தன்பு பகுத்துஞ் செயலைக்கொண்டு
படைக்குந் திறலாளர்
சரியான பிந்தினத்தின் வேலையே.

3. வெள்ளத்தி னொலிபெற்ற கடற்கம்பானதை
னுள்ளற்கு ளுறமைத்தும் வழக்குண்டோ வத

ளைத் தெண்டிரை நற்சிந்தென வெட்டந்தரை
யைத் திண்புவியிட்டங்கனம் வைக்கும்பொரு
ணற் றுங்கவிஞேத
மெல்லைக்குள்விதமற்ற விருக்கஞ்சேர் பயிர்
நல்லப் பசுநிறத்து மிகுத்தம்பார் கனி
யைத்தந்து மணக்கும் பலபுஷ்பம் பசியிற்றின்று
பொசிக்கும் பலவித்தும் பிணி
யைக் கொன்றிடு மூலி

மெல்லச் சமையலிட்ட பணிக்கந்தா னுரை
சொல்லப்படு திலைக்கண் மயக்கங்காண் மர
புற்றங்க சரத்தின்றிரள் வஸ்துந்தரு
தவிததும் புவியிற்கொண்ட செயற்கண்டு
மகிழ்க் கொண்டனராதி
திறமான மங்களத்திஞளதே.

4. வெல்லைப் பதியின்முத்தி கொடுக்கின்றேன் வனா
மூல்லைத் தலைமனுக்கடுதிக் கின்றே னிர
வுக்கும் பகலுக்குந் திரிபிக்கும்படி
யுச்சந்தனிலச் செங்கதிரச் சந்திர
னச்சங்களிலாது
சேவ்வைக்குறி கொடுக்குமிலக்கம் போலெழு
குவ்வைப் பிரவையிட்டொளிர் தற்கென்றே தலை
கத்தின் பிரிவிற்றங்க விதித்தும் புவ
னத்தின் பலவஸ்துக் தெளியத்தந்திரு
ளைக் கொன்ற விநோதர்.

வெய்யிற்கனலி மிக்கபகற் கென்றே வளர்
துய்யச் சசியுமற் றிரவுக்கென்றே சொலி
வைத்துந் திவர்மற்றுஞ் சமயத்தின் றொகை
யைக் கண்டறியப் பங்கொடு திட்டம்பணி
யிட்டங் கொளலானர்
தினநாலினெங்கள் கத்தன் வேலையே.

5. துள்ளிக் கடலலைக்கு ளடித்தும் போரிடு
கள்ளத் திமிலிமச்ச வளப்பந்தா னதின்
முத்தும்பல நத்துங்கன சித்துங்கலி
சுற்றும் பணிவைத்தன் சகலர்க்குங் கிரி

கிக்குஞ் செயலேது.
வல்லப்பு யலுதித்த துலேக்கென்றே சிற
குள்ளப் பறவைமெத்த வமைக்கின்ருன்—வன
லட்சஞ் சிகிலட்சங்கு யிலட்சம் பகம்
லட்சங் கிளிலட்சம் பலபச்சுமபர
விச்சென்றிடு நேர்மை.

சொல்லுக் கிருவிதத்தினு மச்சங்கோடிகள்
வல்லொத்த குருவிக்குளு மிச்சம்பார் நட
னப்பண்பு மிருக்குங் கடினப்பண்பு
படிக்கும் பரலைப்பண்பு துதிக்குங் கறி
கட்கும் பலதாகு
முரமாகுமைந் தினத்தின் வேலேயே.

6. தொல்லேக் கடலுடுத்த நிலத்தின்றாள் கொடு
பல்கச்சகர வகுப்பை யமைக்குங் காலே
கடத்துங் கரிதத்தும் பரிதத்தும் புலி
தத்தும் பசுதத்தும் புருவைச் சிங்க
வகுப்புந் திரள்கோடி.

யையர்க்குரிமையுற்ற மனத்தின் பாலவர்
செய்வித்த செயன்முற்று முணத்துங்கா
ணடவுக்கென்று ழவுக்கென் றுணவுக்கென்றழ
குக்கென் றமர்கட்கென்றிவர தற்கென் றமை
விக்கும் பரிபாலர்.

துவ்வத்தரையிலுற்ற வனத்தின்பால
ருளொவ்வப்புகழுவைத்த மதிப்பொன்ருேவுழு
வுக்கண்டலேயத் தந்திவரைக்குங் குறை
யற்றும் பழுதற்றும் பெருகத்தந்தரு
ளிட்டும் புகழாக
வுயராசிதந்துளத் துளாடினர்.

7. தெள்ளிப்புகழுரைத்த தமிழ்க்கன்பாய் வெகு
கொள்ளேப் பொருளளிக்க நினேக்குங் காரண
வித்தன் கனமுத்தன் றவசித்தன்றயை
வைத்தன் பரிசுத்தன் பரிசுத்தன் பரி
சுத்தன்றயவாக

வையப் பொருள்படைத்து முடிக்குங்காலுரி
மையிட்டிரு மனுக்கடமைச் சம்பூரண
லக்கங் கொடுயிர்க்கும்படி வெட்கம்படர்
துக்கந் துயருக்கும் பழுதுக்கும் பல
துக்குங் கெலியான

செவ்வித்தலைமை மிக்கேதனிற் றென்பா யத
மெவ்வைக் கழுகுறச் செய்தமைத்துந்தான வர்
சட்கம் புவியைத்தந்த தனிற்பங்கு செ
லுத்துங்களெனப் பொங்குசதுர்த்தம்பம
ளித்தும் புகழ் நீட
வறுநாளிலந்த மட்டுமானதே

8\. தெய்வப் பொருண் மகிழ்ச்சிபெருக்கும் பூரண
ஞெய்வுற்றிடு மதத்தையகற்றும் பாவல
னற்சங்கையு நற்செங்கையு நற்சங்கமு
நற்றுங்கமு நற்புங்கமு நற்பொங்கமு
நற்பங்கு முளாளர்

பொய்யொத்த நரகுக்கு வழிக்கொண்டே யெழு
மையக் கசடறுத்து விலக்கின்றேன் மகி
மைக் கஞ்சமலர்ச் செம்பதன்மைப் பஞ்சவி
கற்றுஞ்சிடமைக் கண்கனியைத் தந்த
தமைப் பங்கமிலாத

செவ்வைக் குணணியுற்ற வனத்தின்பாலருள்
செய்தக் கொலுவியற்றுஞ் சயிக்கந்தானுரை
யிட்டுங் கலையிட்டுஞ் செயலிட்டும் பறை
யிட்டும் பொறியிட்டுந் திறமிட்டுங் கவி
யிட்டுஞ் சொலலாகு
மதிஞாய மெண்குணத்த ஞடலே.

---

## 9. வண்ணம்

### ஆதிமானிடர்தோற்றம்.

**9.** விரு. தயை நிறைந்த பரன்விணினிறைந்த பொரு
டரை நிறைந்த பொருள் பலதுமே

சருவபண்பினுடன ருளியங்கை யொரு
தனிய தண்டலையினடுவிலே
செய நிறைந்த விரு நரரை விந்தை மிகு
செயலுடன் செய்ததி மகிமையாய்த்
திருவுளங்கனிய நிறைபலன்க ளொடு
திரள் வரங்களையு முதவியே
மய நிறைந்தவன மதிலெழுந்து நரர்

வரை யெழுந்த புடவியை யெலாம்
வகையுடன் பெருமை பெற நடந்துகொள
மறைகளின் பெரிய திருவிழா
நய நிறைந்த வெழுதினமு வந்ததென
நடை புரிந்து மறு செயலிடா
னலமதென் று பலதையு மகிழ்ந்தினிய
நளினவிங்கித நெறிகள் சொனன்.

தான தான தான தான தான தான
தான தானன தான தனன
தத்தனன தான தனன தத்தனன
2. தானன தத்தனன
தான தனதத்த தத்தத் தத்தத் தந்த
தான தனன
தான தன தனன தன தனதன.

1. ஆதியானனேக தேவராறுநாளி
லேவியோம ழமார்து பொருளோ
டித்தரை மேனீடு பலதாம் வஸ்துவுமே
மாதயைவைத் தொரு நேரோடு படைத் தியல்பாய்
ஞானவகத்துப் புத்திச் சித்தத்தன்பின்
மேலுமணியா

யேதன்மீதிலே மனுவ் விநோதமாயொ
ராதி மானிடனை வனையே
யுச்சித சாரூபமுடனே சிஷ்டிகர்தா
னே பணியற்புதமாய் நாசிகை புற்கலனு
மாவி விடுத்துத் திட்டப்பட்டுப் பண்பு
தோண வுடனே

யாதமாகவே யனுனிளுமே மோதி
நாலு வாய்மையதான வரமே
கட்டளை செய்தாசி மிகவேயிட்டினமே
பாதகமுற்றிடு தீதான தற்றபடியாய்
மேதினியுக்குட் சக்கரச் சக்கரிக்கண்ட
னுயிரெனவே
மாவழகு நிறைய வுட லுயிருமே

2. ஆன நீதிஞாய தேவஞான போத
தீதவேத புராண தவமே
நற்சுக மேலானபவுசே துக்கமிலா
வாய்மை மனத்தினிேனுடே பரிசுத்தமுமா
யாகநிறைத்துப் பத்திச் சித்துக்கென்று
தானருளியே

வாரிமேரு தீவு பாலை காடு நாடு
பூமிமீதுள சேனைகளையே
முக்கியமா யாளுமெனவே யுத்தமனு
ராதிதனக்கிதமே யாவலுறச் சொலிமே
லாகவமைத்துப் புத்திச் சுற்றுத்தந்த
னேகவளமா.

யாயனுர்தயாபமாக மேவியே யெ
நாளுமே யவனேடு லவியே
மெத்தவுமே நீதிசொலவே யத்தனையே
தாதையெனத் திடனேடேமொழியப் பரனுர்
மானிடனுக்குத்துப் புத்தக்கச் சொந்த
நேயமுடனே
வாய்மைதரு மகிமை சொலி முடியுமோ

3. சாதி சாதியாமனேக சீவன் வான
வீதிமேவிய சேனை குருகோ
டிப்புவிமேலார்து மிருகாதித் திரளோ
டூர்வன வற்றையுமே யாதமிடத்தியல்பாய்
நாடியழைத்துக் கிட்டக் கட்டுக்கொண்டு நாமமிடவே

யேகதேவனேத வாதம் ஞானமோடு
சீவனுன பிராணிகளையே
தக்கதுவே யான மரபோடக்கணமே

நாமமிடத்தகவே யாமென வற்புதனூர்
தாமு நிசத்துக் கொப்பித் தப்புத்
தந்திலாத தெனவே

சாகை கூறயாவுமாத மோதும் வாறு
கீழதாய் வழுவா தொழுகவே
யிட்டமதாயேவல் செயவே சொற்றவரு
வாசக சத்தியமோடாதரை யுற்றதெலா
மோர்குடையுக்குட் கட்டுப்பட்டுச் சென்ற
மேன்மை சிறிதோ
மேவிவளரரிய வனநடுவிலே

4. சாரி சாரியாக வாழை மாபலாவு
சீனிமாதளை கோடிவிதமோ
நெற்செடியோ பாளைவிடு தேனற்பனையோ
நீள்கமு கெத்தனையோ நேர்மகிளெத்தனையோ
காவுயர் பக்கத்துக் கொக்கிக்குப்பண்ப
தானருசியே

கூடிவானமே யளாவுகேதர் நாவல்
சூழுமா வழகான வனமே
திட்டமதாய் ஞாலநடுவே வைத்தெழிலாய்
நாலுநதிச் சலமேலாடி வனத்தினினூ
டோடியு மெட்டுத்திக்குத் தட்டிக்கெம்பி
வீழ்கும் விதமோ (1 மோ. 2, 9-11.)

சாலைமீது தேவர் தானுலாவுவார்கள்
காவினோர் நடுவாக வளமாய்
நற்பெரிதோர் சீவமரமே யத்துடனே
ரோதிமரத்தையும் வேறாய் முளைவித்த தன்மே
லாதிதிருட்டித் திட்டத் திட்டத்துங்க
னவனையே
மேன்மைமிகு மரிவையுடன மையவே

5. மாதை மாவிசேட ரூபமாகவே செய்
வோமி நாமென்ன யோசனையிலே
சிஷ்டிகளூராதி தனியாய் நிற்பது தீ
தாமென வக்கணமே மானிடனைத் துயின்மீ

தேயுமடைத்துப் பக்கத்தத்திப் பங்கி
னோர் பழுவையே

சேர்விலாவி னூடுவாரிமே தையாலே
மூடி மானிடனோடு துணையாய்
வத்தனையாய் மேவிவரவே கற்புறவே
தோகைமயிற்கிணை சோடா மெனவுற்பனமாய்
வேதவிசித்திரச் சித்துக் கொத்துக் கண்ட
மேனியுடனே

மாசிலாத பாவையே செய் தேவையாக
நாமதேயமுமாத மிடவே
பக்கிஷமாய் மாதை வலமாய் வைத்துடனே
யாசியளித்துலகூடே பெருகத்திடமாய்
நேயமணத்தைக் கட்டிக்கட்டிக் கொஞ்சி
வாழ்கு மெனவே
தேவர் தருமனைவியுடன் மொழிகுவான் (1 மோ. 1 : 28)

6. மாசினேகமேய தீதமானமேயெ
ழுவியே யொளிவான மதியே
யற்புதமே தேவசெயலே நற்கனியே
யேக துணைக்கெனவேயான தவக்கொடியே
ஞான வரத்தைப் பெற்றுப் பொற்புக்கண்ட
பானிஞெளிவே

தேடினாலுமே வாரத நேர்மையான
தூயமா பொருளான மணியே
ரத்தினமே கூவுகுயிலே துப்பரவே
சோபன மெய்ப்புறவே பூவுலகுக்கரசே
பேசிய தத்தைச் சொற் சொற் சொற்கத்தின்பெ
ணேவிண் மணியே

வாலே சேர்பிராயமே மனுபிஷேக
மேகணே யெழிலான வனமே
பற்பனியே தேன்மதுரமே மொக்கிஷமே
பாலமிர்தக்கட்லே மோகவிதச் சுனையே
கோகன தத்துக்கொப்புச் சொக்குத் தங்கு
தீபசுடரே
தேயமதினுள பொருளி னதிகமே

7. வேதனுர் விநோதமேவி மானமேவி
சேடமே தெளிவான மணியே
சித்திரமே கோடிரவியே சற்குணமே
கார்முகின்மைக் கடலே நீள் விழியுட்கயலே
பாவுண் மறைப்புச் சொற்குட் கட்டித் தங்க
மான நயமே

லீபனேனின் மேவுகேதர் சாயலேக
ணுடியே பெரிதான வறமே
நிச்சயமே வானவடிவே சொற்கலையே
பேரழகுத் தமியே நால்வர முற்றவளே
சாதுகுணத்துச் சுத்தப் பத்திக்கன்பின்
ரூபவதியே

மேன்மையான காவிலே குலாவி நீடி
வாழ்க மேவிய நேசமனேயே
பொற்கொடியே ரோசமலரே சற்சனமே
சேர்கனியிற் சுவையே யாலிள நற்றளிரே
தேறலினிப்புத் தட்டுச் சொற்கரும்ப
தானரசமே
கோவை நிகர் பவளவிதழ் வனிதையே

8. வீதமேயென் மேதையான மேதையேமி
னேகளே பரமேவிசையமே
யுச்சிதமே சோதிமயமே யிப்பொழுதே
மானிட னத்தியிலே நீ யெடுபட்டதனுன்
மானிடத்திப்பட்டச் செப்பத் தின்ப
நாமமமைவா

யானதா லிவாறுமாதினேடு தாதை
தாயை யார் வலன் மாறி யிசைவான்
விக்கினமோர் பேதமடார தொப்புரவா
யோருடலுக்குயிரா யோர் சதை யொப்பனேயே
நேர்மை விதத் துத்திட்டப்பட்டுப் புங்க
மாவரெனவே

வேதனு ரிதோதினுர நேரமாத
மேவையோ நிறுவாணமுடனே
வெட்கமிலா வானசுரர்போலுத்தம சீர்

வாழ்வு மிகுத்தவராயே தன் வனத்தினிலே
மேவுவிதத்தைச் சற்றுக் கற்றுக் கண்டு
நாவுளவரே
கூற வெளி தலவதொரு புதுமையே

---

## 10 வண்ணம்

### ஆதிமானிடர் தோத்திரம்.

10. விரு. சார்ந்த வெழுந்தின மாண்டகைபண்டிகை
தான்றெழ வென்றதமே
சாந்த வணங்குடனேய்ந்துற வங்கொரு
தாழ்ந்த னலின குழியூ
டேர்ந்த கொடுங்கணம வீண் கெறுவங்கள் கொ
டோங்கி யெழுந்தடமா

யூங்கின் விடந்தரு பாம்பினெடுஞ் சட
மூன்றி நடந்துடனே
சேர்ந்து வனந்தனில் வாழ்ந்துறையுந் திரு
வாஞ் சிறு மின்புறமே
தீங்குடன் வந்தொரு பாங்கனெனும்படி
தேர்ந்த நயஞ் சொலியே
போர்ந்திடு வஞ்சனை யோர்ந்துள நம்புதல்
பூண்டு கடுங்கனியே
பூந்து பிடுங்கிய மாந்தர் விழுந்தபோ
லாங்கை விளம்புவமால்.

2. தான தனந்தன தானத்தன தன தன
2. தான தன தன தான தன தானன
தந்தன தனன தன தானன

1. ஆதம்விருந்தனையே வைக்குமே யனுதிய
னல்வரமுந்திகழ் ஞானத்தினன் மகாபல
னுருயருள் கிருபாநிதனுளென
மேழாவது தினமானதனிலே பல

வேலை யொழிந் தழகாயுச்சமாய் வினோர்பர
தீசி நெடுந் தருசூழ் நெட்டிலே மூகாமையி

ஞோர் தாருவினுயர் சீவமர நீழலின்
பேரோரறிவின் விசால மெதிரேயுற

வாதி பரம் பொருளானத்தையே சொலார்புக
ழோடு பணிந்து மனோபத்தினகவே யொரு
தேவாவெமை யுலகூடுறு மஞானர
ரூபாயமையும் விவேகமுயர்வான துன்
விந்தையா லடியவரை மேவுவாய்

2. ஆரண சம்பனனே நித்தனே விஞ்ஞா
னரசே புவியெங்கும் விலாசத்தனே செயாவரு
ளானே சரீர மிலாத வருபாசுப
வானோர் நவகண சேனையுடை சூழ் திவிய

மாதவ சுந்தரனே கத்தனே மகாசுவி
சேட துரந்தரனே சுத்தனே தயாபர
சீலா பவவிருடீ திடருறு துயர்
நேயாமகிழ் நிறைவான பரிபூரண

வாசை தருங்கடலே நிஸ்களா மனோகர
மாகவு மெங்களையே புஸ்பகாவிலே கன
வாழ்வோடிரு மெனவே யளவிலா நெறி
யோடே யெமை முடிசூடிய தயாநதி
விஞ்சையா கிருபை நிறைவேதனே

3. வேதபரஞ் சுடராதித்தனே யெஞ்ஞாழியும்
வாழ்வுசிறந்தவனே யுச்சமா யுலாவிய
நாதாமனுடர் கணவினுரையாலும்
விஞ்ஞோர் தானருளிய கீதவிசையாலுமுன்

மேன்மை மிகும் புகழே சற்றுமே சொல்வாரிலை
வாய்மைகளுன் திருவேதத்திலேயு னேர்மையை
யார்தா னறிவர்க ளாருமறியார் துணை
வேறே துணை யலதே தொரு சினேகிதர்:

வேகமிருந் துணையே மெச்சியே மெயாயுற
வாகநினைந்து சலாபத்திலே கைசேர்வையி
லே தானிரு கழலே தினமுமே தொழு
வோமே யெமதுயிரான பரனே யென
இந்த வாறிசையு மொரு நாளிலே

4. மேள முழங்கிய தாளத்ததி ரதீரென
வானின் விளங்கிய காளக் குலோர் குலோரிடு
சீரார் தருவுடன் ஞான செபமாலை கள்
வாகாகிய கலைநீடு வணமானதும்

வீசியருந் துதிபாடிக் கிளைரமேகையி
னேரொடு கொண்டு திடாரிக்கமாகவே பல
வானுதி பரதி தூதர் கதிலாசியர்
ஞானுதி சயபிரகாச நவசேனைகள்

வீணைகளுங் குழலான் முட்டியே துதூமென
ஆதியெழுந்து பிரதாபத்தகா வகாவென
நாலாவித பத கீத வொலியோடொரு
சாதாரண மறையோது பரமானதி
லின்பமாயுலவு சருவீசனே

5. தூதர் கடங்களையே யிஷ்டமாகவே செய
லொணுவமிண்டுடனே தத்தியே பராபர
ஞேடசரி மொழி பேசி யெதிராடிய
வேதாள படைகளானதை யெலாமெரி

தீநிரையந்தனிலே நித்தமே யயோவென
வேகதறும்படியாய் விட்டுமே கொடூரம
காவேதனையுறவே செய்துடனே நிறம்
வேறாயுருவ சொரூப மிருண் மூடிய

சூளை யெழும்புகை போலுக்கிரமா யடாதது
சீறியெழுந்து பிசாசுக்களாய் மடேரென
மீளாநரக சுவாலையினில் வீழ்கவும்
வானேன் முனிவுடனே மொழியலாகின
னந்த நாள திகெறுவமாகியே

6. தூடணவங்கையோ டேதுப்பிலா தகூளிகன்
கூடியெழுந்து புகாரிட்டுமே பொருமையி
ஞலே மனுடரையே கறுவியே யவர்
வாழ்வே யழிவுறவே வினையமே செய்.

மேவிவெகுண்டடர் காவிற்சரேர் சரேரென
நீளரவந்தனு ரூபத்திடர் திடீரென

வாதாமுதலமை வானபடியா லவன்
வாயே செல்விலைமாதினிடமே யொரு

தூது நடந்தவளோ டொப்புசலாப வாய்மைக
ளோதி நயம்பெறவே யெத்தியே சினேகித
தாயேவளமிகு சீவவனமீதுமை
யாயோனருளிய மேன்மை பெரிதேயென
வன்புபேசியும் வினையமாகவே

7. சாதிமடந்தையரே சத்தியே பொனேபணி
சூழ்பரஞ்சியிலே மிச்சமே கணேயதி
ரூபாகிய செகசோதிமயமே மயிலே
கோகில வனமேகிளி சரோருக

பாதபளிங்கொளியே யஸ்பியே கோமேதகமே
வளரும்பிறையே முக்கியமே மனோன்மணியே
ரோசவின் மலரே கனியிலேயுறை
தேனே பரிமளமே பவளமே தமிழ்

சார்கவியின் பொருளே தற்கமே விேனான் மக
ளாகு மிளங்கொடியே பட்சமே சபாசுபொன்
மானே நடுவனமேவுமொரு தாருவி
னூடார் கனி தினலாதவிதமேதிது
சிந்தையோ டுரை செயெனவோது வாள்

8. சாலைவனம்படு சாலாத்தலா முளானவ
னேகவிதங்கனியே துய்த்துய்வீ ரிதே நல
மானுனயமிடர் தானறி பலாசியி
னூறாழ் கனிபொசியாமல் வழியோடிரும்

வீவுவருந்திடனே யட்டியே யிலாதென
வேதன் விளம்பினதோர் செப்பமே மினாள் சோல
வோத'ள நகை செய்தே கவடலோ விது
தீதோராணுவிலை மாய்வுமிலை யார்தல்செய்

தானவனின் கொலுமேவிச் சமானமாயர
சாள்வ தரிந்ததனலத்தனரு ளுதுசெய்
தானே மடமயிலே யெனவ்வேளையி

லேவாள் மனதின் விகாரமுடனே கனி
தின்றுமே பவவினையின் மூழ்கினாள்.

---

## 11. வண்ணம்

### பாவ விழுதல்.

(விரு.) அரவானது கவடாய்முன
மனை யேவையினிடமே
யறமே கெடுதிகளாகிய
மொழிகூறிட வவளோ
பரனார் பகர்மறைமீறிய
படிகாவ தனடுவே
பவமானது நலமானது
மறிவாலறி மரமே
கரமே கொடுகனியானது
களவேசெய் தணுகியே
கனிவாய் மணமகனோடவ
டினமாசற லழிவாய்
வரநாலவை தவறுனது
மயனாயுத னவர்டால்
வரலாகிய கதையாவையும்
வகையோடினி மொழிவாம்.

4 தனனதன தானதந்த
4 தந்தன தானதான
தானதன தானதன தனதன

1. அரவி னுருவாக வந்த
வலகையனை யேவையண்டை
பகரு மொழியான தந்தை
விபரமுடனே விளம்ப
வந்தமிலாத சோதியிந்த விசாலமான
சுந்தரசீவகாவை நந்துதனேர்மை நேர்மை

சகலவித தாபரங்
கணடுவினுயர் வானநன்றி
டர்களையறி தாருவின்

கனிகளை யயிரா தமெதந்த
விந்தைகளோ சொலாயணங்கெனவே பிசாச
டர்ந் துரைகூற வாத
மங்கைய தோடுசாவி

யதிகிருபையே நிறைந்த
வொரு பரம தேவனிந்த
வனமதினிலே யெழுந்த
பல தருவிலே பழங்க
டினறிட வாய்மை யோதிநன்ருடு தீமையாய்
தலின்றருவூ ருணதருந்திட மாய்குவீர்கள்
சாவுறுதி யாமெனவும் விலக்கினர்.

2. உரிமையுடனே சுயம்பி
னுரையினெறியே நடந்து
நடுவனமாக நின்ற
விலகுமரமே செறிந்த
புன்கனியே தொடோமனந்த னைநாளிலே
நஞ்சுரு தீயதாருவின் கனியார்தவீவு

வருமென வெமோடறைந்த
துறுதியென மாதுவந்து
மொழியவதி கோரவஞ்ச
வலகையவ ளோடியம்பு
மொன்று மிலாதகாலே சுந்தரமேன்மை நீடு
தஞ்சொயரூபமாய் வனைந்த சுவாமிநாத

னுழியவுமை யேகனன்ற
ழியவும் வதையே புரிந்து
கொலுவ திலேயேமதங்கி
மரணம் வருகாது நம்பு
சம்பரமமாக நீயுநன்றறி சாலமீத
ருங்கனியார் துயானவின்ற சொன்மீறிடாது
தீவிரமதாய் நுகருமரிவையே.

3. வரமிகுதியாகி யுங்கள்
விழிகளதுவே திறந்து
நலமிடர்க டானறிந்த

மலனினிகரா யுயர்ந்து
துன்பமிலா தெநாளுமின் பதிகாரமேசெய்
தன்புறவாழ்குவீ ரனந்த வைபோகமாக.

பலநினைவெணு திணங்கி
தெனதினிய போதகங்கொ
ளொருகுறை வராது சங்கை
யணுவளவிராது மங்கை
சிந்தனையே படாதெழுந் தழகான தாரு
வின்கனியார்து மேல்வரும்பல ஞேய்விராது

வயணமி தெலாமுயர்ந்த
கடவுளுளமே தெரிந்த
தறிவின்மர மேன்மை கொஞ்ச
மலவெகு பிரதாபவிந்தை
தண்டலையே கொளாதெழுந்த பலாசியூடி
தொன்றுத வாததேதசென்று சலாபமாக
வேவையுட ஞசலகை வினவவே

4. இரவி யொளிவாய் வளர்ந்த
வமிர்தரச மானவின்ப
மதிவனிதை தானுமங்கு
மரமிசைக ளுகியுண்க
நன்றிதுபார்வை யூடலங்கிரு தமாமலாது
புந்தியைநேர் துமேன்மையுந் திகழ்ஞானதாரு

மதுரகனி நாமருந்த
மகிமை திறலேமிகுந்த
கடவுளுடனே சிறந்து
சரியிணைய தாயுயர்ந்து
சந்ததம்வாழ்க லாகுமென்றுள நாடியாவல்
பொங்கிய நேரமே பழங்கொய்து தானுமார்தி

யினிமையெனவே மகிழ்ந்து
கணவனெதிர் போய்முனின்
றவனையுமுணவே வருந்தி
யிருவர்களுமே விழுந்து
சஞ்சலமூழ்கி நாணமிஞ்சிய தாழ்வினேடு

தும்பரசாகை மேலணிந்துரு மாறினூர்கள்
பாவவிருண்மூடி மதி குறுகினூர்
தும்பர் = அத்திசாகை = இலை

---

## 12. வண்ணம்

### ஆதிஞாயத்தீர்ப்பு.

(விரு.) அண்டம்புவி யெண்டிசையுந் தருசீ
ரன்புந் தயவும்பெருகும் பெருமா
னந்தம்ப டலங்கிருத செஞ்சுடர்போ
லங்கந்திக ழும்பர்வளைந்திடவே
தண்டும்பயிரண்ட மதிர்ந்திடவா
சங்கம்படு நந்தவனந்தனிலே
சம்பிரங்கொ டெழுந்துவிரைந் துடனே
கந்தங்க நவின்ற மரந்தனிலே
பண்டின் பழமுண்டு மயங்கியுமே

பண்பன்றி விழுந்தவர் தங்களையே
பங்கங்க டொடர்ந்து மடிந்தழிதா
பந்தம் படுமென்று குணுங்குடனே
தெண்டம்படவுங் கெடவுஞ் சிறைசூழ்
செந்தங் குறவுங்கடம் விண்டினமே
தின்குங் கனியின் பழியொன்றறவே
சென்றன்பு புரிந்தவி தங்கள் சொல்வாம்.

தானதனந்தந் தனந்தத்தந்
தனத்தத்தா தனத்தானன
தானதனந்தந் தனத்தத்த
தானதனத்தத்

2. தனதானதான தனதானதான
தனதனனெ தனனதனதானனெ

1. சூரியனுங் கண்டிதம் பட்டும்
பறக்கத் தாரணிக் காகிய
வாருதியின் சஞ்சொ லிச்சத்த
மாகநவி னித்தர்

துணைநீடு தேவமறை வேதபோத
சுபஞான தீபவொளி வானசோதி

கேருபினும் பரஞ்சுற்றுந்
துலக்கத்தோ டெதிர்ப்பாகிய
வாகனமுங் கொண்டதிற் சற்று
வாச பரிசுத்தர்
கிரிமீ துலாவுபொரு ளாதிமூல
கிருபையாளனான திரியேக தேவர்

தூயமிகும் பங்கயஞ் சிக்குந்
திறத்துச் சேவடித் தாளிணை
யாவர்களுங் கண்டகத்துக்கு
ளேமிகவு மிக்க
துணிவோ டெநாளுமதி நேயமான
துதிபாட மேவுசுவி சேடசீலர்
மகிமையி னுசனவல பிரதாபனே.

2. (கலி.) மண்ணோர்கள் பாதலத்தோர் மற்றனந்தமண்ட
லத்தோர், விண்ணோர்களாயினு முன்மேன்மை சொலக்
கூடியதோ, பெண்ணேவை செய்தபெரும்பிழையைத் தீர்க்க
வந்த, கண்ணேபூங்காவிற் கனன்றுநடுக் கேட்டனையோ.

3. தூதர்களுஞ் சங்கிதங் கொட்டுந்
திருத்தத் தோடிசைத் தாடிய
கோடியனந்தம் பரத்துக்குண்
மேவரிய பத்தர்
தொனிகாளமாய குழல்வீணை நாக
சுரமேள தாமெழுகோடி பாடல்

சீரணியுஞ் சிந்துடன் கட்டும்
பதத்துக் கோவையிற் றாதுகண்
மாலைகளும் பண்பிசைக்கொத்த
ஞதியொரு வஸ்து
செயல்ஞான நீதியுள தேவதேவ
னெனமேன் மையாகவதி தூதரோடு

சோபனமுந் தென்புடன் செப்புந்
தவப்பத்தி ராசனத்தோர் தொழு

தேவனெழுந்துங் கதிக்கொத்த
காவதிர மிக்க
துரிதான வோசையுட னுதமே யெ
விட நீசொலாயெனவு மாதமோடி
மரநடுவே யொளிய மனையாளுமே.

4\. (கலிப்.) சங்காரகத்தன் சமஸ்தபொருளும் படைத்தோன்
சிங்காரக் காவினடுத்தீர்வை யிடவந்தருளி
யெங்கே நீயாதமெனக் கூவவேவையுட
னங்கோர்தருவில திர்ந்தோடிப் புக்கினனே

5\. ஆரியனின் றங்கிடுஞ் சத்தஞ்
செவிக்குட் கேள்வியுற்றே யத
நான மணங்கொண் டிகழ்ச்சிக்கு
ளாய் மிகவும் வெட்கி
யடர்சோலை மீதொளியவே செய்தேனெ
னவுமார் திருவாணியெனவோதினர்சொல்

நான்விலகும் புன்பழங் கொய்துஞ்
சுவைத்தற் காமெனத் தீதுட
னேனதை யுண்டிங் கிகழ்ச்சிக்கு
ளாய்மதியு மற்று
நயமேன்மை போகவர நாலுமாற
வுலகூடு சாகமுறையோ தகாது.

ஆமிது துன்பந்தருந் துப்பங்
கிலேசற்றே மனத்தேகினே
யாதுமரிந்துங் கனிப்பித்தை
யாசையுட னற்றி
யநியாய மாயுணவும் ஞாயமேதெ
னவும்வேதனர் வினவும் வேளையாத
மிகழ்வுற வாதிபன்மு னெதிராடியே.

6\. (கலிப்.) ஆதாநிருவாணி யர்னதனை லயனுரை
காதாரக்கேட்டுக் கலக்கமுற்றுப் பூங்காவின்
நீசேமறைந்த விதமுறைக்க வித்தகனர்
தீதாய் நறுங்கனியைத் தின்றனையோ வென்றனனே.

7\. ஆடவளென் றன்புறும் பொற்பின்
றுணைக்குத் தானினத்தோ டரு

ளேவையெனும் பெண்பயிற் றிச்சை
மீறுகனி பற்றி
யதிநேயமாய் விரைவினேடு சாவி
யெனைநாடி மாயமொழி பேசநானு

நேர்பணியுந் தந்தணங் கெத்தும்
பயிற்சிக்கான் மிகத்தான் மய
லாகி வருந்துங் கனிக்கொப்பி
யார்தி யருளற்று
நெறிநீடுன் வேதமறை மீறினேன் மின்
வாழியான தோடமிதுவே சுபாவம்

ஆகொடி தென்றெண்குணன் பக்கம்
பயத்திற் காதலித் தோதிய
மானிடனின் பெண்டினுக் கச்ச
மாக வசனிப்ப
ரடமாக நீயிதனை யாடும்வாற
தெனவே மையே சொலென நீதியாள
ரவையுட ளுதியினடுவி ளுவினன்

8. (கலிப்.) ஈசாநீர் கட்டளையிட்டென்பா லிருக்கவைத்த
மாசாலப்பெண்டீர் மரத்தின் கனியளித்தா
ளாசாகத்தின்றே னென்றுரத மறைத்த தற்பின்
வேசாரலாய்க் கடவுண்மன்னை வினவினனே

9. காரிளை வஞ்சம்பெருஞ் சற்பம்
பயிற்றித்தா ரிடத்தோர் பழ
மார்த நவின்றுங் கலைத்திட்ட
மோசவலை சிக்கி
மதிபோயு மாயகனி மேயலான
னெனவேவை யோதவசரீரி பேயை

நீமுனையுஞ் சங்கடம் பட்டும்
பரத்திற் கீழ்விழத் தாவினை
யாயினு முன்றன் புலைச்சித்த
மேகவி லையற்று
விடமேறி யாதியுட மாதைநீக
வடமாக ஆறுகனியார் தவேசெய்

காரிய பங்கம்படும் பொய்க்கஞ்
சகத்திற் றாடனைத் தானுணு
வாய்வயிறங் கந்தணைத்தித்து
ரோகியென லச்சை
கடிதாக ஆர்வனவு சீவன்யாவி
னிலுநீசனுவை யுனின்மீது சாப
மூகமதிலே யுனதிடர்க ளோயவே.

10. (கலிப்.) சற்பமெனை யேய்த்ததனுற் ருருகனிபொசித்தே
னற்புதனே யென்றாளரிவையைக் கேட்டான பின்பு
விற்பனன் வெதாளத்தின்மேற் சினந்து சாபமிட்டுச்
செப்பின ஞாயத்தீர்ப்பின் செப்பமகா பாரதமே.

11. காரண வின்பந்தருஞ் சித்தங்
கெலிக்கச் சேதனைப் பாவிக
ளானவர் துன்பந்தவிர்த் துய்க்க
மாதினுட வித்தி
லுருவாக மேதினியி னூடுநாமும்
விடுகாலே தீயகடி நீயடாது

சீறியெழுந்துங் குறும்புற்றும்
படத்திற் றுடனைக் கேறிடு
வாயவருன் றன்தரத் தெத்தை
மாய்வுறவு மிக்க
வதிராக வேவன்முடி நாசமேசெய்
குவர் பாரமான பகை நாமுமாட

காரிகை தின்றும் பழம்பற்றுங்
கலக்கச் சேகளேப் பாரதி
லேபெறு துன்பங் கதித்திட்டு
வாதையொ டனத்து
கனசோப மோடுபெறு வாயுனுசை
பதிகீழதாகும வன்மேவி யாள்வ
னூரமெனவே யரிவையுட னேதினன்.

12. (கலிப்.) சத்துருவேயுன் றரத்தைத்தானுடைக்கவிஸ்திரியின்
வித்திலொரிரட்சகனே விட்டருள்வோ மென்றதற்பின்
சித்திரப்பெண் ணேவையுடன் றேகமெற்ப வேதனையை
வர்த்திப்போ மென்றான்மகிமைப் பராபரனே.

13. பாரினிலந் தஞ்செழுந் துப்பின்
றருக்கட் காய்பறித்தே தரு
காதலியின் சொற்றொடர்ப் பட்ட
வாதியுடனத்த
னிதமாக நாமுடனே தும்வாய்மை
தனைமீறியே நின்மனையாள் சொனடி

வீவுவருந் தும்பருங் கொத்தின்
பழத்தைத் தானுகர்த்தா யதி
னுலகெங்குங் குறுக்குற்று
நீண்மு ளதுபற்றி
படுசாப மேதினியின்மீ துன்வேர்வை
விழநீசெய் வேலைதிர ளாவதாலே.

பாடுமிகுந் தங்குளந் துக்கம்
பதைக்கத் தானினித் தீவன
மேபொசி யெங்கும் பரப்புற்ற
தூசிநிக ரொத்த
படிதாழ் வைநீபணைத னன்முனை
யினிமேலு நீமணிடை போவாயாக
விகலமிக வழிவுறுமுன் மேதையே.

14. (கலிப்.) உற்றுன்மனையாள் சொல்லுவந்தெனது சொன்மீறி
யற்றகனி தின்றதினு லம்புவியின்மேற் சாபம்
நெற்றிவியர்ப்பம் விழநீ போசனம் பொசிப்பாய்
முற்றினுமணுப் போவாய்முன் மண்போலென்றனனே.

15. பாவிகளங்கம் புகுந்துக்கம்
பெலக்கத் தானுறைத் தேமொழி
போத நவின்றும் பொழிற்புக்கி
வாழ்க விடமற்ற
றுதியாய் முனுதமுரு வானவேத
னிலமீதிலேய விருபேருமேகி.

வேலைவ னைந்துந் தடம்பட்டுந்
தலத்தைத் தான்விரைத் தேபயிர்
வேகிமையுந் தந்திடத் திட்ட
மாக விடையிட்டு

மெலிசான தோலினுடையே செய்தாதி
யெவைமான மூடியதி வீரமோடு

பான்மை விளங்கும்பரன் சுற்றுந்
தூரத்திக் காவினிற் சீர்மிகு
சீவசுகந்தந் தருப்பக்க
வீதிநடு மக்கள்
பலனுனதே கொய்தயிரா மல்வாண்மி
னிரு கேருபீனை வழிகாவலாக
விடுமிறை நீதிகண்முழுது மேன்மையே

16. (கலிப்.) ஆதமுருவான நிலத்தைப் பயிரிட்டே பிழைக்க
வேதன் வனத்திலிருந்து வெளியே தூரத்திக்
காதலித்துச் சீவகனியைப் பொசிக்காமற்
பாதையில்வாண்மின் சுடர்ப்பட்டார கரைவைத்தனனே.

---

## 13. வண்ணம்

### ஆதிமனுடர் புலம்பல்.

(விரு.) அதிமகத்துவ மிகு கிருபையினுய
ரரசனட் சயருட்படை யனுதின
மடியருச் சனைசெயு நிறைமகிமையி
னமலனுக் கிரவனலெரி நெறியுளன்
மதிமுகத்தினை யுளவெழி லனமெனு
மலர்கமழ்க் குழலெவை நுகர்கனியுட
மறமதற் கவர்களை நடுவருளியு
மறுகவக்கணம் வடகவுடை கள்செய்து
சதிமிகுத்திடு மலகையோ டுறவிடு
தமியருக் குதவியுமறு படியுயிர்
தருவனத் திடையொருகண மெனுமவர்
தருகிநிற் கொணதென வதிவிரசொடு
துதிமிகுத் திடுபரன்வெளி யதின்மிகு
துரிதமுற்றெழ விடுபொழு தவர்படு
துயரமிப்புவி தனின்மிக வொழுகிய
சுகசரித் திரமுழுவது மொழிகுவாம்.

2. தனன தநதனனு தந்தனனு தனந்தன
3. தந்த ததனன ததத
தந்தனதான
தானதத்த தானதத்த தானனு

1. படியதிர்ந் திடவேயிங் கிதமாம்
வனந்தனி
லுயர்பரம் பொருளார் வந்துடனே
யதந்தனே
யந்தச்சண மழைத்தருந்திக் கனிருசித்த
வங்கப்பவ விணைக்கதிர்ந் திடலான

நெறிகள் விண்டிதமா யங்குடனே
திரிந்தெழு
மிருகவன் புனிறேகஞ் சுகமாய்
வினேந்தவை
தந்திட்டணி வனத்துணின்றப் புறமகற்றி
ரண்டெட்கெரு பினுக்குமின் சுடராடு

படர்வு கண்டகமே தந்தெதிர்பூ
ருவந்திசை
வழியடர்ந் திடவேயுஞ் சொலியே
நரன்றனே
முந்தப்பரனமைத்த மந்தைப் பெருநிலத்து
ளண்டிப்பயி ரியற்றுமென் றதினூடு
தீபுரத்தி லேதுரத்து போழ்திலே

2. பதறி யஞ்சிடுவார் நெஞ்சினிலே
யறைந்திட
ரெனமொழிந் திடுவார் துன்புறுவார்
தரந்தனி
லுங்கைக் கெதிரடித்தலங்கக் குழல்விரித்தி
ரங்கிப்புன லுதிர்த்துவிண் டொலியாக

வழு திரந்திடுவார் நொந்திடுவார்
சடந்தரை
விழ மயங்கிடுவார் வெம்பிடுவார்
வனந்தனின்

முன்பற்றிய சுகத்தை மஞ்சுக்கனிரசத்தை
விந்தைப்பல வரத்தையுந்தி யின்மீது

பட நினைந்திடுவார் கெம்பியுமே
பெரும் பகை
விளைய வந்தது பேயென்றிடுவா
ரடர்ந்தெமை
வஞ்சத்தொடு மயக்கிநஞ்சுக் கனிருசிக்க
வெந்தப்படி யுரைத்தெதிர்ந்ததுகூளி
தீவினைக்கு ளாசைவைத்த பாவமே.

3. இடி யதிர்ந்ததுபோல் வந்ததுவோ
பரன்திரு
வுரை மறந்ததுவோ சஞ்சலமோ
கணஞ் சொலும்
வண்டப்புலையுளத் தினம்பிக்கெ றுவம்வைத்தெ
மெந்தைக் கடவுளுக்கு முன்சரியாக

வமையவுந் தினதோடங் களிதோ
மிகுங்கன
பெருமை கொண்டதுவோ வஞ்சகமோ
செபம் பல
சிந்தித்திட வயர்த்துநன் புத்தியைவிடுத்த
கந்தைக் கனியைநற்றி நின்றுகளைலை

யினிதி தென்றதுவோ செங்கையினு
லடர்ந்தவை
திருகி யுண்டதுவோ வென்செயலா
நெடும் புவி
யங்கப்பொரு ளனைத்தும்விண்டிப் படிகொடுத்து
வன்பிற்குரிய கத்தர்சங் கைகயைநாடி
மாபரத்தர் சீர்மறுத்த தோடமே

4. எனநினைந் திடுமாத ம்பினுமே
யடர்ந்தெவை
தனையெதிர்ந் திடவேயுஞ் சினமாய்
விளம்புவ
னெஞ்சிற் பயமதற்றழிப்புக் கனிபறித்து
வந்திட்டெனையலட்டியுந் தருபோழ்தி

லதைய யின்றிடுகே னென்றனனே
திரும்பவு
மெனேவருந் தினேயேவஞ் சகியே
நலங்கொடு
கொஞ்சிப்புலே யுரைத்துமிஞ்சப் பெருமைவைத்தி
ரங்கிச்சல முதிர்த்தறை ந்ததனுலே

யிதமிதென் றுடனே தின்றனனே
யருந்தின
பலனடர்ந்ததுவே யெங்கனமே
நடந்தினி
யெந்தத்திசை யினுக்குளெந்தச் செயலமைப்ப
தெந்தப்படி பிழைத்திருந் தினிமேலும்
வாழ்வுபெற்று நாமிருக்கும் வாறெதோ

5. அடியதிர்ந் திடவேயுந் துரிதாய்
நடந்தெனே
நுகருமென் றிடுபோதுன் சொலேயே
யுவந்தது
லன்சொற்களே விடுத்திடும் புக்கடுபழத்தை
யுண்டிப்படி தவித்துழன் றிடுகாலே

யமலன் வந்திடிபோலென் றனேயே
நடுங்கிட
வுரைபகர்ந்திடு போதங்கணமே
மரந்தனின்
மிஞ்சத்திகில் பிடித்தடங்கிக்கொள வொளிக்க
வந்தத் தருணமிக்க வெண்குணதேவ

னறையு நன்பறை மாறும்படியா
யெதிர்ந்துரை
நவிலவுஞ் செயவே யென்பவமே
பெரும்படி
யென்றப்பனு மிகுத்த தெண்டிப்புட னுரைத்த
கண்டிப்பதுகளுக் குனின் செயலீடு
தாபரத்தினு விடர்க்குளாகினேன் (அமலன் = கடவுள்)

6. அய்யோ வென்றிடு மாந்தனிரு
டணங்கெனு

மெவை நவின்றிடுவாள் வன்கடிதா
னிரும்பையி
னங்கத்துட னடுத்து நெஞ்சிற்றயை மிகுத்து
நண்புற்றுற வெடுத்து வந்தனமாக

மொழி பகர்ந்ததுவே தென்புடனே
தொடர்ந்தடு
கனி யருந்திடுவா யென்றதுவே
யதின்சொலே
யின்றிப் பரனுரைத்த நன்சொற்களை யுறைத்தும்
வண்டத்தன மிகுத்தடர்ந் திதமாக

வதிநயம் பெறவேயுந் திடமாய்
நெருங்கியெ
னுரைகள் சங்கையதோ வென்றதுவே
திரும்பவு
நம்பிக்கையி லெனக்குநிந்தைப் புலேயுரைத்தி
ரம்பப் பிணைவிளைத்திரண்டக மோடு
தான் வழுத்த நான ருசித்த காலேயே

7. கடியதிர்ந்திடவே யென்றனிதே
டருங்கதை
மிக வறைந்தனமே புன்கனியே
பிடுங்கியு
முன்பொற் கொழுனனுக் கயின்றக் கொடுவதற்பி
னந்தப் பரமனுக்கு நன்பரிவாக

வுயர்வு கொண்டிடுவீர் துன்பமிலா
நயங்களை
யனுபவம் புரிவீருங்கள்விலோ
சனந்துற
வுண்டச்சயனையொப்ப வஞ்சத் திடராறுத்து
நன்றுக்களை யியற்றியம்புவி மீது
கன நலங்களை மாயங்களையே
யறிந்தக

முணர்வு கொண்டிடுவீரென்றிடவே
யருங்கனி

கொண்டச் சண முனக்கருந்தப் பரிவுவைத்து
நுந்தித்தர வெனக்கு வந்ததுபோதும்
ஆபவத்தினு லுதித்த கேடிதே.

8. கடினமென றவளோதும் பொழுதே
பயம்பெற
வுனையு னொந்தினியாகும் பொருளே
துசுந்தரி
பந்தக்கடி விடத்தையந்தக் கனிர்சத்தை
யெங்கட் குறுபவத்தை நொந்திட ஞாய

மெனவதஞ் சொலியே மங்கையரே
யுனின்பெய
ரெவையு மென்றனனே பின்புயிரா
யெழுங்கன
சங்கத்திரள்களுக்கு மூந்தத் தலைமை பெற்ற
நண் புற்றனையெனப் பினங்கருகான

கரு நிலந்தனிலே வந்தவர்தா
ணிருந்தநி
பனை யிறைஞ்சினரே புந்தியிலே
செபந்தனை
விண்டித் தரையதற்குள ண்டிச்செயனடத்தி
யுந்திப்பசி தவிர்த்து விந்தையதாக
வாசையுற்ற காதை மெத்தவோதவே

---

## 14. வண்ணம்

### சூரியீனுபேலின்பேரிலே.

(விரு.) ஆதந்துணையாளுந் தமதாகந் துயர்மூழ்கி
யாயன்றரு சீரின்படியே யம்புவிமீது
பாதம்பட நோகும்படி பாடும்பட வேர்வை
பார் சிந்தினர்வேதன்றரு சாபங்கடிதாலுஞ்
சேதந் தொடர் காலந்தனிலாதந் துணையாளுஞ்
சேயரண்டுறவே தந்தனன் காயின் பிறகாபல்
வெதம்பகர் நேரங்கவர்போயும் பெலிபோடும்
வீறின்கதை தானிங்கித மோடும் புகல்வேனே

2. தனனு தனனு தனனத் தனன தத்த
3. தனனந் தனன தந்த
தானன தான
தான தந்த தனதான தானனு

1. அதமேவையுமே மனதிற் றுயர்கதிக்க
வழுதார் விழிநீர் சொரியக் கவலைவைத்து
நிமலன் றனை யிறைஞ்சு
செபமந்திர மொழிந்து
புவியங்கணுகி நின்று மாறின தீய

கனியார் தினதால் வருகஸ்திபை நினைத்து
வெகுபாடதனுல் வெயர்வைப்பட மிகுத்த
பல துன்பமு மிகுந்த
கருமங்களை வினைந்து
தரையின் பலனருந்தி யேவருநாளி

லனையேவையுமே நிறைகெற்ப மிகவுற்ற
தசமாதமுமாய் வயிறக்கணம் வலித்து
முழுவுந்தியு முளைந்து
சடலங் கடுக நொந்து
பெறுகும் பொழுதயர்ந்து சோபமதாகி
வேதனன்று சொன நீதியாய்வனே

2. அயயோ பரனுரெனை மெத்தவும தட்டி
யிடர் நீ யிடலாலுனிலுற்றடரது கெற்ப
வலிமிஞ்சிட வருந்தி
யிடவுன் சடல நொந்து
கதறும்படி மிகுந்த வேதனையே செய்

திடுவோ மெனவே சொன தற்பரனுவற்சி
நிறைவேறிடு நாளி தெனத்துணிவு பெற்று
முதன் மைந்தனை மடந்தை
பெறவங்கவனை யன்று
கயினென்ற னளணிந்த நாமமதாக

வவனே பரனுர் சொன ரட்சகனெனத்த
னுளமீதினிலே யதிபட்சம துவுற்றோ
ரிரவும் பகலு மரண்டு

பொழுதுஞ் சுப மிகுந்து
வளரும்படி யணங்கு மாதயவாக
வேண் மிகுந்து செயமேன்மை யாகினுன்

3. இதின்மேல வடான்மறு கெற்ப விதமுற்றி
ளமையோனெனு மோர்மகனைப் பெறவுமிக்க
தவனின் பெயர் சிறந்த
வபலென்றறி வுயர்ந்த
தருமன் பொறையணிந்த சாதசமான

கருணுகர மாதவ சற்குண முளத்தி
லுள சேகரனு மதியுத்தம நடந்தை
யியல்புஞ்சிதநிறைந்த
குணமும் பொருளடர்ந்த
கவியும் பல தறிந்த பேர் பெறும் ஞானி

யினிதாகிய மாமறையுட் பொருள்படித்து
மிகுதாழ்மையுமாய் மனதிற் பெருமையற்ற
னையர் தந்தையுமயன் சொன்
மொழியுந் தமையன் விண்ட
வுரையும் பிசகதன்றி நேர்மையதான
போதகங்களுள ஞானபோதனே

4. இணையாயிருபேர் தொழில்பற்றிய விதத்தின்
முறைகாயினுமே பயிரிட்டிட நிலத்தை
யுழுதெங்கணும் விளைந்த
களையின்றிரள் பிடுங்கி
யுயரும் பலனிறைந்து சேரும் வேளாண்மை

விதமே யிடுவானிவனுக் கிளைய சித்த
னபெலோ திரளாடுகளைத் தொழுவமைத்து
ரிமையின் குளகு வந்து
தாவும்பலுக மந்தை
பெருகும்படி வனங்கண் மீதினிலேகி

யிசைவோடயமேய்வுற நற் செயலியற்ற
முதுகாயினு மோர்பகலிற் பரமருக்கு
வெகு விந்தையினிலங்க
டருகுங் கனிபலன்கள்

கொடுவெந்தனன் மிகுந்த வாண்மையதோடு
பூசை தந்து தொழ நாடி மேவினன்

5. துதியா பலுமே புருவைக் குலமதற்கு
டலயாகிய தோர் பறழைக் கருதிநற்றி
மறுவின்றிய மணங்கு
களினெஞ்சது பிளந்த
துகளிஞ்சிய வழும்பு தானியல் போடு

வெலியே யிடலானதை நற்பரனினைத்து
விழியாலவன்மே லருள் வைத்தனர்திடத்தி
வெறிகொண்டவனை யெந்தை
யிகளும்படி முனிந்து
தருகும் பலனு வக்து பார்வையிடாத

துயரால வனுசியம் வெற்றுருவு பட்டி
டவுமே பரனோர் வனுக்குரைகள் பற்றி
யுனதங்கமு ளெரிந்துன்
முகமந்தர மடைந்துன்
மனமுங் கடுகவெம்பி வாடுவதேது
நீயு நன்று செய மேன்மையாகுமே

6. துரிதாகிய தீவினையைச் செயவுனக்கு
நயமேதிடர் வாயிலினுட் பதிவிருக்கு
மதனஞ்சலி வளர்ந்து
ளிதையங்க ளிடை தங்கு
மதைவென்றறி விலங்க வானுரமாக

வென நாயகனே திடமுற் சினமதுற்று
டனுமா பெலினோடுரை யிட்டனன் வெளிக்குள்
வரவுங் கறுவிநெஞ்ச
முழுதும் பகையடர்ந்த
கயினுஞ் சினமெழும்பி யாபலின்மீது

துடியோடதிர் பூமியினிற் படவடித்தோர்
தடியான் முடியானதை யக்கணமுடைத்து
வினைதந்திடவவன்ற
னுதிரத் தரையினின்று
பரமன்றனை யிரைந்தனுதி யோலோல
நீயிரங்கெனவு மோசையாகவே

7. கதியாள்பரனே சருவத்தையுமமைத்த
பொருளே மலமாயைகளற்ற பரிசுத்த
திவிய செங்கதிரனந்த
வொளிவின் சுடர் சிறந்த
பொறையன்பது மிகுந்த நேசதயாப

வசரீரியொரே சுயசத்திய மறைக்கு
முதலே முடிவே திரிதத்துவ மகத்துவ
மிகுசங்கைகள் கனங்கள
புகழ் மங்கள முழங்க
நவசங்கமும் வணங்க ஞதிவிசேட

கலைகோடிகள் ஞானமும் விற்பனமுடைத்த
கிருபாநதியே யளவற்றெறியு முக்கிர
வெரிபந்தழன் மிகுந்த
நெறியின் படியெழுந்து
புவியெங்கணு நிறைந்த தேவசொரூபி
பாததஞ்சமென வாபல் கூவியே.

8. கனிமாதுண பாதகமித்தனை கொலைக்கு
ளுளதாகின தான்மகிமைப் பரனுனக்கெ
திரவும் பெருமை கொண்ட
பவமிங்கெனை வளைந்து
மரணங் கடுகவந்து பேதகமா யெ

னையுமே வதையாயுயிரற்றுடல் துடிக்க
நிலமீதினிலே குருதித் துளி சிதர்த்த
வணனும் பழி நினைந்து
சொனபந்தைய முடிந்து
பழிகொண்டன னிரங்கோ ராதரவேயில

கதியே மதியே நவ சத்திய பரிசுத்த
பொருளே தெருளே யளவற்ற கிருபையுற்ற
கனசுந்தர சவுந்தர
சரணங் கெதிமுனம்பு
மெனை யங்கழையனந்த தேவ சிநேக
பானுவென்று செபமே செய்தேகிறேன்.

---

## 15. வண்ணம்

### காயீன் ஞாய விசாரணை.

(விரு.) ஆபெலென்றவ னையமென் றருளியபறை
கேட், டாயனை மெய்க் கடவுளரெழுந்து வந்ததிராய்க்
கோபமோடிடரே புரிகாயினின் கொடுமை
கோரமாமென வவனுடனெதிர் மொழி கொடுத்துச்
சாபமே யிடத்தணிந்தவன் பொறுமை கேட்டிறைஞ்சத்
தயாபமாகினர் தம்பியைக் கொன்ற பாதகன்மேற்
பாவமாறிடப் பரமனுர் பணித்த பிணுதம்
பானவயோடடர்ந்தியல் கருமங்களைப் பகர்வாம்

3 தான தாந் தான தன
தயயா தனந்த தன
4 தனதான தான தந்த
தனத்த தன தனன தனத் தானஞ

1. ஆகமாந் தேவசுவிசேட பாங்கானவதி
ஞானகாம்பீர செய
மெய்யாமனந்த ஞெரு
பரதேவ தேவனங்கு
லகமீதிலே யெழுந்து
துதிகூறுமாபலென்ற
வனையே கொல் காயின் முன்பு

பாவி யீங்கோதுனது சாததாந் தூயவிளை
யோனும்யாங் கானதென
வில்லா தகங்களுள
பழிகாரனுன வஞ்ச
னறியேனிதேது சங்க
டமயா சொலீரவன்ற
னரணேவியானு மென்க

வாதியான் கோபமொடு பூமிசார்ந்தேயுனிளை
யோனிலாஞ் சோரி யொலி
யையோவி தென்ற பைய
மதிராகவே புலம்பு
தடபாவி நீ வனைந்த

வஞ்சியாய மாமிதென்ற
வனிேனாடு பேசி வண்ட
னிளைத்த பழி கொடிய கொலைக்காகவே.

2. ஆபெலான் சோரி கரமீது தான் சேரவுண
வாயனார்ந்தேதறுலகி
லில்லாதிறந்து விழ
வழிவாயுன் மேல தங்கண்
மிக வாகும் வேர்வை சிந்த
மிகுபாடு தானமைந்த
தினமான வேலை தந்து

மீர மூன்றுது பயிர்நீயு மோய்ந்தே நிலையி
லாது சோந்தே படுவை
துள்ளா தடங் கெனவு
மமராடியே பறந்து
போறை ஞான மான தம்பி
யுயிரானதே கவர்ந்த
சதிகாறனேடியம்ப

வாண்மை பூண்டேறு பழி காயினன் சோபமொடு
தேக நேர்ந்தே பதறி
மெய்யா வுன்றஞ்சமினி
யடியேனை யாள்வ துந்த
னருளாகும் வேறு தம்ப
மறியேன யாவிரங்கு மிருபாதமே யடைந்த
னெனப் பரனே மனமுருகிக் கூவியே

3. மோகமாம் பாவி யென்தேத நீங்காத கொடி
தான வூன்றேட மதி
யுள்ளாய மிழந்து மெனை
முனிவாகவே சினந்து
பதிமீதிலே யிருந்த
றுதியாகவோட வின்று
விடயானுமே யுடைந்து

பூமி பூந்தே நிலையிலாது தேய்ந்தே யொழிவ
னேமிகாண் போர் தயவு

செய்யாதருங் கொடுமை
புரிவாரெனுவியஞ்ச
வதிகோர மாயடர்ந்தே
ரிகள்போலவே சினந்து
கொலுவார்களே துணிந்து

மூடனுந் தீயவடியேனை யாண்டாலுனது
நேசமாங் கோபமிக
வையாதிரங்கு முனின்
முகபார்வைதான் மறைந்து
லகினூடெலா மலைந்து
கெடுவேன யாவொடுங்கி
யெனையாளனுதி தஞ்சம்
விளக்க மறவினை பிடிக்கலாகினேன்

4. மூழுதீங்கான பவநாச வான் சோதியென
வீனவான் முனைறைய
வெல்லா மறிந்த பரன்
முனியாமலே த்ணிந்த
வணிஞேடுமே நயந்து
ரிமையாகவே யியம்பு
மொழியானதோ நயங்கள்

கோரனுங் காயினையுமாவி சோர்ந்தே கொலுவன்
மேலு மூண்டேழு பழி
வல்லா யெழுந்தவனை
யிடியாகவே தொடர்ந்து
சுமர்வா மெயாகு மென்று
கொலை பாவமே சமைந்த
சதிகாரனே டறைந்து

மோசு தீங்கா யினனை யாவர்தான் காணினும்வி
ரோத வாங்கார மொடு
கொல்லாத கன்று விட
முக மீதிலே படர்ந்த
வடையாள மான தொன்று
முதலோனுமே வரைந்து
பரலோக மீதெழுந்தன்
மிகைக்கயினும விடம் விடுத்தேகினன்.

5. மேகவார் சேருமினலோடு பூங்காவினுறை
தேனுமாங் கோகிலமு
மொவ் வாதணங்கு மொழி
யொளியான வேலிலங்கு
கயலோ கணுடிதந்த
மெனு மேனி தாமெனுழுங்கு
சிறு ரோமமோ நெருங்கி

மாலை சேர்ந்தாடு குழலீபனேன் கேதமெழின்
மார்பு தாங்காத திடை
மெய்யோ பசும் பொமெனுளிர்
மதியோ முகார விந்த
மிசை தேனிலேயு மின்பம்
வளர் மீனிலே துலங்கு
பணியாடை பூடணங்கள்

வேத மோங்காத கனியோ தவாய்ந்தே மிசையு
மேவை யாங்காரமொடு
தள்ளாடி யங்கு துயர்
மிகவாகியே மலங்கி
யபெல் மேனிமேல் விழுந்து
வினையோ விதேமெதன ன்பின்
மகனே நீ தானிறந்து
னுழப் பகல வுயிர்விட முற் பாவமோ

6. வீறினுங்காரமுள காயினுன் கோபவெறி
யாலுமூண்டே யுனையு
மெவ வாறடர்ந்து கொல
வினைதேடி னுன் மிகுந்த
சதிகாறனுன வஞ்ச
னயயோ முனுளி லந்த
மருளோடு பேசி நின்று

வாழ்க வாண்டோனை யிகழ் பாவியான் றீய நினை
வாலுமீண்டே கனி கள்
கையாலி ணிங்கி நுகர்
மநமோவி நாளிலங்கம்
வலுசோர்பினுன் மயங்கி

யிருண் மூடவே விளைந்த
தினி நானு மாவி கொண்டு

வீடு பூந்தே கணவனோடு வாழ்ந் தாவியுய்வ
தாகும் வீம்பேததினி
நல்லோரிகழ்ந் தறைவர்
விபரீத மாயினங்கள்
பழிகூறுவார் களிங்கெ
னுடனேகவே யுருண்டு
விதி கூறியே புலம்பி
யுரத்தழுது மகனை யொருக்காலுமே

7. ஏகபாங்கான வுயிரோடு நாங்காணும்வித
மேது நூங்கேதுகடி
யெய்யாமை கொண்டருளு
மெளியாள் பொலாதகும்பி
தனிஞலோ டாறு திங்க
ளியல்பாகவே சுமர்ந்தெ
னிளை மேனி சேரவெம்பி

யாகநேர்ந்தாறவலி
மேவியீன்று தரையின்
மாயை வீண்கால மிதி
ஞெய்தா நறுந்துயில்க
டனின்மூடியே சிறந்த மணியாடு தூயமஞ்ச
வணை மீதிலே யொழுங்கின்
மூறையோடு மேதவிழ்ந்தொ

ரீனதீங்கானது கடாவி நூங்காதுவிளை
யாடு பூம்பாலகனை
நல்லாய் வளர்ந்துவர
விதமாகவே பரிந்த
திகநேயமாய் நயங்க
ளினிமேலுமே துவிந்தை
யெனவே செய்தோ மகிழ்ந்து
வளர்த்த திகநினைவுகளுக் காகினேம்

8. ஈதெல்லாந் தாபமுடனே செய்தோம் பால
கனு, மேவியார்ந் தேயுயர

மெய்யாய் மனங்கள்பர
வசமாகியே குளிர்ந்தி
னியவாய்மை தானிதென் று
றுதியாவே நினைந்து
விசுவாசமாக நம்பி

வாரயாண் டேவினைகடானு மூண்டாலெல செய்
வோமெலாந் தோடமென
வில்லாண் மயங்கிவிழ
மணவாளனு தனக்கு
துணையாகவே சயம்பின்
மறையோதி வாசகங்கள்
பலநீதிதான வின்றி

தேது பூந்தேன் மொழிம
ணிகாய்ந் தேயழுது
சோரவேண்டா மெனவு
மையே விளம்பியினி
வலியாண்மை பேசி யென்சொல்
கயினுனை யேசி யென்சொ
லபனேனை நாடி யென் சொ
லெனவாறினர் கடுன்ப
மடக்க மென மகனை விடுத்தேகினர்.

---

## 16. வண்ணம்

### பழைய உலகத்தின்பேரிலே.

(விரு.) சாதி யெங்குமொருங்க வளர்ந்தது
சால வஞ்சக டங்கண் மிகுந்தது
சாமி யன்பு செபங்க டவிர்ந்தது
தாழ்வுகொண் டகிலங்கெட நின்றது
பாதகங்கள் படர்ந்து திரண்டது
பாவையின் பிரமை மிஞ்சவடர்ந்தது
பாவசங்க வினங்கள் கலந்தது
பாசமைந்தர் பயங்க டெளிந்தது
போதகங் கண்மறந்து விழுந்தது

பூரணன் றருமங்கள் கலேந்தது
பூதமும் பகை கொண்டு தொடர்ந்தது
போரிடுங் கலகங்க ளெழுந்தது
நீதியின் செயன்மங்கி யயர்ந்தது
நேயனின் சினமண்டி யெரிந்தது
நீடு கொண்டல் சலங்கள் பொழிந்தது
நீர் பரந்துலகங்க ளழிந்ததே

4. தான தன தானன
2. தந்த தத ததன தத தான
தான தந்த தான
தனன தன தனன தன தன தனு

1. ஆதி முதலோதிய வேத சுவிசேடமெ
ஞான வொளிவாகிய நீத பரமேசுர
ரன்புக்குட் கதித்த தேவ
வின்பத்துட் பெலத்த வான
வும்பர்க்குட் கிருத்திரமான
வாதுகொண்ட கூளி

யூழிவினே தீர மகாகிருபை யாயனே
மாதினிடமாய் மகனுரை யருள்வோமென
சிந்தைக் கற்புதத் தயாப
பந்தத் தட்சயத் ததீத
விந்தைச் சொற் கொடுத்ததேவ
ராதியந்த மான

ஆரண பராபரகாரண கிருபாகர
தாரண சாரசர பூரண மனேகர
சந்தத்துச் சிதச் சினேகர்
சங்கைத் தற்பரத் திரியேகர்
பங்கப் பட்டனத் தபேர்கள்
வானடைந்து வாழ்க
அதிக நவமருள் பரம கருணேயார்

2. ஆதரையின் மீதுறை யாதியுட சேயர்கள்
பாதகமகா கொடிதாமென வனுதியர்
கண்டிட்டுத் துயர்க்குசொரல்
பந்தத்துக் கிரத்தினீதி

கொண்டிட்டச் சணத்திறேனை
யோடு விண்டவாய்மை

பாருலகின் மீதினுலாவியதில் யாவையு
நேர்மையுறு பார்வை செய்தோ முலகமோபடு
பந்தத்துட் கிணக்கையாகி
வண்டத்துற் சுகத்தை நாடி
மிஞ்சிக் கெட்டிகழ்ச் சிமேவ
வேயகந்தை மீறி

யாண்மை யடமான விரோதமெழுகாம
விகாரம தலாகிரியேறி யனுபோகம
டந்தைச் சிக்கிழுக்கின் மாய
வஞ்சத் துர்குணத்தினாலே
நெஞ்சத்தைக் கலைத்த தீமை
யோர்கள் கொண்டபாவ
மளவிட வரியகொடிய துரிதமே

3. தீதிதுகளான் மன நோகுதயயோ வுல
கானதை யெலா மழிவாக வதமே செய்து
தொந்தத்துற் புவிக்குண் மேவு
செந்துகட் கணத்தனேக
மண்டத்துட் பறக்கும் வீக
ளோடு கண்டயாவு

மாளமுடிவாகிய தீர்வையிடுவோ முகி
லோ பரவியே யதிகோரமுடன் மாரி பொ
ழிந்திட்டுச் சலப்பிரவாக
மிஞ்சிக் கொப்பளித்து மேவி
சும்புக் குட்டுளைத்து மேறி
வானிருண்டு மூடு

தேசுமினலோ விடியோ குமுறலோ வொலி
யோ கடினமா மதிரோபக ரொணுதது
மங்குற்றிக் கனைத்து மோடி
யுஞ்சத்தத் தடிக்கும் வேளை
யங்கத்துட் பதைத்து நீரிலே
யமிழ்ந்தி மாள்வ
ருதிரமுள பொருண்முழுது மொழியுமே.

4. தேயமதி னீயொரு பேழைதனையே கொபே
ராகமமதால் வனைவாய தனிலேயறையுந்
தட்டுப் புறத்தின் வாயன்
முன்றட்டுத் திருக்கு வீடு
சந்துக்குட் புறத்துமேலை
கிலகள் கொண்டு பூசு

பேழையுட னீள மு னாறகலமே யரை
நூறுயர மூபது நேர்மை முழுமாக
வமைந்தோத்திக் கதிர்க் கடாவு
பொருந்திட்டுத் திறப்பையே செய்
முன்றட்டுக் கடுக்க வாய்மை
யேயணிந்த தாய்வை

சீர் வரிசையாய் முதலா மறைபினை நடு
வாமறை திரியாமறையாவு மணியாய் வனை
யுன்பக்கத் தியற்றுவோ நம்
மன்புக்குட் பிடிக்கையான
தென்றிசைக் கருத்தினோடு
நோவை முன்பணாதி
யுயர்கருணையுட னினமுமுறை செய்வார்.

5. சாதுகுண மாதவமேன்மையுள நோவைய
னேநமது பாதம்விடாத படியாலுனை
யிந்தத்தூர் சலத்திலே
மடிந்துட்கிக் கெடப்பணாதுன்
மங்கைக்குற் றிரக்கமே செய்
தானமைந்தர் மூவ

ரோடவர் கடேவிகண்மூவ ருடனாகவே
னோர்களொழிலா யுயர்பேழையி னிலேரியி
ருந்துப் போற் களிப்பிலே
மகிழ்ந்துச் சச்சமர்த் தராயொ
ழுங்கச்சொற் பயிற்றினோமு
னோடு தஞ்சமான

தாரணியிலே யுறைமேதை யுளசீவனி
லாணுமகடா யொருசோடு தெரிவாய்மிரு
கங்கட்குட் டொகைக்குளோர்வ

னங்கட்குட் டொகைக்குள் வான்வி
சும்புக்குட் பெருத்தவீகள்
சோட தொன்றுசேர்து
சதிரினவை களினுனதி னுணவுசேர்

6. தாமதமிலா மலிநேரமு னெடோதின
வாய்மை பிசகாததி வேகமுடனேயமை
யென்றுக் கிரத்திரித் துவதேவர்
விண்டிட்டப் பிரத்திலேறி
விண்டுக்குட் டணைத்தலான
போது நின்ற நோவை

சீர் பதிதனேடியல் போதின பிரகாரம
காபெரிய பேழையுமே செய்துமு நாளுறு
பந்துக் கட்கிதத்தினேடு
முன் புத்திப்படிக்கு சாவி
யந்தச் சொற் புகழ்க்களோதி
நூறு சங்கம் வேலை

சாமி சருவேசுரனீ திகொடிதாலடர்
தீர்வை வருமே மழையாலுலகெலாமழி
வுந்தித் தத்தளித்து நீர
மிழ்ந்திச் செத்தினத்தர் சேனை
கும்பிக் குட்பதைத்து நீறு
பேய்கள் பங்கதாவர்
தவசு செயுமென முனிவன் மொழியவே

7. ஏதடடடா வறுநூறு கிழடாமரு
ளோவுனது பேதமையோ வறிவிலாமையி
தெங்கட்டுக் கறுத்து மேகம்
வந்திட்டுப் பறக்குதோது
கண் கெட்டுக்கிடக்குதோக
ளுவுகண்டையோ சொல்

மாரி வெளமே திடரேது பயமே துல
கேது சலமுடுவதேது கதையே துனி
னெஞ்சுக்குட் கலக்கமோ
மயங்கிச் சொற் பிதற்றுருய்

விளங்கிச் சற்றடக்க டாவுன்
வாய் மதங்கள் போது

மேக சருவீசுரனு ரவரினீதிக
ளேன் வருமடா வதை யாரறிகுவாருரை
யுன் புத்திப்படிக்கு நாம்
நடந்திட்டுத் தவத்தின் மேவ
வெங்கட்குப் பயித்தியமா
வடா நினைந்து பேசு
மதி தவறிமிகு வயதின் மருளுருய்

8. ஏகசுக போகமதா யெமது காதலி
மார்களோடு மேவிய போழ்து மனையாடரு
மைந்தர்ச் சித்திரத்து வாழ்வு
நண்புப் பத்தினிப் பெண் வாழ்வு
பெண் கட்டிக்கொடுக்கு மேன்மை
லோக சங்கையாவும்.

வேசியர்களாடிடு நாடகம் விநோதம
தாயொலியும் வீணைகளோடி யல்பதாகவ
ருந்திச் சொற்குயிற் களோசை
யின்பத்துக் குயர்த்தியாய்
விளம்பிச் சற்றிணக்க மாக
மூடு கொங்கை காண

வேர்வையுடனே யிதழ் தாரகனிமார்களி
னுசைதனை யார்விடுவார்கள் சொலடாவின
பந்துக்கட் கனத்தமாக
நிந்தித்துப் பழிக்கிருய்
கந்தைப் பித்துனக்கு மீற
வேது வந்த கேடு
மதமிதெனவிடு பகிடியென சொல்வேன்

---

## 17. வண்ணம்
### சலப்பிரளயத்தின்பேரிலே.

(விரு.) உலகத்தின் மிகுத்த மனுத்திரடா
னுயர்மெய்ப் பரமப்பொருளைப் பணிய

துழலிட்ட பவத்தை யளித்ததனு
லுயிருற்ற தனைந்து மொழித்திடவே
வலகத்த னினைத்து மனத்துயராய்
மதிபெற்ற னொவைக் குருவைப் புவியின்
மனுடர்க்கு மறைப்புகழைப் பகர
வரவிட்டபடிக் குரிமைப்புனித
னலகற்றபவக் கடலுக்குளமை
யசடர்க் குறையிட்டு நயத்துடனே
யமுதப் பலபுத்தி வழுத்திடினு
மவையற்ப மெனக்கருதிக் கொடியோ
ரிலகுத்தம பத்திதவத் தொழுகா
திழிவொத்த பவத்தட முற்றதனு
லிதையப்பல சுற்றையுணர்த் தியகோ
னிடுமுக்கிர நடுச்செயலைப் பகர்வாம்.

4. தத்தன தத்ததந் தனதந்தன
2. தந்தனந்தன தந்தனந்தன
2. தனன தனதன தனன தனதன
4. தானதந் தனதான
தனத்த தத்த தனத்த தத்த தனததனு

1. சத்தியத்தைக் கொண்டருந்தவ
முக்கியத்திற் சென்றுணர்ந்தறி
வுக்குமிக்கப்பண் யியன்றுயர்
நற்கருத்துக் கென்றறருங்களின்

விந்தை மிஞ்சியவன் பனிங்கித
சங்கையுங் கனமும் பெலன்கொளு
மரியகருணைக ளருள்செய்கடவுளி
னடியனென வளர்பெரிய முனிநொவை

யாரணன் றருவேத
நீதியின் படிபோத
மோதியங் கினமோடு
யூகவிண் டியல்பாக

வற்புதத்தைக் கண்டருண்டிட
விப்புவிக்குட்பண் டமைந்தபல்

வஸ்துவொக்கப் பஞ்சதம்புக
நிக்கிரகித்துக் கொண்டதிர்ந் தொனிர்

மங்குல்பொங்கி யகன்றருங்கக
ணங்களங்கு பறந்துவிண்டொலி
யிடவுமிடிகளு மினல்கள் சுடர்களு
முலகினுளபொருட விடுபொடிபட
வீசியங் குலகூடு
மேகபந்தி கடாவி
யேயொழிந் திடுமாரி
யேபிரண் டிடுபோது

சக்கரத்துட் கொண்டடங்கிய
வப்பு வொக்கப் பொங்கியுங் கட
லொக்க லொக்கப் பொங்கியுஞ் சல
மிக்க முக்கிக்கொன் றழிந்திட
வம்பு மிஞ்சி யெழுந்து குன்றுகண்
மூங்கிவிண்டிடை நின்றுயர்ந் தெழ
வவனிதனிலுள வுயிர்களுள பொருள்
பலதின் முகிவுகள் வருகுமிது நிச
மாதியின் பிதிரே நன்
வேத சங்கதி நாடியே
தவம் புரிவீர்க
டேவனுங் கிருபை யாவ
ரெனப் பொற் புத்திரட் புத்திச் செயற் சொனுன்

2. தப்பிதத் துப்புன் பயன்களை
நற்றி நற்றிச் சென்றகம் பிரமை
மெத்த மெத்தக் கொண்டடர்ந் தெமை
யெத்தித் தொண்டணிந்து று
வஞ்ச மிஞ்சிய தென்பு கொண்டிட
வந்தினங்களை யஞ்சவும் பல
மொழிகளொடு பரனடுவுவருமென
நிதமும தமிகு கெறுவ மனதொடு
நூறு சங்கமதாக
நீ விளம்பிய காதை
தானடந் திலே மேலே
தானடந்திடுமோ சொல்

புத்தி கெட்டிட்டும் பெருங்கவ
லைக்குண் முக்கிட்டுந் திடன்களை
விட்டு விட்டிட்டும் பயங்கெலி
சுற்றி யுற்றிட்டு முனின்புகழ்
மங்கியுன்றிற மங்கியுன் செயன்
மங்கியுன் கலை மங்கியுன் பொறி
மருளவுன தட மனது பதறிட
வறிவு மழிவிட நிலைமை தவறிட
வேது வந்தது பாவி
மேக மண்டலமீது
நீர்யளங்கிலை யேது
போதகம் பழுதே நில்

சற்றடக்கிப் பண் சுகந்தரு
நித்திரைக்குட் சென்றுழன்றிடு
சொற்பனத்திற் கண்டருண் டெழு
தப்பறைப் பற்றின் பயன்களை
நம்பி மண்டனில் வெம்பி நின்றழி
வுண்டுவன்பிலலைந் துழன்றுனின்

மகிமையுலகுட பொழிவு பவுசுகள்
பெருமை சகலமும் விடவுமெழிலுயர்
மாதர் தங்களி ஞைசை
மோக விங்கிதம் யாவு
நீ யிகழ்ந்த திதேத்து
நோவை யென்றவரேசி
யிழித்திட்டுப் பயத்திட்டுப் பயிற்றினர்.

3. இத்தரைக்குட் கொண்டிலங்கிய
சித்திரத்துப் பொன் படங்களி
னுச்சிதத்தைக் கண்டிகழ்ந்து சொல்
பற்பனிப் பொற்பெண் கனிந்திதழ்
கொஞ்சி நெஞ்சு மலங்க வங்கிரு
கொங்கை கொண்டு சுகங்களுந்திய

குமரிமனை யவளருளு கலவிகள்
குலவு மொழிகளின் மனதமெதன செயு
மாது நன்கனபார

வாடையின்றிரள் சூடியே
நடஞ் செயு போழ்தி
லாசை வந்துயிர் போகு

முத்தி யிட்டிட்டும் பதங்கள்
படித்து மெச்சிட்டுந் திடன் கண்
மிகுத்துறத் திட்டுந் தொடர்ந்து
புணர்ச்சி மெற்சித்துஞ் சிறந்தவர்
வஞ்சி வந்து சுழன்று பண்பொடு
நின்று கண்கொடு சண்டையுஞ் செயின்
முனிவர் மனதுடனுருகு மரியவர்
தவசு சகலமு நொடியின் விழும் வி
மாதரின் சுக வாழ்வு
போல வின்பமு மேது
நீ யறிந்திலையோ வி
தேது வஞ்சகமோ சொல்

லிப்புறத் திற்றங்களின் பல
மக்களுக்குப் பெண் பரிந்தொரு
நற்குலத்திற் சென்று வந்ததி
னுச்சிதத்துப் பெண் டெரிந்தபி
னங்கலங்கிருத பொன்களுந்துகிலுங்
கொணர்ந்து சடங்கதுஞ் செய்து
பரியமிட வெகு பிரியமுடனின
சனமதுற வளர் சிவிகை யணியினி
லேறியிங் கிதமாக
மாதரின் புடை சூழ்
வூர் வலங்களுலாவி
யே வருங்கலியாண
முனக்குப் பற்றிலைக் கெட்டுத் தவிக்கிறாய்

4. இச்சை யற்றிட்டுஞ் சடந்தனி
லச்ச முற்றிட்டுங் குலநகள் செய்
பட்சம் விட்டிட்டுந் தினந்தினம்
லட்சை கெட்டிட்டுந் தவங்களி
லங்கம்மெலம்பி யயர்ந்து நொந்து
மெலிந்து நெஞ்சுமுலர்ந்து புண்பட
வவதி வருவது முனது கெடுமதி

தவசுபுரிவது சனியனென நினை
யோர் குரங்கதுபோல
வேதிரிந்துடல் வாடி
வாடியுங் கிழவோரி
கூவு புன் கதையாவை

கத்துதற்கத்தின் பரம்பொரு
டற்கமிட்டுப் பின் சனங்கடு
வக்கமிட்டுப் பண் சுணங்கு
குலைத்த தட்டிற் றென்றறிந்து கொ
ணின்றெழுந்து முனந்தி சந்தியு
மந்திரங்கள் பகர்ந்து வந்தனை
முனுமுனென நித நினைவு குறுகிட
மொழியும் வகையென வயது மிகுதியின்
வீறு கொண்டிடு காது
பூமியின் சுக போக
மாயை யென்றுரையாமன்
மேன்மை யென்றதை நாடு

வெக்குலத்தைத் தொண்டிடுங்கன
சக்கரவர்த்திக் கென்றிலங்கிய
வச்சிரத்துச் சஞ்சமைந் தெழு
முப்பரிக்குட் சென்றதின் பல
சங்கிதங்கண் முழங்கும் விந்தை
கடண்டு டுண்டெனநந்திப ம்பைக
டவில தடிபடு விதமும்ரதமெக்சு
துரகபடைகளின் வரிசையுடனின
மாடமண்டப கூட

மேடை யின்றிறம் யாவு
நீ யுணர்ந்து கொள் போழ்துன்
ஞானமும் பறிபோகு
முறைத்தத் திற்றிடப் பட்டுப் பகுத்திடாய்

**5.** நற்றவத்துக் கெண் குணன்றயை
பெற்றருட் சித்தஞ் செயுஞ் செப
பத்தனட்புக் கொண்டெதிர்ந்தவர்
சொற்றிறத்தைக் கொண்டியம்புவ

ஞுங்கணெஞ் சிலண்ந் தனின் கடி
கொஞ்சமுங் கடுகென்ப தங்கிலே
யிடிகளொடு பெருமழைகள் சொரி பொழு
தரிய வவதிகள் படுவதிது திடமாக
நொந்திருண் மூடி
வீவு வந்திடர் சூழு
நேரமுங் களிஞைச
தானு நின்றிடுமோ சொ

லத்தை கத்திக்கொண் டுருண்டழ
வக்கை கத்திக் கொண் டுருண்டழ
வப்பர் கத்திக்கொண் டுருண்டழ
மித்திரர் கத்திக்கொண் டுருண்டழ
மங்கையுங் குழலொருங்க மண்டிடை
விண்டயர்ந்து பிரண் டுருண்டழ
மகவுகளின் மனமெரியின் மெழுகென
வுருகியழ வழ வுயிரை விடுபொழு
தார்களங் குறவாவர்
சூழ நின்றுறவோர்கள்
கூவி யென் செயலாவர்
பாதகங் களிஞலே

நட்டுநட்டுக் கொண்டரும் பய
முற்றுறுக்கிக் கொண்டெழுங் கவ
லேக்குண் முக்கிக்கொண் டகம் பத
றித்திடுக்குக் கொண்டிரங்கிட
மைந்தரின் றுயர் தந்தையின் றுயர்
மங்கையின்றுயர் தங்கையின் றுயர்
மருவு முறவுகள் பலர் கடுயர்களு
மிகுதி யெழுவனே பவமு நினைவுற
வாய் பிளந்து கடோர
மாகவும் பரியாரி
வேர் மருந்திட வாவி
வேக மிஞ்சிட வோடு
மனற் புக்கித் துயர்ப்பட்டுத் தவித்திடீர்

6. நற்கலைப் பட்டின் செழுந்துகின்
மெத்தையிற் கட்டும் பசும் பல

பொற் பணிக்குட்டொங்கலுந் திகழ்
சப்பர சித்திரத்தின் பழும் படர்
மஞ்ச மங்கணுறங்க மங்கையர்
செங்கை கொண்டு சுகங்களுஞ் செய
வடியரடி தொழவுறவர் பணியிட
வரச ரெதிர்கொள வுழவ ரிறைதர
வாடை பொன் பணியாரம்
வீர சங்கிலி சூடி
நீடு சம்பிரமாக
வாழ்வு கொண்டவர் கோடி

செத்து மக்கிப் புன் சடங்கண்
மணத்த சுத்தத்தின் களங்க
மிருத்துரக்கக் கெந்தியின் கழு
கொத்தி முக்கித் தின்றழிந்தவ
ரெங்கு நின்றன ரெங்கணங்கவர்
சங்கை யெங்கனெ துங்கமெங்கனெ
யவனி தனிலுளவவர்கண் மகிமைகள்
பெருமை பவுசுகள் சகல பொருள்களு
மேயழிந்த துபாரு
நீரு மங்கவர் போல
வேயழிந்திடு வீர்க
ளென் மொழிந்தது கேளு

நச்சலைப் பட்டிங்கிறந்து
சுவப்பிரத்திற் சென்றழுந்தி
நெருப்பு பற்றிப்பின் குணுங்குகள்
கொக்கரித்துக் கொண்டடர்ந்து
வளைந்துகொண்டு விரைந்து தொண்டைகண்
மண்டையுங் கடிகொண்டுறந்திட
வெறுகு வெறுகென மனதுபதறிட
நெடிய பசிதகையவதி பெருகிட
வூழி சங்கமதாக
லூசியுஞ் சினமாக
வே செயுங் கனவாதை
தான் முகிந் தொழியாது
வதைப்பற்றிக் குணப்பட்டுப் பிழைத்திடீர்

7. பெத்தரிக்கத்தின் பிறங்கன்
மிகுத்தெதிர்த்துப் புங்கவன்பறை
யைப் பழித்துத் தென்புடன் புலை
யைப் பிதற்றிக் கொண்டிருந்தன
ரெந்தவிந்தைக ணன்கிலங்கிய
புந்திதந்திடினும் பவங்களி

னுழலுகயவர்கட வசினடவையி
னொழுகமனதிலை யெனவு முனிநொவை
தானறிந் ததினலை
தேவசுந் தரசோதி
யோதிமுன் றருபோத
வாய்மையின் படிபேழை

திட்டவட்டத்தின் சமைந்ததி
னுட்புறத் துப்பங் கடங்கும்
மறைத்திரட்குச் சென்றெழுதுங்கின
வஸ்திலக்குக் கொண்டறைந்திட
வந்தண னறவமங்கை மங்கையின்
மைந்தர் மைந்தரின் மங்கையெண்பெய

ரிவர்களுண வுடனுயிர்க ளுளபல
பறவைமிருகமு மதுகள் ரைகளு
மாகவிங் கிதமூடு
பேழையின் புகுபோது
சாதியின் படிபேடு
சேவலுஞ் சுவடோடு

பெட்டிமுட்டிக் கொண்டிருந்தன
வப்புறத்தி சம்பனன் கத
வைக்க விழ்த்திப் பின்பெழுந்தின
மிச்சகத்தைச் சங்கரஞ்செய
விண்டதிர்ந்திட மண்டலங்கெட
மங்குலங்கு முழங்கி யம்பெழ

வதிர்செய்கரு முகின்மதவு திறவுண
வடியினுறு சலமிகுதி வெளிவர
ராவினும் பகல்கூட
மாரிமண் டலமாக

நீர்பொழிந் தகுரூர
மாரியம் பிடலாவர்
பினுக்குக் கிரக்கடற்பற்றிக் கொதித்ததே

8. பெத்தலேக்குட் டங்கிடுங் கபி
லேக்குடிற்குட் கண்டிறைஞ்சிட
முற்பவத்துக் கென்றதன் படி
வப்படிக்குப் பின்பிறந்தவர்
சங்கினங்களி லங்குதெண்டிரை
யங்கவங்க மெழுந்திடும்பொழு
தலைகைகடலுட வலேயிறெடுபொரு
மமளிதனையொரு மொழியினமரிட
வேசெயுங் கோடிதான
நீதனுஞ் சினமாக
மாருதம் புயன்மோதி
வீசவுஞ் சொலுபோது

புட்கரத்துட் பொங்கிடுஞ்சல
மித்தரைக்குட் பொங்கிடுஞ்சல
மத்தியிற்குட் பொங்கிடுஞ்சல
மெத்தவர்த்தித் தெங்கையுஞ்செல
ஆருமுங்கிட பேருமுங்கிட
நாடுமுங்கிட மேருமுங்கிட
மனுடர்மரபுள மிருகவகைசர
வுருவ வகைபிணி முகபல வகைகளும்
யாவருங் கெலியாகவே
பயந்து தளாடி
நீதியின்படி தீர்வை
யாயிறந் தழிவானர்

பித்துழற்றித் தங்களின் கடி
னக்குணத்திற் சென்றிருந்த
நரர்க் களப்பைக் கண்டயர்ந்து
பதைத் துளத்திற் சஞ்சலம் புக
மங்கிநின்று மலங்கியெங்கு
பறந்துசென்று புகுந்திடும்படி
வகையுமினியிலே முனிவன்மொழிதனே
யிகழ்செய்பவ மிவையெனவு மழுதனர்

பேழையுஞ் சலமோதவே
கிளம்பி வியோம
மேவிநின்றது வேத
னீதியின் கொடிதான
பெருக்கத்திற் பெருக்கத்திற் பெருக்கமே.

---

## 18. வண்ணம்

### பழைய உலகத்தார் புலம்பல்.

(விரு.) கருணை நாயகனுர் நீதிக்
காந்தலாற் பழையபாரின்
கசடரைச் சலத்தா லார்த்துக்
கடூரமா யழிக்கவேண்டி
வருணனை விடுத்தபோது
மாரியின் வலிமைகண்டே
மருள்கொடவ் வுலகமாந்தர்
மருகிநின் றழுதுவாடிச்
சுருதிமா முனிவன்முன்னுட்
சொன்னபுத்திக ணைஞ்செண்ணுத
துணிகர நினைந்துநொந்து
துயருறப்புலம் பும்வாறுந்
தரையுறு பொருட்கள் யாதுஞ்
சரிவர வழிந்தவாறுந்
தருமநோவா வின்மற்றச்
சரிதையும் விரிக்கலுற்ரும்.

தான தனந்தனனு தன
தான தந்தனனு தன
3 தான தந்தன
தந்தன் தான
தனதன தனனன தனஞ்

1. காவிலருங் கனியானதையே
யருந்தினதால் வினை
சூழவந்தத மேவையின் குலமே
தொடர்ந்த பெரும்பழியாலும்

ஞாலமடங்கலுமே யவர்
சேயர் மிஞ்சியபோ தெழு
பாவமுங் கொடிதாய் வளர்ந்து
பராபரன்றனை யஞ்சலியாக

காரணமும் பெரிதாலெரி
நீதியன் சினமா யுல
காவையும் பொருள் யாவையுஞ் சிதை
வாகவுஞ் செய வுந்தியின் மீது
கருதியு முன்னுள தனிலே

2. (விரு.) இலகு பரனுரமைத்த வனத்
திடை மேவியதோரிரு மரத்தின்
விலகு தருவின் கனியதனை
விழுங்கு பவத்தால் விபுலமதி
லலகை வினையே மிகவு மிகுத்
ததத்தின் சனத்தை யடர்ந்ததனுற்
கலக மிகுத்த வுலகதனைக்
கவிழ்த்தக் கடவுணினைத் தனனே

3. காசினியங் கெழிலாயுயர்
நோவையென்ற தபோதன
னோடனந்தன் மகா நயம் பெற
வேமொழிந்த பதங்களி னூடு

பாவிகள் சென்றெழுகா தத
னலிலிங்கினே பல
மாகவங்கொரு பேழை தந்ததி
லேயெண்மைந்தர் புகுந்துறை காலை

காருணியன் கிருபாகர
தேவனின் செயலே கடி
தாய் முழங்கிய வானவிசும்புகள்
சோனை தந்து பரம்பிய போது
கவலையின் மண்ணோர்கள் சொலுவார்

4. (விரு.) நோவையெனு மாதவப்புனித
னாருண்டளவாய் மானிடர்க்குத்
தேவன் மறையை யுரைத்தாலுந்

தீயோர் தவத்தின் மேவாதா
லாவனுடனோர் பேழைதனை
யமைத் தெண்பெயரும திற்புகுதப்
பூவிற் பரமன் சினமிகுத்துப்
பொங்கிப் பணித்தல் பொழிந்ததுவே

5. தேவபரஞ் சுடரே செப
ஞான சுந்தரனே திட
மாகவுன் றனினீதி யின்கன
தீர்வை வந்து விழுந்துலகூடு

யாவுமழிந்திடவே கன
மாருதஞ் செய்வே யிடி
யோமினின் சுடரோகரும் புய
லோபெலன்றரு கண்டிதமோடு

சீறியெழிந்ததுவோசிதை
வாக வந்ததுவோ திரி
யேகனுன் பறை மீறியும்பவ
மே புரிந்தவ காதை யகோர
மரிசரி துன்னீதி கொடிதே

6. (விரு.) ஐயா பரனே பரப்பொருளே
யடியார் புரிந்த வகந்தையினுற்
றய்யோ னுனது சின மிகுத்துத்
தொலையாதுரமாய்த் தொடர்ந்ததினுன்
மையோடிடியுமி னல் பெருக
மழையே பொழிய மருளானே
மெய்யா வுனது நெறிதழலின்
மிகுதி மிகுதி மிகுதியதே

7. தேறுதலின்படியே முனி
நோவையுந்திரமா யொர
ஞதியின்புக லோதியன்பு சொல்
போதகங்களை நன்கதுவாக

வேசியிகழ்ந்த போலாவினை
யால் விளைந்ததுவோ விறை
யோனை யஞ்சலியா திடும்புக
ளாய்நடந்து கொடுங் கொலையாடு

தீவினையின் கனமே தெய்வ
தூடனஞ் சொலியே திரு
வாதிரம்புலே குதருங்கவ
டேமிருந்து பரன்றருவேத
வறைகளை யெனுதபவமோ.

8. (விரு.) முன்னோனளித்த மறையதனை
முறையோடெமக்கு நயம்பெறவே
யந்நாளுரைத்த தீர்க்கனெனு
மருண்மாமுனி நோவையைப் பழித்தல்
சொன்னோம் பவத்தின் வழிதனிலே
துரிதாய் நடந்தோஞ் சோகுவினை
யின்றலைமைத்த விடர்களுக்கிங்
கிந்நாட்பலன் வந்தெய்தியதே

9. பாவலருங் கவிபாடிட
வோசை கொண்டினமே
மயலாக மங்கையர் சூழநின்றித
மாய் நடஞ்செயும் விந்தைவினோத
மேவலரஞ்சிடவே முடி
ராயர் பொன்றரவே மிகு
வாய்மை கொண்டடியார் பணிந்திட
யாவரும் புகழ்ந்திட நீடு

பாருலகங் குயர்வா யரி
யாசனந் தனிலே பரி
பாலனஞ் செயவே யெழுந்திடு
மேன்மைமங்கி யழிந்ததுமாயை
யொருபொருளி னேர்மையிதுவே

10. (விரு.) வாணரணியாய்த் தமிழ்ப்பாட
மாதரொலியாய் நடம்புரியப்
பாணரியைந்து பதம்படிக்கப்
பகைவர் பயந்து நடுநடுங்க
நாணமனைவி யின்சனங்க
ணயமேபுரிய நரபதிமார்
காணக்கொலு வீத்திருக்குகின்ற
கனமுமழியக் கடனுளதோ.

11. பாணியின் முங்கியுமே மனை
யாண் மடிந்தனளோ பரி
வான தந்தையர் தாயிறந்தனரோ
வினங்களருந கொலையோடு

சேரவழிந்தனரோ திரி
யேகனுன் செயலோ தினமே
நவம்புரிவோர்க ளெங்கனே
சேயரெங்கனே யெங்கனேநேயர்

பாசமிகுந்துறவே யிடு
சோரமங்கை யேதோபல
கால்விருந்துசெய் மாமனெங்கவர்
தேவியெங்கனே துஞ்சிடலான
ருறுதுயரம் மாவிதரிதே

12. (விரு.) வெள்ளத்தமிழ் ந்திமனையாளு
மிகநன்றிடுதாய் தந்தையரு
முள்ளத்துரிமைச் சினேகிதரு
முற்றிங்கடர்ந்த வினசனமுங்
கள்ளக்கலவிக் கனிமாருங்
காதன்மிகுத்த பாலகரு
மெள்ளத்தனையு மிரக்கமிலா
தெங்கனொழிந்திட் டிறந்தனரோ

13. ஆவி கலங்குதையோ தூய
ராருடன் சொலுவோ மெம
தாக மிங்குறவே விழுந்தழி
வாகவந்த பதங்கள் விடாது

பேழைதெரிந் தெரிவார்மன
மீதறைந்திடுவார் பிர
லாபமஞ்சிடவோடி நன்பொரு
டேடிநின்று புலம்பி யொகோகோ

நாயகி வந்திலளோ சிறு
சேயர் வந்திலரோ நவ
சேவகம் புரிவோரும் வந்துத

வாமலெங்கு பறந்தனரோடி
நிரையென வெண்ணாத தெணுவார்

14. (விரு.) நாவிலடங்காத் துயரிதனை
நாமாரிடத்தி லுரைத்திடுவோம்
பூவிலெம தாவியை விடுத்துப்
பொன்றத்தரணம் புகுந்ததுவோ
நோவைசமைத்த பேழைதனை
நோக்கினயனது பதைக்குதையோ
வாவலுடனிங் கருள்புரிவோ
ராருமிலையோ வென வழுவார்

15. ஆணுவம் நின்றதுவோ வினை
யாலழிந்தனமே நிலை
யாவுமிங்கிலையே யெனுஞ்சொலி
நாலரண்களி லுந்திடுவார்கள்

கோபுரமும் புகுவோர்மலை
மீதுசென் றெழுவார் கிரி
கூடவுஞ்சல மேவிமிஞ்சிய
போதமிழ்ந்தி நெடுந்துவிலான

ராதிபரன் செயலான் முனி
பேழை சென்றதெலா மழி
யாதுநின்றது பூம்கொண்டது
யாவுமுங்கி யழிந்த வகோர
நினைவிலெந்நாளும் வருமே.

16. (விரு.) பொல்லாப்பிடரால் விளைந்ததென்பார்
பொருப்பிலெழுந்து புகுந்தொளிப்பார்
வல்லாய்ச் சலமுமிகுத் ததனுள்
மருகிமருகி மடிந்தார்க
ணல்லோனருளாற் பேழையுற்ற
யாவுந்தவிர நானிலத்தி
லெல்லாவுயிருஞ் சிதைவான
திறையோனீதி யிவளவுமே.

---

## 19. கப்பற்றமிழ்

### சலப்பிரளைய முகிவு.

19. (விரு.) வான பரனீதி கொடிதாய் முனுலகோரை
மாரியதனுலழிய வாதையிடு நேரம்
ஞான முனி நோவையொடு பேழையினுளான
யாவுயிருமே கருணையாள னிணைவாகி
யீனமற வாயுஞவயுமே படரவீச
வேறு தகமோடி வடிவாய் வெளிகடோண
லானபொழு தேகனுற நீடு மடையாள
மாதி நவநூதன மெலாமறைகுவேனே.

எலல எலே லோ எலே லோ
எலல எலே லோ எல
எல எலல எல எலல
எல எலல எலல எலோ

1. பூவுலகூடு சரா சரசர
சீவனேடான தெல்லாம் பரி
பூரணன் கன நீதியின்படி
தீர்வை கொண்டழிவாகவுங் கண்டேன் எலல

2. நாற்பது நாளளள வாய்ப் பெரும் புனல்
மாப்பெலனேடடிக்கக் கருங்கிரி
யாவு முங்கிடவே விசும்பினின்
மேவியம்பு கடாவவுங் கண்டேன். எலல

3. பேழையுனேவையயும்·பினுமதி
லான வுயிர்க்களையுங் கன
பேறு தந்தருளாதி யந்தமி
லானிணைந்த விதங்களுநங் கண்டேன் எலல

4. ஊற்றுறு பூமியின் மேற் பராபரன்
காற்றை யடிக்க விட்டானதா
லூரின் மிஞ்சிய நிரமர்ந்தடி
யாழவன் புனல் சோரவுங் கண்டேன் எலல

5. ஆழத்தி னூற்றுகளுமகாயத்தின்
சூழத்துறு மதகுமடை

யுண்டு விண்டு பொழிந்து சிந்திய
வம்பணங்க ளமர்ந்ததுங் கண்டேன் எலல

6. பாடும் பரனடியார் பவம் பறந்
தோடும் பெருங்கதை போலதி
பான்மை யுற்றிடு நேமியப்புகள்
பூமி விட்டுத் திரும்பவுங் கண்டேன். எலல

7. ஏற்ற நுற்றை பதின்மேற் சலீலத்தி
னேற்ற மெலாங் குறைந்து மதி
யேழிலே பதினேழிலே மூனி
பேழையாரத்தில் வாரத்தைக் கண்டேன். எலல

8. தத்தி யெழும் புனல்கள் வளர்மதி
பத்து மட்டுங்குறை யத்தச
திங்களின் முதற் பொங்கரின் சிக
ரங்கள்காணும் விதங்களுங் கண்டேன் எலல

9. போக்குறு நாற்பது நாட் கடந்தபின்
காக்கையை நீக்கிவிட்டானது
பூக நீர் வற்றிப் போகு மந்தர
மேகியேகி வருவதுங் கண்டேன் எலல

10. கொஞ்சப் புனல் துவோவெனப்பினுங்
கொஞ்சிப் புருவை விட்டானங்கு
கொள்ளை வெள்ளங்களுள்ள தாலதி
னுள்ளங்காற் கிடமில்லதுங் கண்டேன். எலல

11. வேறெழுநாட் பொருத்து வெளிப்புறத்
தேறப் புரு வொன்றிட்டானது
விண்டணந் தனிலுந் தொலிந்திலை
கொண்டு கொண்டந்தி வந்ததுங் கண்டேன். எலல

12. நண்ணுமெழுதினம் போய்த்திரும்பவு
மின்னம் புரு விடவேயது
நன்றி கேடர்கள் சென்ற காதை
நடந்தொழிந்து பறந்ததுங் கண்டேன் எலல

13. ஆண்டறு நூற்ருென்றிலே முதன் மதி
யாணிய மொன்றதிலே மூனி

யாங்கு சோங்கதிற் றூங்கு தட்டதை
வாங்கிக் காண்க நீர் வாங்கவும் கண்டேன் எலல

14. வாய்ந்த கொடும் பகைஞரெரிந்துளங்
காய்ந்து கிடந்ததுபோ லிரு
மாதமீர்பதினேழு தேதியிற்
பூதலத்தின் வறத்தலைக் கண்டேன் எலல

15. வானவனோ வாவைப் புறப்பட்டு
வாவென்க மற்றோனும் அவன்
மாது சேயருஞ் சேயர்தேவியு
மோதையாய் வெளியே வரக்கண்டேன் எலல

16. ஆதிபரன்றயவான் மரக்கலத்
தான செந்தான தெல்லா மணி
யாகவேசு வடாக வேவிரை
வாயெழுந்த விநோதமுங் கண்டேன் எலல

---

## 20. வண்ணம்

### சலப்பிரளைய நிவிர்த்தி.

20. (விரு.) தேவனுரெரி நீதியாம் கடுத்
தீர்வையாலுறு மாரி தான்
சேரவடிவாகி மேதினி
காணவே திரியேகனு
நோவையோடுரை யோதிநீயுளரி
னாலிசேயர்க டேவிமார்
நோன்மைபாயமை வானபேழையு
ளேகவாழ் பல சீவனு
மேவியே வெளியே செல்வீரென
வேகமாக வநேரமே
மேன்மை நோவைய வாறதாடிபே
மேலுமே பெலிதானிட
ஆவலாய வனீடு பூசனை
யாதியான் முகர்ந்தேதம
தாசி கூறிவிலாணை யேதர
லான நீதிக ளோதுவாம்

2. தன தான தாந்தன தந்த் தன் தானன
3. தத்த தன தத்த தன

தத்த தன தான
தன தான தனன தனத் தனதன.

1. புவிசேரு மாந்தர்கள் கொண்ட பழியாலதி
சயமேவு மாண்டபரன் கடின நீதியி
னுக்கிர மிகுத்துலகி
லுற்ற பல மக்களுமம
னைத்தையு மழித்திட
நினைத்தவுடனே விண்

முகிலோடி நீண்டுபறந்து பொழிமாரிக
டிரளாகி யாங்குநிறைந்த வெள்ளமானது
மிக்கவுல கத்தையும
மிழ்த்தியதி னுற்றபல
வஸ்தையு முகித்தபிற
கற்புத சொரூபர்

பொறைநோவை தான்செய்தவங்க முறமேவிய
பொருள்யாவை மீண்டும் நினைந்தரிகள்வீசிட
விட்டிட மிகுத்தெழு
சலத்திரள்கள் வற்றிய
கணத்தி லுனைபெட்டியி
னடைத்த உயிர்யாது
மதியாக வுன்னியெழப் புகலவே

2. புலனீதிமான்களோ ரெண்பெயர்களோடடர்
திரள் சீவனூர்ந்தும் வனங்களளவாயடை
கப்பலதை விட்டுவெளி
யுக்குண்மர பொத்துவர
வப்பொழுது கத்தனரு
ளிட்டமுள நோவை

தயைபேறு மாண்டகையின் சமுகமாயொரு
பெலிமேடைதேர்ந்த வலங்கிருத நேரொடு
கட்டியத னிற்பிரிய
சுத்தமிரு கப்பறவை

யிற்சில நிறைத்தத்க
னப்பெலி கள்போடு

புடையாவி கூண்டெழுமின்பமுள வாசனை
தனையாதி நேர்ந்துமுகந்த பொழுதே தம
துத்தம மிருத்தமன
துக்குளுரை பற்றியினி
மக்களினி மித்தமுல
கைக்கெட விடாது
வளமான நன்மைமிகப் புரிவமே

3. சவிசேரு மாண்டையர் சிந்தனைகளானது
சிறுபோது தோன்றியருந் துரிதமாமென
வத்தனுரை பற்றிமுனி
யற்றுபடி யப்புறம
னைத்தையு மழிப்பது
தவிர்த்திடு தலெசெய்

துலகான தோங்கிவளர்ந்து வருநாள்வரை
பகல்ராவுமோய்ந்து விழுந்தழிவுறு துவி
ரைப்புகள றுப்புகள்
குளிர்க்களு மனற்களும்
வெயிற்பத மழைப்பத
மிருக்கு மமராது

சதிரான வான்புகழென்று முனிநோவையின்
மகரோடு சேர்ந்தவர் தங்களையுமாசிய
ளித்துமல் கிடப்பெருகி
யிப்புவி நிரப்புமும
தச்சமெவை கட்கு
மிருக்கு மதிராக
எதுநாளுமும் மிடையிற் பணியுமே.

4. தரைமீது சேர்ந்து நடந்துலவு சீவனு
மலைநீரி னீந்திய வண்ட சமு நேரிய
வெக்ககன முற்ற பற
வைக்குல முதற் பலது
மிச்சையொடு நித்தியம்
ருசித்து வருவீர்கள்.

கதியான மாங்கிட துண்டையுயிராகிய
கறையோரு மார்ந்து பவங்கள் புரியீர் படு
மக்களுடார த்தமு
முயிர்க்கள் பழியைக் கருதி
மக்கண் மிருகத் துடக
ரத்தினிலு நீதி

தறுகாது மாந்தர் கடங்களுயிர் சோரவிடு
பழியாவும் வாங்கிநெருங்கு முறவாகிய
நற்பிரியர் தற்கரம
தற்குளு நரர்க்களி
னுயிர்ப்பகை யடர்ப்பழி
யெடுத்தழி யவேசெய்
தெதிர்வோமி துண்மையெனச் சுருதியான்

5. எவனுலேதோன றிகள் சிந்தியுகுமோவவ
னுடசோரி மாந்தர்கள் சிந்தியுகவேபடு
மச்சய னுருப்படி
நரர்களை வகுத்தனனு
மிற்குல மிகப்பெருகி
வத்தனை கொள்வீர்க

ளிதுநாளி லோங்கிய பந்துகளிஞேடையு
மரிதான சோங்கிலடைந்த திரளையுடையு
மிக்கண முதற்புவியி
னிற்குநரர் வித்துமிரு
கப்பறவை பற்பல
வுயிர்க்க ளொடுநாமு

மினிலோக மாங்கிடபந்தி யழிவாகவு
நிலையாத காண்டம்வரும்படி செயோமிவை
யுத்தபிரி திக்கினைக
டத்தமென விற்குறிகள்
வைத்தனன் முகிற்கணிடை
பச்சை நிறமாக
விதியான செம்மையி லக்கணமதே.

6. எனவோதி யாண்டகை சென்றனர் பிஞேவையு
மவனேய மூண்டெழுசந்ததி களானதும்

வெற்றிதரு கத்தனுரை
யைக்கருதி வட்டபுட
லிக்குளுயர் வுற்றுவரு
மற்ற வொருநாளி

ஞெவையாடு தேன்சுவ ரஞ்சிதமனோகர
வனமீது தூங்கிய முந்திரிகை மாகனி
யுற்றரச மெத்தமயல்
பற்றிநிறை யப்பருகி
முற்று நினைவற்று
முடலிற் கலைகண் மாறி

யிடையூடுசேர்ந்து கிடந்தபொழு தேயவன்
வழிகாமுகாண் டொரிரண்டிளவ லோடையு
மத்தனுட லச்சையி
னிகழ்ச்சியை வழுத்தவவர்
வஸ்திர மெடுத்தவனை
யுத்த படிமூட
வெறிதீரநன் மனதிற் கடிதலாய்

7. பவமீறு நிம்பனெனுங் கொடியகாமுட
மகர்சாப மோங்கியுறும் பழிகள்சூழும
சத்திய மியற்றுபவ
னித்திரையி லெட்டினர்க
ளுக்கடிமை யிட்டவடி
மைக் கடியனுவ

னுயர்சேமு தோன்றலினெண் குணசிராமய
னரரோரு மாஞ்சுமெழுந்து தொழுமாதிப
னக்கிரம செயற்களை
யியற்றுகன னெப்பொழுது
நற்செமு பணிச்செய
லியற்று பவனீதி

பரிவாக வாழ்ந்துவளம் பெறயபேதையு
மெனையாளு மாண்டபரன் கிருபையாயவனைக்
கனனடுத் துழையர்
செப்பமடி யிற்பல
பணித்தொழி லியற்றுவ

னெனப்புனித நோவை
பதுநூறு நண்ணமரித் தானரோ.

8. படிமீது யாங்கு நிறைந்த வொருபாடையு
மொருவாய்மை பூண்டிருந்த பொழுதாடவர்
மெத்தவொரு மித்தவர்கள்
புட்கரமொடெட் டுசிக
ரிக்கண கரத்தையும
மைக்க நினைவாகி

மலையாமல் வாழ்ந்துபெரும் புவியிலே சித
றவொணுது வீம்புமிகுந்து மொருகோபுரம்
நட்பொடு செயப்பிசி
னெடுத்தடு பெலத்தக
லறுத்து நகரத்தையு
முடிக்கு மதிகாலை

பரதேவனுங் கணெழுந்து நரரேபுரி
திடமான பாங்கதணிந்த நகரானதும்
நெட்டுக கனத்தளவு
பற்றுசிக ரித்திறம
ழித்தவர் மனத்தினை
யலைத்து மறுபாடை
பணிமீள வண்ணல் கதிக்கேகினுர்

---

## 21. வண்ணம்

### பாபேற் கோபுரத்தின்பேரிலும் ஆபிரகாமின்பேரிலும்.

21. (விரு.) பாபேல் கோபுரங்கட்டி முடிந்ததும்
பாடையும் பலதாகப் பிரிந்தது
மாபிராமைச் சயம்பு தெரிந்தது
மாவலாயவனுக் குரைதந்ததுஞ்
சார்பதாமின பந்தையெலா மவன்
ருனிகழ்ந்துகணு னகர் வந்ததுந்
தீவிரங் கொடவன விடங்களிற்
சென்றிருந்த விதங்களுஞ் செப்புவாம்.

தன தானன தானன தானன
தந் தந் தந் தந் தன த்த தனன

2\. தனன தந்த தான
தனன தனந்த தான
தனன தனன தனன தனன தனன
தனன தனன தன தன தன தான
தன தான தனன தன தானன.

1\. உலகானதி லாதியிலோர் மொழி
கொண்டுஞ் சங்கம் பெருக்க முளதா
யிசைவோடொன்று பாடைதனியா யெங்கு மோதும்
விதமாயிருந்த நாளினரரோ வெழுந்து கீழு
லகமேகியுமே சினையார் பதியானதையே
கருதிய தனடுவு குடியுறலான

ரவர் கூடியுமே யொருவாய்மைகள்
விண்டுஞ் செங்கன்று ணித்த தனையே
நலகோடங்கமோடு சுடுவோமென்று பேசி
யினி நாமலைந்து பூமியதிலே பறந்து சூழவோர்
சிதருதுயர் வாயிட நாமொரு மாநகர்வா
னளவு முயரு மொருவலுவுளதான

வுரமாகிய கோபுர மானதையுந்
தந்தும் பின்பெமக்குள் வளமாய்
நல பேர் கொண்டு வாழ்வதிதமா மெந்த நாளு
மெனவே தொடர்ந்து நீடு சுடு நேருறுங்கலோடு
பிசினீறெனவே சரிபாடியுமே மனுவோர்
புரி புரி சிகரி தனையும் விழி தோண
வமலோனு முலகில் வரலாகினர்.

2\. ஒரு பாடைய தானதினுலவர்
தந்தங்கும் புந்திரட்க ளெனவா
மிதிலே தங்களாண்மை மிகவே மிஞ்சியாசை
யுடனே துடங்கினர்கள வரோ நினைந்தயாது
நிறைவேறிடுமோர் தடையே தெனவே யகமா
யொழுகிவருமவர் கடமை யினி நாமு

மறுபேர் சொலுபாடையை வேறொரு
வன்பின் கண்டும் பிடிக்க வரிதே

பணுவோமிந்த நாளிலெனவே வந்து சோதி
யவர் கூறிடுஞ் சொல் வேறுபடவே புரிந்த காலை
வெகு கோடிகள் பாடைகளே பிரிவாகினபோ
தவர்கள் புவிமுழுது மலையவுமே செய்

துயர் வானவனூர் மறுபாடைகண்
மிஞ்சும் பங்கும் படுத்தி யிடுபோ
திடனே விந்தையாக நகர் தானந்தமோடு
வளமே சிறந்ததாயமையவுமே முடிந்து மோய
வவர் பாடைகண் மாறிடவே பரனூர் சிதர்வா
யிடவவர்களை விடுகதையதி னாலை
யது பாபனகரமென வானதே.

3. நல மாதவனு பிரகாமுனி
யன்பன் றென்பின் சரித்திரமுமே
தெளிவாய் முந்தமோசை பரனூர் தந்த நீதி
நெறியால் வரைந்தயாவும் விரிவாய் விளம்பலான
னதுவேதெனி னேவையின் மேலுறு மோர்தசமா
கின தலைமுறைதனில் வரும பிராமி

னயலுன வனுமம தானது
துங்கம் பொங்குந் தவத்தையுடையா
யணி வோனின் பதேறஂ கெனவே தொந்தமாக
வுயர் பேர் வழங்கு நீதனிவனு லெழுந்த பேர்க
ளபிராமுடனு கொருமாரனு மூவர்களா
மிவர்களியல்போடு பின் மணமது சூட

நயனுபிர காமுட தேவியு
மங்கந் தங்கங் கதித்த நிறமா
யொளிர் மானின்ப மானவபி தானங்களோ
நலறிவே நிறைந்த சாரளெனவே வியம்புவார்க
ளவளோ மலடாய் வெகு நாளளவாய் மகவே
யிலது செப தவசு மிகுதியதாக
விமிழோடு தொறுவி வரு நாளிலே.

4. நதி சூழடர் கானனு மாநக
ரங்குஞ் சென்றுஞ் சவுக்கியமுடனே
குடியாய் நின்று காலம் விடுவோமென்று மாரன்
மகன் லோதையுந் தனேடையபிரா மடந்தை சாரள்

பலபேர் தமையே கொடுவூரெனு காறெயர்தே
யமதை விடுகனனு நகர்தனை நாடி

வரவேகரனூர் முதமேவிட
வங்குந் தங்கும்படிக்கிடமதாய்
வெகு நாளந்த வூரின் மலையாதணடி வாழ்க
நிலையாயிருந்து தேறலிஂ கவனுமடிந்த காலை
முதலோன பிராமுடனே சொலுவாரினி நீ
யுனது பதியுன் மனையின் சனம்யாவு

நலியாத கல்வாயுடனேகியு
மங்குன் கண் கண்டிடச் செய்நகரே
வருவாய் நண்பினோடுனையு நாமிஞ்சு மாசி
யதனாலணிந்து மேலும் வலுவாய் மிகுந்த சாதி
யெனவே பணுவோ முனினும மதேவலு
மேன்மைகள துள பெரிய வபிதான மாக
விகல் வாய்மை புரிவமென வோதவே

5. கலையாதிபனேதினநேர் மொழி
நெஞ்சங் கொண்டுங் கணத்தின் முனிதான்
மனையாளென்ற சாராளுடனே தம்பியாரன்
மகன் லோதை யுந்தநேடு பொருள் யாவையுங்கொ
டேகி, வலுகானனுமா நகர் மீதிடையேவ ரவே
கடவுடயவொ டெதிர் தெரிசனையாகி

வளர்வா யுயர்தேயம தாமிதை
யுன்றன்பந் தின்பகுட்சி யெனவே
யுறவோர்பங்க தாயருளுவோ மென்கவாடி
ரனுமேபணிந்து பாதமலரே வணங்கலான
னிதன்மே லதனூடிடர் மேவினதாலவனே
வெகிபதெனு மரசில்வர வவன்மாது

கதிர்சோதி யதாயெழு மாவுரு
வம்பொன்றன் செஞ்சிறத்தை யுடையாண்
மொழியோ கொஞ்சுகோகிலமுமே சஞ்சுதோகை
யிதனுலுனின் கனைசமிகவாய மிழ்ந்திடினே
ரெனையேகொலு வாரதனாலுனை நீயிளையா
ளெனவிடை பகரெனுமுனி சொலும் வாய்மை
கமைமாதவண மொழியலாகினுள்.

6. கடதாய்வலு கானகருடெழு
பஞ்சந் துன்பந்தவிர்க்க வெகிமா
நகர்தான் வந்தவேலை பரவோனென்றராச
னிடமாய்மிருந்த பேர்களிவண்மேன் மகிழ்ந்துபேர
வவனுமடவாண் மயலேமிகவா யெழின்மா
ளிகையிலவளேவர விடைசெய்து மேலு

மவளாசையி னுன்முனி மேலுயர்
துங்கன்றம்ப ம்பெலத்த படியான்
மிகவேநன் று நீடநீதியே நன்கதாகி
நிலையாயுயர்ந்து சூழுசனசே கரங்களானன்
மனனுணவன் வீடதுளானவர் மேன்மிகுவா
தைகளை வளரவயன்வர விடுபோது

கதையேதிது பாதகமாமென
நெஞ்சம் பொங்குந் திடுக்கமதனு
லவனுவஞ்சி வாடியிளையா டங்கையாகு
மெனநீபகர்ந்ததே திதுடனே யெழுந்துன்மாது
தனையேகொடு போவபிராமுனி நீயெனவே
பெருகு வெகுமதிகள் செயமுதயோகர்
கனமேடை தொறுவுமிட மேனுவின்

7. வலதேயம தாகிய கானக
ரெங்கும் பொங்குந் திரட்புருவைமா
டுகள்சேர்கு ம்பினுலுமபிரா மும்பினலோதி
விருபேரொருங்கி வாழ்கவிடமா யிருந்திடாம
லவராடுகண் மேய்விடுவோர் தமுளேகுபாரல்
பொருதிநிதமும் வருதுயரதனுலும்

வளமேசெறியா பிரகாமுனி
யென்பன்றன் ற ம்பியுக்குள் வரும்லோ
தினிநேடின்ப வாய்மைசொலு வானிந்தவூரி
லினிமேலிடங் கொளாதெனையு நீகடந்துபோவை
வடபாரிசநீ செலினுனிடமா மிடநீசெலுகின்
வலபுறமெழு வனியானு

மலையாதெழு நாமிருபேரொரு
கொம்பின்ஞெருங் குங்குலத்தை யுடையோர்
பொதுவோர் தங்களாலே நிதமேசண்டையாகி

மறலேவளர்ந்து போகுததனுன் மொழிந்ததாகு
மெனவேயுரை கூறியுநேர் விதமாயொருநா
ளதனிலிரு நயவர்பிரியவு மானர்
சமனயோர் தனதிநிலைமை நாடியே.

8. மனையாளோடு சேகரமாகிய
பண்டங் கொண்டும்படிக்கு ஞயர் யோர்
தனினேரண்டையான சமனிருந்து பூமி
பரனூர் வனங்கள் போலுமெழிலே சிறந்த சோது
கோமருதனின் மேவினன் லோதபிராமுனிகான்
முடியவுலவி நடுகுடி யுறலான

புறகே கொமரு சொத மீளியை
வென்றும் பெண்டும் பிடித்த சிறையே
கொடு போகின்ற மேவலர்களோ தந்திரேடு
திடமாய் விளைந்து லோது பொருளே கவர்ந்துபோக
விது காதையையே முனி கேள்வியதாயுடனே
படையிலணுகிவலு சமர் பொருதாடி

மடிவாயிகல்ராணி யானது
கண்டந் துண்டம் படச் செய்தவரே
சிறையே கொண்டு போனவுயிரே தண்டிமீள
வருபோதனந்தனுசரியுமா யிருந்து சாலெ
மினில் ராசனுமாகிய மேல்கிச தேகியலா
சிடைகளருள முனி பொருள் பல தூடு
தச கூறீரை யுதவியேகினுன்.

---

## 22. வண்ணம்

**ஆபிரகாம் பாரபரனுலடைந்த**
**வர்க்குத்தத்தங்களின்பேரிலே.**

22. விரு. நவமாகவே சருவீசுர
னபிராமுடனுவல் வாய்மையு
நவியா திவனருளாளனே
டுரையாடின பல கேள்வியுஞ்
சிவமேபுரி சாராயியின்
சமுகத்திடை பணியேவல் செய்

சேடிப் பெண்ணோராகாரிடத்
திசுமா வேலுற் பவமானது
முவமான மொன்றனு கான்மறு
படி யாபிரனுடனோதியே
யுயர்வாகிய சுன்னத் தெனு
நெறி முத்திரை மறைதந்ததுந்
தவமாடிய வீசாக்குட
சனிப்பைத் திருவுள மிட்டதுந்
தவறுதுயர் திரியேகனி
னருளாலினி விபரிப்பதே

2. தனன தனந்தன தனன தனந் தனனு
தனனு தனனு தனனு தன
3. தத்ததன தான தன
தந்த தன தான
தனன தன தனன தன தானனு

1. அதிக நயந்தரு கிருபை மிகுங்கடலோ
னபிராமெனு மாதவனோடுரை
யருளிய கந்தனிலனுவு மருண்டிடு காய்
தவனே யுனின் மாபலனுமின
முற்றவுனின் வேதிகையெனப் புகலவே முனிவர்
புத்திரனிலாதவெனு ளெந்த நலமான

தமசினுயர்ந் தெழுமெலியெச ரென்றவனோ
வெனின் மாமனையானதை யாள்பவ
னுறையுள் பிறந்திடுமகவு சுதந்தரவா
ளியதாயிடு வான மலாவெனி
லிற்றைவரை நீர் தயவுவைத்து வளர்சேயருட
வித்தைமனதே மகிழநுந்த விலையேயி

தருளவரும் பொருளவன் முனறைந்திடுவா
ருனின்மாதருள் பாலகனுகுவ
னுயரநிறைந்திடு முடுவை யணர்ந்தவைபா
ரவை நீதவறு தெனுவாயென
வித்தகமையாக வுனின்வித்ததுவுமே பெருகு
முத்தமொழி யாகுமென வெண்குணனுமோத
வவனதுல னெறியை விசுவாசமாய்

2. அடிகளனைறந்திடு நெறியை யுணர்ந்ததையே
யவனீதியதா யெணலாகினர்
பினையுமிதின் பலநகர்கள் சுதந்தரமா
யடைவா யிதனுலுனை நாமுயர்
கற்றெயர் கடேய மதை விட்டி விடமே யுற்றவு
மற்புதந னேயமொடு கொண்டுவரலான

மெனவுமயன் சொலவதையு மறிந்திடுவா
றதுவேதென வோதிய போதொரு
திரிவருடம் படுபசுவு மயங்கள் கபோ
தமுநேரது சேயையுமே பெலி
திட்டமுடனே முனைபடைப்பை யெனவோதவவ
னட்சணம வாறவைக டுண்டதுகளாக

வமைவுபுரிந்திடு தருணமுறஞ்சுவயா
னமுமேபெலி மீதினிலே வர
விரைவினெழுந் தடர்பறவை துறந்ததன்மே
லிருளோ திகிலோ பயமோ கன
நித்திரையதா யருணனஸ்தமன வேளைதனின்
வித்தனியர் தேயம்சை தொண்டடிமையாகி
யயன்மரபு பணிவிடைக ளாடுவார்

3. சதுர்சதமுஞ் செலுவருட மிகுந்திடர்
வாதைகளே படுவாரெனவே யறி
யுனது சனங்களை யடிமைபுரிந்திடுபா
தகரா மரபோர்களை யேவலு
வுக்கிரமோடேயு நடுவிட்ட பிரகேயவர்தி
ரட்சியுடனே பொருள்கள் கொண்டுவருவார்க

ளெமொரியரின்பவ மிதுவரையுங் கொடிதாய்
நிறைவாகலையே சதுராவது
தலைமுறை யென்பவரி டம்வரும்படியே
செயுவோமெனவே பரனுர்சொலி
யஸ்தமனமா மிருளிலக்கினி சுவாலைபுகை
மெத்தமிகுசூளையுறு துண்டநடமீது

தழல்கள்வளர்ந் தெழுமுனிவ னுடன்பரனுர்
பகர்வாரெகி மாநகராறுட
னயிபிர தென்றுயர் பெருநதியந்தரமே

கெனியார் கெனிசிகத மோனிய
ரெத்தியர்கள் பேரிசியரப் பவியரே மோரியர்
கிர்கசியரே பூசியர் துங்க கனனீயர்
சவியுலகுமுனின் மகர்கள்வீதமே.

4. தவமுனிதன் சுரிகுழலியி னண்டையிலே
பணியேவலு மேபுரிசேடிக
ளதிலொருபெண் கனவழகெழு சுந்தரியா
மெகிமாநக ராரிளையாமவ
ளூத்தமி சாரயியுட கெற்பமடை வானதினி
னற்கணவனோடு சொலியந்த மடமானை

யணையவருந் திடமனது மகிழ்ந்தபிரா
மவளோடயுமேபிணைவாகிட
வவனிடு சங்கமம தனுண்மடந்தையுமே
தனையால் வயிறே பெரிதாகிய
கெற்ப நிறைவானவுடன் விற்பனின் மாதுதனை
யற்பமெனவே கருது கொஞ்சநினைவான

டவறுபுரிந்திடு மகரைவெகுண்டு சராண்
மண்ணோடிது நீதியதோபர
னடுவருமென்றிடவ வனுமியம்பிடுவா
ளவளோவுனி னோர்கரமானதி
னிற்கிறளதாலுனது திட்டிநலமே செயெனை
வப்படியமாதையவ டெண்டினை செய்போது
தலைவிதனை யகல வெளியோடினாள்.

5. கதிதருமம் பரனருள் சுரனங்கெதிரே
வரலாயகரே யுனிஞயகி
யிடமது சென்றவள் கயினிலடங்கிடுவா
யுனையேமறவோ ர்தனுலுனின்
வித்தைமிகவேபெருக வத்தனை செய்வோமிகுதி
ரட்சியென நீடுதொகைகண்டு சொலொனது

பெறுமுன்மகன் பெயரிசுமவெ லென்றிடுவா
டவனீர்கரமான துயாவரி
னெதிரென நின்றிடுமவர் கரமுஞ்சரியா
மிவனோ நடவோ ரெதிரேகுடி

யிட்டு வளர்வாகி மிகு துட்டனெனவே திரிவ
னுத்த மொழியாகுமெனவும் பர்சொல நீடு

ககன நெடுங்கிண றுயிருளரின் கிணறு
மவரோ வெனின்மேல் விழியாகினர்
கணிசமிதென்ற கர்மனையின் வரும்பிறகோர்
பொழுதே மகிழாயொரு சேயவள்
பெற்று சுமவேலென் மிகப்பரிவினோடு சொல
வப்பொழுத வாபிரனு மெண்பதுடனுறு
விவர வயதருமைபெற மேவினன்.

6. கனதொனூறென்பது வயதுறவின் பதியா
னபிராமகிழ் கூறவுமே யடர்
தெரிசனை தந்து நனெறிகள் விளம்பியுமே
சருவாதிப காரணனு மெனின்
மிக்க தயவான சமுகத்தின் முனையே யொழுகி
யுத்தமனியாகவு நடந்து வரலாவை

யுனினோடுடன் பிடிகையையு மியன்றிடுவோ
முனையே மிகவே மிகவே பெரு
கிடவர முந்தர மிகுமரபின் றலையாய்
வளர்வாய பிராமெனவே பெயர்
சொற்றிட வொணுதினியு நற்பபிரகாமென
நிலைப்படுவதாக வுயர் சந்ததியின் மீது
கலையுணரிங்கித வரசர் பிறந்திடுவார்

வலுவாகிய சாதிகளாயுனை
மிகமிகவும் பலுகிட நயமுஞ் செய நீ
பரதேசிய தாய் நிலமாற்ன
விப்பெரிய தேயமிதை வித்துனது சேயர்களி
னித்திய பலனீட வளரும் பளமேயாக
வெகுமதி செய்தவர் கடவுளாகுவோம்

7. துதிதருமென்றிரு மொழிகளிலுந் திடுவீ
ருனினோடினிமேல் வருவோர்களு
மகரென நின்றவர் சகலர்களின் குறிமே
தையுமே யியல்போடுருவானபி
னட்டதின நீடிய சுத்தயர்தலே செயிது
நித்திய நெறியர்கு முனதங்கிட மெலாகு

முனின் மனையின் சுதர்பணமது கொண்டவர்
கூடவுமே பலபேர்களுமே யவர்
தமதுட நன்சதையது துவசஞ் செயுவா
யிது நீடுழிகாலமு மாகிய
கட்டளைய தாமிதையும் விட்டு விடுவோர் சனம
றுத்து முறிவாகி யழிவுண்டவர்கள் போவர்.

துணைவியெனுஞ் சரயுட பெயரென்பதையே
யினிமேலையு நீ சராளென
நவிலவள் பின் பொருசுதனை நலம் பெறுவா
ளவளான் மரபானது மேவளர்
வுற்றரசராரு மவள்வித்தில் வருவார்களவ
ளுக்கு மிகவாசிடை கடந்தருளலானம்
விவகமெனவிறை மொழிய முனியுமே

8. தொணூறயனம் படுகிழவி பெறும் பயனே
வொருநூறுறலாகிய நானினி
மகவினையுந் தருகதைகளி தெங்குளதோ
வெனவே மனமீதினிலே நினை
வுற்றுமுகமே கவிழ் மெத்தநகையாகியுய
ரத்தனையுமே பணிவினெந்தன் மகனென

விசும வெலுன் சமுக மதனிலன்புறவே
யுயிராகவுமே தயவாயிரு
மெனவும் வணங்கிட வமலன யந்தருள்வா
ருனின் மாதவள் சாரளுமே யொரு
புத்திரனையே பெருவ ணற்பெய ரிசாகனென
விட்டழைதி நாம வனுளென்று முரவே செய்.

தொடர்தனை யென்றிடுமிசும வெலென பனுமே
மிகவே மிகவே பெரிதாகுவ
னதிபனிரண்டுயர் பிரபுகளும் பெறுவான்
வளர்வாகிய சாதிகளாகுவ
னிட்ட நிலையாகு மெனவச்சயனு மோதியெழு
நற்புனிதனுடவர் கடங்களனை வோரை
விருத செதனம தூறவு மாடினன்.